தென்மொழி

இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.

சுவடி 1. ஓலை 5.

தி. பி. 1994

ஆனித்திங்கள்.

(1963-சூன்)

சிறப்பாசிரியர்

புலவ, பண்டித

ஞா. தேவநேயப் பாவாணர்

பொறுப்பாசிரியர்

பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்

ம. இலெ. தங்கப்பா

மு. சாத்தையா

செம்பியன்

உரிமை, வெளியீடு

தாமரை

உலக முதல்வி

அச்சகம்

மித்திரா அச்சகம்

திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
'துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இந்திய நாட்டிற்கு ஒரு பொதுமொழி தேவையா?

ஒரு நாட்டில் மொழிபற்றிய பூசல்கள் அடிக்கடி எழுமானல் அந்நாட்டின் கண் பல மொழிகள் வழங்கும் என்பதும், அவற்றுள்ளும் ஒரு சில மொழிகள் சிறப்பும் பரப்பும் பொருந்தியிருக்கும் என்பதும் வெளிப்படை. குடியரசு நாடாகிய நம் இந்திய நாட்டுள் கட்சிப் பூசல்கள் எவ்வாறு அடிக்கடி நிகழ்கின்றனவோ, அவ்வாறே மொழிப் பூசல்களும் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இப்பூசல்கள் அடிக்கடி நிகழா வண்ணம், ஒரு பொது மொழியாண்மை இந்நாட்டிற்குத் தேவையென்பதும் அது இந்தியாக விருக்க வேண்டும் என்பதும் ஆட்சியாளர் கருத்து. அதுவன்றி ஒரு பொது மொழியாண்மை இங்கு ஏற்படுதல் சாலாது என்பதும் அவ்வாறு வலிந்து ஏற்படுத்தப் பெறின் மக்களுள் கசப்புணர்வு வளர்ந்து கொண்டே போகுமென்பதும், அக்கசப்புணர்வு இந்நாட்டின் கண் எவ்விடத்தும் எக்காலத்தும் எம்மக்கள் தொகுதியிலும் ஒரு பெரும் பிரிவினைப் போராகத் தோன்றி வலுக்கலாம் என்பதும் ஒருசாரார் கருத்து. இவ்விரண்டு கொள்கைகளையும் ஈண்டு ஆயலாம்.

மக்களை ஒன்றாக இணைத்து ஒற்றுமை யுணர்வை வேரூன்றச் செய்ய மொழிபோல் வல்லமை படைத்தது எதுவுமில்லை. இந்த மொழியுணர்வே இனவுணர்வாகப் பின்னர் தழைக்கவல்லது. மொழி, இனவுணர்வற்ற மக்கள் கூட்டம் ஒன்று இருக்குமாயின் அம் மக்கள் கூட்டம் நாகரிகமெய்தாக் காட்டுமிராண்டிக் கூட்ட மாகவோ நாடோடிக் கூட்டமாகவோதான் இருத்தல் வேண்டும். இனி மொழி, இனம், நாடு இவற்றைப் பெரிதெனக் கருதாது உலக மக்கள் எல்லாரும் ஒரே இனம் என்று கருதுவது நாகரிக மான, பண்பட்ட செயல் ஆகாதோ வென்னின், அவ்வாறு மக்கள் முன்னேறி உளத்தாலும் அறிவாலும் பண்பாடு எய்து தற்கும் அம் மொழி, இன, நாடு பற்றிய உணர்வே பெரிதும் வேண்டப் படுவதாகும் என்க. என்னை? தனிப்பட்ட வகையில் பண்பாடு எய்தாத ஒருவன் யாங்ஙன் பலரும் கூடி யொழுகுங் கால் பண்பாடு தோன்றவும் உணர்வு ஒன்று படவும் நடந்து விடுதல் கூடும்? வேற்றுமை யொழிந்த மொழி, இன, நாட்டு உணர்வு வளர்ச்சியே உலக அரசியலைச் சிறப்புற அமைக்க உதவும். இதுபற்றி விரிவாகப் பிறிதொரு தலைப்பின் கண் பேசுவோம்

ஒரு நாட்டின் அரசியல் ஆட்சி அமைப்பு நன்கு நடைபெற வேண்டுமாயின் ஒரு பொது மொழி தேவை என்று, நம் இந்திய அரசியலார் கருதுவதும், மொழியுணர்வாலேயே மக்களை ஒன்று படுத்தவியலும் என்ற அடிப்படையில்தான் என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும். ஆனால் இத்தகைய பொதுமொழி யுணர்வு பல இனங்கள் சேர்ந்த ஒரு குடியரசு நாட்டிற்கு எக் காலத்தும் ஏற்புடையதாகாது. அவ்வாறு வலிந்து அவ்வுணர்வு புகுத்தப் பெறுமானால் அச்செயல், சுட்ட மட்கலங்களை ஒன்றாக இணைக்க முற்படுவது போன்ற அறியாமைச் செயலேயாகும்.

மக்கள், பண்பாட்டாலும் இனத்தாலும் வரலாற்றாலும் அடிப்படையிலேயே பற்பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கும் நம் இந்திய நாட்டின் குடியரசுக் கொள்கைக்கு இப் பொதுமொழி யாட்சி மாறுபட்ட தொன்றாகும். அவ்வாறு இப் பொதுமொழி யாட்சிக் கொள்கை வலுப்படுமானால் இந்நாட்டில் வழங்கும் பிற மொழிகள் தம்தம் நிலைகளினின்றும் இழிந்து அழிந்துபட வேண்டியே இருக்கும்.

இந்திய ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் வடநாட்டார், எவ்வாற்றானும் தென்னக மக்கட்கு ஒத்து வராத இந்தி மொழி யைப் பொதுமொழியாக்குதல் எக்காலத்தும் அவர்தம் ஆட்சியே வலிவு பெற்றிருக்க வேண்டும் என்பதையே மறைமுகமாகக் காட்டுவது ஆகும்.

குடியரசு நாட்டில் ஒரே கட்சிதான் இயங்கவேண்டும் என்று கூறுவது எப்படிப் பொருளற்றதோ அப்படியே ஒரு பொது மொழியின் கீழ்தான் இவ்வரசு இயங்க வேண்டும் என்பதும் பொருளற்றதாகும். இச் செய்கை நாளடைவில் குடியரசுக் கொள்கையைச் சிறிது சிறிதாக வீழ்த்தி வல்லரசாண்மைக்கு வழிகோலுவதாகும் என்று முப்புடையும் கூறுவோம். வலியது சிறத்தல் என்ற கூர்தலறக் கொள்கை அடிப்படையை உடையனவே ஒரு நாட்டின் அரசும் ஆணை முறைகளும்; உடல் வன்மை போன்றதே ஆளுகை வன்மையும். இந்தி வலிவுற வலிவுறப் பிறமொழிகள் காலப்போக்கில் வலிவிழப்பது கல்மேல் எழுதிய எழுத்தாகும். 'இக் காலவெள்ளத்தில் தமிழ் அழிவுண்டு போகாமல் நாங்கள் காப்போம்' என்று பேராயக்கட்சித் தலைவர்களும் தமிழ் நாட்டு அமைச்சர்களும் கரைவது, நுனிக் கிளையில் அமர்ந்து அடிக்கிளையை வெட்டிக் கொண்டிருப்பான் ஒருவன் மரத்தடியில் நிற்கும் எவர் தலை மீதும் கிளை விழாமல் காப்பேன் என்பதைப் போன்றதாகும். தனிப்பட்ட ஒருவரின் கட்டுக் காவலுக்குள் தமிழ் உயிர்வாழ்ந்துவிடல் இயலாது. அரசியல் ஆணை முறைகளிலும், கல்வி அலுவல் துறைகளிலும் இந்தி வலுப்பெற்று மற்ற மொழிகளின் ஆட்சியைக் குறைக்கப்போவது எங்ஙன் அவற்றின் வளர்ச்சிக்குத் துணை கோலுவதாகும்?

இனி இவற்றை யெல்லாம் விடுத்து இந்தியஆட்சி யியக்கத்திற்கு ஒரு பொதுமொழி எவ்வாற்றானும் தேவையே என்று முரண்டு பேசுவார் உளராகலின், அவ்வாறு பேசுவார்க்கு ஒன்று கூறுவோம். தன்னளவில் எவ்வகைச் சிறப்பும் நிறைவும் இன்றி அறிவியல் துறையில் ஒரு சிறு தொலைவுதானும் நடைபோடாத இந்தியெனும் நாடோடி மொழி எங்ஙன் பொது மொழியாதற்குத் தகுதியுடையது என்பதை அத்தகையார் எண்ணிப்பார்க்க வேண்டும். நம் இந்திய மொழிகளில் என்று ஒரு மொழி விரைவில் அறிவியல் வளர்ச்சியும் வாழ்வியல் செப்பமும் பொருந்திச் செம்மையுறுகின்றதோ அதுவரை, நமக்கு எளிதில் கைவந்ததும், அறிவியல் பரப்புடையதும், உலகெங்கணும் பேசப்படுவதும் ஆகிய ஆங்கிலமே ஆட்சிமொழியாக விருப்பதால் இந்நாட்டிற்கு வரும் கேடு என்ன? 'அந்நிலை வருமாறு இப்பொழுதிருந்தே ஒரு மொழியை அங்ஙன் எத்துறைக்கும் தகுதியுடையதாகச் செய்வதே இப்பொழுது இந்தியைப் புகுத்துவதன் நோக்கம்' என்று கூறப்படுமாயின், அது ஒரே யொரு பிள்ளையைப் போற்றி அதற்கே பல்துறைக் கல்வியறிவையும் பயிற்றுவித்துப் பின்னர் அப்பிள்ளையே பெரியனாகி அரசாளத் தகுதி யுடையவன் ஆவான் என்று எதிர் பார்ப்பதைப் போன்றது. அதை விட, பிறப்பாலும் வளர்ப்பாலும் நலத்தாலும் வளத்தாலும் சிறந்து விளங்கும் ஏழெட்டுப் பிள்ளைகளை நன்கு பேணி,

அவர்க்குப் பல்துறையறிவும் ஊட்டிப் பயிற்றுவித்து இவற்றில் எந்தப்பிள்ளை தகுதியுடைய பிள்ளையாக விளங்குகின்றதோ அதனையே அரசனுகக் கொள்வது எவ்வளவு சிறந்ததும் செப்பமுடையதும் ஆகும் என்று கருதிப் பார்க்க வேண்டுகின்ரேம்.

ஒரு விளையாட்டு மேற்சென்று போட்டி யிடுவார்க்கும் ஒரு மாற்றுவன் ஒருவனை ஏற்படுத்துதல் வழக்கமாயிருக்க அரசியல் ஆட்சிக்கு இந்தியே தகுதியுடையதாக வளர்ந்து விடும் என்று அவ்வொன்றையே நம்பியிருப்பது எத்துணை அறியாமை!

ஆக, இந்தியக் குடியரசு நாட்டிற்குப் பல மொழிக் கூட்டமைப்பாட்சி ஒன்றே ஏற்புடைத் தாவதன்றி, ஒரு பொழுதும் ஒரு மொழிக் கொள்கை பொருந்துவதன்று என்று கொள்க. அவ்வாறு, பொது மொழிக் கொள்கை வேண்டுவ தொன்றே என்று மக்களுள் பெரும்பாலார் விழையின், அதற்கு ஆங்கிலமே சாலும் என்றும், ஆங்கிலம் பிற நாட்டு மொழி யென்று அறிவு நாட்டமின்றிக் கரையின், ஆங்கிலம் போல் தகுதியடையத் தக்க ஏழெட்டு மொழிகளைத் தேர்ந்து அவற்றின் பல்துறை வளர்ச்சிக்குப் பல்லாற்ருனும் உதவிப் பல்லாண்டுகட்குப் பின் அவற்றுள் தகுதி யுடையதொன்றினைத் தேர்ந்து அதனை ஆட்சிமொழியாக்குதலே ஒப்பக்கூடியதும் அறிவான செயலும் ஆகும் என்றும், அதுவன்றி எவ்வாற்ருனும் சிறப்புறுத ஒரு புன்மொழியாகிய இந்தியே ஆட்சிமொழி என்று வலிந்து திணிப்பது நாட்டுப் பிரிவினைக்கு வழி கோலும் என்றும், இதைப் புறக்கணிப்பின் விளைவதெலாம் நாட்டுக்குத் தீமையே என்றும் கற்ருரும் மற்ருரும் அரசினரும் தேர்ந்து தெளிவராக.

தென்மொழி அன்பர்தம் நலங்கருதி
விலையைக் குறைத்துள்ளோம்.

துரை. மாணிக்கம் எழுதிய
இனிய, எளிய செந்தமிழ்க் காப்பியம்

கொய்யாக்கனி

பாவாணர் தம் அணிந்துரையும் புரட்சிப் பாவலர் தம் மதிப்புரையும் நூலின் பெருமையை உணர்த்தும்.

பிறர்க்கு: 2-25 தென்மொழி உறுப்பினர்க்கு: 1-50.

இன்றே எழுதிப் பெறுங்கள்.

தென்மொழி,
திருப்பாதிரிப்புலியூர்.

மக்களவை

(இப்பகுதி தென்மொழியின் புகழுரைகளைப் பறைசாற்ற வேண்டும் எனும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்ற தன்று! உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் ஏங்கெங்கு உறைகின்றன என்பதையும், அவை தென்மொழியால் எவ்வாறு கீண்டப் பெற்று உயிர்த் தெழுகின்றன என்பதையும் தூங்கும் தமிழர் கட்கும் தீங்குசெய் பகைவர்கட்கும் உணர்த்த வேண்டு வதே இதன் தலையாய நோக்கமாகும். அதுவன்றிப், பிறர் புகழுரைக்கும் மயங்கோம்! புல்லியர்தம் இகழுரைக்கும் தயங்கோம்! — ஆசிரியர்.)

நல்லாற்றுப் படுத்தும் இதழ்!

உணர்வு கொண்ட மக்களின் வழியை நல்லாற்றுப் படுத்தும் நம் இதழ் யாண்டும் பரவ வேண்டும். 'தென்மொழிக் கழகம்' அமையின் நம் உணர்வு ஒன்றுபட வழியும், அதனால் உரனும் உண்டாகும்.

அறிவன், செயலர், பறம்பைத் தமிழ் மறைக் கழகம்.

ஃ ஃ ஃ

கருத்துக் குருடர்க்கு விழி!

... தனித் தமிழ் முழக்கமிட்டோர்கூட இந்திக்குப் பரிந்து வரும் நேரம் பகைப் புலத்தின் வேரறுக்கத் 'தென்மொழி'யோடு, தென்மொழிக் கழகமும் வீறுநடை போடும் நாளை விரைவில் நோக்குகின்றேன். சித்திரை இதழில் ஞா. தேயின் 'தமிழ் தனித் தியங்குமா?', ஆசிரியரின் 'இந்திய அரசின் மொழிக்கொள்கை' இரண்டும் கருத்துக் குருடர்க்கு விழி நல்குந் தன்மையன.

கு. ஞாலத்திறை, பி. ஏ. குரம்பட்டி.

ஃ ஃ ஃ

அலையிடை முத்தே!

தென்மொழிச் சோலையில் தேன்மொழிச் சுவையை
என்விழிக் கிளிகள் இனிக்கச் சுவைத்தன!
தனித்தமிழ் ஏடே! தேன்றமிழ்க் கூடே!
இனித்தமிழ் வாழும் இனியவுன் வரவால்!
இலையிடைப் பூத்த இதழே!
அலையிடை முத்தே! அணிபெற வாழியே!

புலவர் வேலவன்,
செயலாளர், மதுரை எழுத்தாளர் மன்றம்.

ஆணை பிறந்தால்...!

தென்மொழிக்குத் தொண்டு செய்யும் மகிழ்ச்சியினை எதிர் கால உழைப்பிற்கு அடிப்படையாக்கி உழைக்க அணியமாய் உள்ளேன். ஆணை பிறந்தால் அடி பணிவேன்.

இராம. தமிழிறை, அழகப்பர் கல்லூரி.

ஃ ஃ ஃ

அரும் பணி!

'தென்மொழி' போன்ற தூய தமிழ்த் தாளிகையினைக் காண்பது அரிது! அரிது! தமிழர்கள் 'தென்மொழி'யின் கருத்தை உணர்வதே பெரும் பேருகும். ஆங்கில மொழியாக்கம் தமிழுக்குப் புதுவாழ்வு தருவது. வரலாற்றுப் பகுதி கட்டாயம் இருக்க வேண்டும்.

நா. இராதாகிருட்டிணன், வேலூர்.

ஃ ஃ ஃ

காலத்திற்கேற்ற அருந்தொண்டு!

இனிய நறும்பாக்களையும், இலக்கிய நயங் கெழுமிய கட்டுரைகளையும் தாங்கி, திட்பமும் ஒட்பமும் உடையதாய் அமைந்து, செந்தமிழின் சீர்மை விளக்கும் 'தென்மொழி' நவில் தொறும் நயம் பயத்தல் கண்டு நவில வொண்ணு உவகை கொள்கிறேன். கற்பனை ஊற்று கவின் மிக்கு விளங்குகின்றது. இலெனின் அவர்கள் மொழி பெயர்ப்பு காலத்திற்கேற்ற அருந் தொண்டு!

தெ. ஞானசுந்தரம், எம். ஏ. கொழையூர்.

ஃ ஃ ஃ

தொண்டின் நற்பெருமை!

எள்ளளவும் தமிழர்நலம் காவா மற்றை
இழிநிலைசேர் ஏடுகட்குப் புறம்பாய் நல்ல
தெள்ளுதமிழ் அள்ளிவரும் தென்மொழி' யேஉன்
தொண்டின்நற் பெருமைதனை உணரா ருண்டோ?

பி. அரங்கநாதன், கடலூர்.

உயர்தனி ஏடு!

நற்றமிழர் இல்லந்தோறும் இலங்கவேண்டிய உயர்தனிச் செம்மொழி ஏடாகும் தென்மொழி!

— புலவர். துரை. பிச்சை கண்ணமங்கலம்.

ஃ ஃ ஃ

கற்றவர் நினைக்க...!

தென்னவள் தழைத்துத் 'தென்மொழி' ஏடாம்
நன்மணிப் பரல்கள் நான்கினை விடுத்தும்
அவற்றின் நிறையை அறியாத் தமிழர்
எற்றிற்கு வாழ்வார்? எற்றிற்கு நீப்பார்?
கற்றவர் நினைந்து தேர்ந்திடல் வேண்டும்!

— ஞா. அந்தோனிராசு, கள்ளக்குறிச்சி.

ஃ ஃ ஃ

மாதமிருமுறை...!

தக்கார் நெறிபடத் தலையுரை கண்டேன்!
தெள்ளிய தமிழில் தெவிட்டா இன்பம்
அள்ளித் தந்திடும் அருமைத் 'தென்மொழி'
போதுமா? ஒருமுறை மாதத் திற்கு?
மாதம் இருமுறை மலர்தல் வேண்டும்!

— சரவணக்குமார், சென்னை.

ஃ ஃ ஃ

தமிழ்ஞாலத்தின் தனியிதழ்!

தென்மொழி தேனைவிட இனிக்கின்றது.... இப்படியொரு கோள்நெறி பற்றிய தனித் தமிழிதழ் இதுநாள்வரை தமிழ் ஞாலத்தில் உலாப் போந்ததில்லை. தமிழ், தமிழ், தமிழென்று வெற்றொலி ஆர்ப்பவர்கள் கருத்து வேற்றுமையுங் கடந்து தென்மொழியைக் காத்தல் வேண்டும். தென்னவரின் இல்லமெல்லாம் தென்மொழி இருத்தல் வேண்டும்.

சு. பா. நெடுஞ்செழியன், ஈப்போ, மலேயா.

நெஞ்சைக் கவர்ந்தது...!

தென்மொழியிதழ் ஒவ்வொன்றும் தெள்ளுதமிழ்த் தேன்மொழியாய்த் தித்திக்கின்றது. பெரும்புலவர் பாவாணர்தம் மொழி ஆய்வும், கட்சுவை நல்கும் பாநலமும், கட்டுரைகளும், தீஞ்சுவை நல்கும் தமிழ்ச் சொல் வளஞ்சான்று தமிழ்ப்பற்று உள்ளார்க்கும் இல்லார்க்கும் தமிழுணர்வு தரவல்ல ஆசிரியவுரையும் பிறவும் என் நெஞ்சை மிகவும் கவர்ந்தன.

— மு. ஆனந்தராசன், பெல்காம்.

ஃ ஃ ஃ

வரவேற்காத தமிழ் மன முண்டா?

தமிழ் மொழிக்குச் சவக்குழி தோண்டப் பாடுபட்டுவரும் சழக்கர்களுக்குக் கசையடி கொடுக்கும் வண்ணம் வீறுநடை போட்டு வீணர்களின் செருக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க வந்து கொண்டிருக்கும் 'தென்மொழியை' வரவேற்காத தமிழ் மனமும் உண்டோ?

கற. நா. பூமிநாதன், நல்லூர்.

தமிழ்ச் சொல் வளம்.

மலர் அரும்பு வகை.

அரும்பு: மல்லிகை முல்லை முதலியவற்றின் அரும்புபோல் சிறியதாயும் கூராயுமிருப்பது.

மொட்டு: அடுக்கு மல்லிகை நந்தியாவட்டம் முதலியவற்றின் அரும்புபோல் சற்றுப்பெரியதாயும் மொட்டையாயுமிருப்பது.

முகை: தாமரை சதுரக்கள்ளி முதலியவற்றின் அரும்பு போல் பெரிதா யிருப்பது.

— ஞா. தே.

தமிழும் திரவிடமும் சமமா?

கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மறையுண்டு வந்திருப்பதனாலும், ஆரியக் குலப் பிரிவினையால் தமிழும் தமிழரும் தாழ்த்தப்பட்டிருப்பதனாலும், ஆரிய வருகைக்கு முற்பட்ட பல்வேறு துறைபற்றிய ஆயிரக் கணக்கான தனித்தமிழ் நூல்கள் அனைத்தும் இயற்கையாலும் செயற்கையாலும் இறந்துபட்டமையாலும், மொழியாராய்ச்சி இதுபோது சரியான முறையில் நடைபெறாமையாலும், தமிழைக் காட்டிக் கொடுக்கும் கோடரிக் காம்புகள் தலைமையிடம் பெற்றிருப்பதனாலும், அரசியலும் பல்கலைக் கழகங்களும் தமிழ் பற்றிய உண்மைகளை ஆராய்ந்தறிவதில் அக்கறை கொள்ளாமையாலும், தமிழின் தலைமை இன்னும் தமிழராலும் சரியாய் உணரப் பெறவில்லை.

தமிழே திரவிடத்திற்கு மூலம் என்பது, பல்வேறு சான்றுகளால் தெள்ளத் தெளிய அறியக் கிடக்கின்றது. அச்சான்றுகளாவன:–

1. **வரலாறு கூறல்**

தமிழும் அதன் திரிபான திரவிடமும், தமிழரும் அவர் வழியினரான திரவிடரும், எங்கு என்று எவ்வாறு தோன்றினர் என்னும் வரலாற்றுக் குறிப்பு தமிழிலன்றி எத்திரவிட மொழியிலுமில்லை.

> ''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி''
>
> (சிலப். 11 :19-22)
>
> ''முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே''
>
> (புறம். 9 : 10, 11).
>
> ''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
> மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
> புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
> வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்''
>
> (முல்லைக்கலி, 4)

''...... தலைச் சங்கமிருந்தார் ...... தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட **மதுரை** யென்ப.

மொழிப்பெரும் புலவர் **ஞா. தேவநேயப் பாவாணர்.**

"......இடைச் சங்கமிருந்தார்......தமிழாராய்ந்தது கபாட புரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது" —(இறையனாரகப் பொருள், 1, உரை)

"முதலூழி யிறுதிக்கண் தென்மதுரை யகத்துத் தலைச்சங் கத்து...... அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னுமாற்றிற்கும் குமரி யென்னு மாற்றிற்குமிடையே எழு நூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர் மலிவானென மலிந்த .... நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வட பெருங் கோட்டின்காறும் கடல் கொண்டொழிதலால்" —(சிலப். 8 : 1, அடியார்க்கு நல்லார் உரை)

இக் குறிப்புக்கள், தமிழ் அல்லது தமிழர் தோன்றிய இடம் முழுகிப்போன குமரிக் கண்டம் என்பதைக் காட்டுகின்றன. மாந்தன் தோன்றிய இடமும் குமரிக் கண்டமே. அது பனிமலை (இமயம்) கடலுக்குள்ளிருந்த காலத்தும் கழி முதுநிலமாயிருந்த கணிப்பருந் தொன்மை வாய்ந்தது. அடியார்க்கு நல்லார் பெய ருடன் குறித்துள்ள ஏழேழ் நாடும் வரலாற்றுண்மையே யன்றிக் கட்டுச் செய்தியன்று.

திருவாங்கூர் (திருவதங்கோடு) நாட்டில் உள்ள பறளி யாறே பண்டைத் தமிழிலக்கியத்திற் குறிக்கப்பட்ட பஃறுளி யென்பது, தமிழ்ப் பகைவர் கூற்றென்று விடுக்க.

இனி,

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

என்னும் தொல்காப்பிய நூற்பா (883), ஆரியத்தொடு கலந்து திரவிடமாய் மாறிய கொடுந் தமிழ்த் தோற்றத்தை யுணர்த்தும்.

2. ஆரியத் தொடர்பற்ற இலக்கியம்.

இறந்துபட்ட முது நாரை, முது குருகு, களரியா விரை, வெண்டாளி, வியாழமாலை யகவல், இசை நுணுக்கம், சிற்றிசை பேரிசை, முறுவல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் முதலிய எண்ணிறந்த தொன்னூல்களும்; ஏரணம் (Logic), உருவம் (sculpture), ஊழ்கம் (யோகம்), இசை, நாடகம், கணக்கு, பொன்னாக்கம் (Alchemy), கண்கட்டி (சாலம்), வசியம் (Enchantment), சூனியம் (Witchcraft), மறம் (போர்) மல்லம் (Wrestling), யானை நூல், குதிரை நூல், நீர் நூல், நில நூல், பொருள் நூல் (Economics), அரசியல் நூல் (Politics),

கட்டிட நூல் (Architecture), ஓவியம், கணியம் (Astrology) கோள் நூல் (Astronomy), மறை நூல் (Scripture), மந்திர நூல் (Mystic Philosophy), மருத்துவம், மடைநூல் (Cookery) புதையல் நூல் முதலிய பல்வேறு கலையும் அறிவியலும் பற்றிய ஆயிரக் கணக்கான அரிய நூல்களும்; தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ள, அறுவகைப்பாவும் அவற்றின் வேறுபாடுகளும்,

> ''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
> அங்கதம் முதுசொல்'' (1336)

என்னும் எழுநிலை யாப்பும், வாழ்த்துவகையும், பண்ணத்தியும், இருபது வண்ணமும், எண்வகை வனப்பும், நூற்றுக் கணக்கான அகப்பொருள் புறப்பொருட்டுறைகளும் ஆகியவற்றிற்குரிய பண்டை யிலக்கியமும், ஆரியச்சார்பற்ற அருந்தமிழ் நூல்களே.

திரவிட மொழிகளிலுள்ள இலக்கியமெல்லாம் பெரும்பாலும் வடமொழி யிதிகாச புராணங்களின் பெயர்ப்பும் திரிப்புமே.

3. நூற்சிறப்பு

தொல்காப்பியம், திருக்குறள், கலித்தொகை, சிலப்பதிகாரம் திருக்கோவை, கம்பவிராமாயணம், திருப்புகழ், காளமேக, மாம் பழக் கவியரையர் பாடல்கள் ஆகியவற்றை யொத்த பனுவலும் பாடலும் எத் திரவிட மொழியிலும் காணக்கிடைக்குமோ? ஆரியப் பேரிலக்கிய மொழிகளிலும் அவற்றைக் காண்பதரிதாயிருக்கும்போது, திரவிட மொழிகளில் அவை இல்லவே யில்லை யென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

4. இலக்கண அமைதி

முதலீறிடை நிலையென்னும் எழுத்து வரையறையும், சில சொன்மரபும், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் யாப்பு வகையும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடும், செந்தமிழ் என்னும் வரம்பும், திரவிட மொழிகட்கில்லை.

5. இலக்கியத் தொன்மை

தலைக் கழகக் காலத்திலேயே முத்தமிழிலக்கண விலக்கியம் முற்றியிருந்தமையால், கி. மு. பத்தாயிரம் ஆண்டுகட்குமுன்பே தமிழிலக்கியம் தோன்றியிருந்தமை புலனும். திரவிட மொழி களிலுள்ள இலக்கியமெல்லாம் கி. பி. 8–ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையே.

6. மொழித்தொன்மை

தமிழ்த் தோற்றம் கி. மு. ஏறத்தாழ ஐம்பதினாயிரம் ஆண்டு கட்கு முற்பட்டது.

கொடுந் தமிழ்களுள், வடுகென்னும் தெலுங்கு திரிந்தது கி. மு. 10-ஆம் நூற்றாண்டு; கருநடம் என்னும் கன்னடம் திரிந்தது கி. பி. 6-ஆம் நூற்றாண்டு; சேரலம் என்னும் கேரளம் அல்லது மலையாளம் திரிந்தது கி. பி. 13-ஆம் நூற்றாண்டு. ஏனைத் திரவிடங்கள் திரிந்தது இவற்றிற்கிடையும் பின்னும்.

7. மொழித் தூய்மை

தமிழ், பல்லாயிரக் கணக்கான இலக்கியச் சொல்லும் உலகியற் சொல்லும் இறந்துபட்டுள்ள இக்காலத்தும், எள்ளளவும் வடமொழித் துணையின்றித் தனித்து வழங்கவும் தழைத்தோங்கவும் வல்லது. திரவிட மொழிகட்கோ வடமொழித் துணை இன்றியமையாதது.

8. சொற்களின் இயனிலைமை

தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் முந்திய இயனிலையிலும், திரவிடச் சொற்கள் பெரும்பாலும் பிந்திய திரிநிலையிலுமே உள்ளன. இதை ஓரரிசிப் பதமாகத் தெலுங்கினின்று எடுத்துக் காட்டுவோம்.

1. மூவிடப் பெயர்

	தமிழ்	தெலுங்கு
தன்மை:	ஏன்–யான்–நான்	நேனு
	ஏம்–யாம்	மேமு
	நாம்	மனமு
முன்னிலை:	நீன்–நீ	நீவு
	நீம், நீயிர்–நீவிர்–நீர்	மீரு
படர்க்கை:	அவன்	வாடு
	அவள்	ஆமெ
	அவர்	வாரு
	அது, அவள்	அதி
	அவை	அவி

2. ‘ஆகு’ என்னும் வினைப்புடை பெயர்ச்சி

	தமிழ்	தெலுங்கு
பகுதி:	ஆ, ஆகு	அவு
ஏவலொருமை:	ஆ, ஆகு	கா
ஏவற்பன்மை:	ஆகும், ஆகுங்கள்	கம்மு, கண்டி
[படர்க்கை] ஆண்பால்		
இ. கா. முற்று:	ஆயினன்	அயினாடு
இ.கா. பெயரெச்சம்:	ஆன, ஆயின	அயின, ஐன
இ.க. வினையெச்சம்:	ஆய், ஆகி	அயி, ஐ
நி. கா. ,,	ஆக	கா, அவ
எ. கா. ,,	ஆயிற்றேல்	அயித்தே

	தமிழ்	தெலுங்கு
[படர்க்கை] ஒன்றன் பால்		
எ. கா. முற்று:	ஆகும்–ஆம்	அவுனு
உடன்பாட்டிடைச் சொல்:	ஆம்	அவுனு
ஒன்றன் பால்		
எதிர்மறை முற்று:	ஆகாது	காது
தொழிற் பெயர்:	ஆதல், ஆகுதல்	அவுட்ட, காவடமு

3. சில பொதுவகைச் சொற்கள்

தமிழ்	தெலுங்கு
சுருட்டு	சுட்ட
திருத்து	தித்து
பருப்பு	பப்பு
மருந்து	மந்து

9. சொல்வளம்

மலையாளத்தில் வழங்கும் வீடு என்னும் சொல்லும், கன்னடத்தில் வழங்கும் மனை என்னும் சொல்லும், தெலுங்கில் வழங்கும் இல்[லு] என்னும் சொல்லும், தமிழுக்குரிய ஒரு பொருட் பல சொற்களாம்.

ஆய், இலை, எழிலி, கார், காளம், குயின், கொண்டல், கொண்மூ, செல், பெயல், மங்குல், மஞ்சு, மால், முகில், மை என்பன மேகத்தைக் குறிக்கும் வேறுபட்ட நுண் பொருட் சொற்களாம். இத்தகைய சொல் வளத்தை எத் திரவிட மொழியிலும் காணவியலாது.

10. முத்தமிழ்ப் பாகுபாடு

தொன்று தொட்டு வழங்கிவரும் இயலிசை நாடகமென்னும் முத்தமிழ்ப் பாகுபாடும் திரவிட மொழிகட்கில்லை.

பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாண்டிய வேந்தர் போற்றிப் புரந்த முத்தமிழ், முத்தமிழ்க் கழக நல்லிசைப் புலவர், நலமுற நாடியாய்ந்த நன்மொழி, பிற மொழிகட்கில்லாத தொன்மையும் முன்மையும், தென்மையும் மென்மையும், இளமையும் வளமையும் எண்மையும் ஒண்மையும், தாய்மையும் தூய்மையும், செம்மையும் மும்மையும், பெருமையும் திருமையும், முதுமையும் புதுமையும் தாங்கி நின்றும், திரவிட மொழிகளுள் ஒன்றாக எளிவந்தும் இழிவந்தும் இருப்பது எத்துணை இரங்கத்தக்கது!

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்,
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!'

என்னும் பரஞ்சோதி முனிவர் பாடலையேனுங் கண்டு உண்மை தெளிக.

○

தமிழ் மொழியின் சொல்வளம்.

சினம்.

சினம் நீடித்து நிற்பது. சீற்றம் சீறியெழுஞ் சினம்.
வெகுளி அல்லது காய்வு: நெருப்புத் தன்மையுள்ள கடுஞ்சினம்
கொதிப்பு கண் போன்ற உறவினர்க்குச் செய்யப்பட்ட கொடுமை பற்றிப் பொங்கியெழுஞ் சினம்.
எரிச்சல் மனத்தை உறுத்துஞ் சினம்,
கடுப்பு பொறாமையோடு கூடிய சினம்.
கறம் அல்லது வன்மம்: பழிவாங்கும் சினம்.
கறவு தணியாச் சினம்.
கறுப்பு முகம் கறுத்துத் தோன்றும் சினம்.
சிவப்பு அல்லது செயிர்: முகம் சிவந்து தோன்றும் சினம்.
விளம் நச்சுத் தன்மையான சினம். வெறி அறிவிழந்த சினம்.
முனிவு அல்லது முனைவு: வெறுப்போடு கூடிய சினம்.
கதம் என்றும் இயல்பான சினம்.
கனிவு முகஞ்சுளிக்கும் சினம்.
செற்றல் அல்லது செறல்: பகைவனை அழிக்கும் சினம்.
ஊடல் மனைவி கணவனொடு சினந்து கொண்டு உரையாடாத மென் சினம்.
புலவி ஊடலின் வளர்ந்த நிலை.
துனி ஊடலின் முதிர்ந்த நிலை.
சடைவு உறவினர் குறைகூறும் அமைதியான சினம். —ஞா. தே.

உளநலப் பத்து.

—(⌣⌣⌣)—

ம. இலெ. தங்கப்பா.

என்பிருந் தென்ன? தசையிருந் தென்ன? எழுங்குருதித்
தென்பிருந் தென்ன? திகழ்செவி, கண், மூக்கு, வாய், மெய் என்னும்
ஐந்திருந் தென்ன? அவைவழி இன்பம் அடைந்து மென்ன?
அன்பிருந் தோங்கும் உளநல மின்றி அழகிலையே! [1]

புனைவிருந் தென்ன? பொலிவிருந் தென்ன? பொலிவுடல்மேல்
வனைவிருந் தென்ன? வலுவிருந் தென்ன? வயங்கிளமைக்
கனிவிருந் தென்ன? கணைவிழி மங்கையர் காமுற்றென்ன?
இனிதமைந் தோங்கும் உளநல மின்றி எடுப்பிலையே! [2]

பொருளிருந் தென்ன? புகழிருந் தென்ன? புவிநடத்தும்
உரமிருந் தென்ன? நறும்பால் கொழுங்கனி நெய்யமிழ்தின்
பெருவிருந் துண்ணுநற் பேறிருந் தென்ன? பிறங்கியொளிர்
அருளிருந் தோங்கும் உளநல மின்றி அடைவிலையே! [3]

உயர்விருந் தென்ன? உழைப்பிருந் தென்ன? உலகியல் சீர்ப்
பயில்விருந் தென்ன? படையிருந் தென்ன? பலர்நடுங்கும்
பெயரிருந் தென்ன? பெருவினை யாண்மை பிறங்கி லென்ன?
செயிர்தவிர்ந் தோங்கும் உளநல மின்றிச் சிறப்பிலையே! [4]

அறிவிருந் தென்ன? நூல் ஆய்விருந் தென்ன? அகன்ற எண்ணச்
செறிவிருந் தென்ன? தெளிவிருந் தென்ன? செழுமொழியால்
புறமிருந் தார்க்குயர் உண்மைகள் ஓதிப் புகழ்பெற்றென்ன?
அறமிருந் தோங்கும் உளநல மின்றி அமைவிலையே! [5]

செய்யுட் புனைந்தென்ன? செஞ்சொல் விரித்தென்ன செந்தமிழை
ஐயந் திரிபின்றி ஆய்ந்தென்ன? தோய்ந்தென்ன? ஆர்புலமை
வையம் புகழ்ந்தென்ன? வார்த்துருக் கல் நாட்டி வாழ்த்தி லென்ன?
பெய்யற் றொளிரும் உளநல மின்றியோர் பொற்பிலையே! [6]

கலைவன்மை பெற்றென்ன? கைவண்ணம் உற்றென்ன? காதினிக்கச்
சொலல்வன்மை பெற்றென்ன? சுற்றிச் சுழன்றுயர் மேடையெலாம்
தலைவன்மை யாற்புகழ் சூட்டிடப் பெற்றென்ன? தன்னலம் விட்[டு]
உலகுய்ய வெண்ணும் உளநல மின்றி உயர்விலையே! [7]

தெய்வமுன் தாழ்ந்தென்ன? திண்மறை கற்றென்ன? தீநிரையம்
உய்வதே நோக்கா உலகறம் செய்தென்ன? ஒண்புலன்கள்
பொய்யெனச் சொற்றென்ன? பூத வியற்கை புரிந்துமென்ன?
மெய்யுணர் வோங்கும் உளநல மின்றி மிளிர்விலையே! [8]

பொறியியல் தேர்ந்தென்ன? பொன்னியல் ஆய்ந்தென்ன? போர்க்கடலுள்
சிறுவுயிர் நுண்மைத் திறந்தெரிந் தென்ன? திரிதருங்கோள்
முறைமையின் ஓர்ந்தென்ன? மொய்ம்மீன் கணித்தென்ன முட்டறுந்தூய்
நெறியினன் றோங்கும் உளநல மின்றி நிறைவிலையே! [9]

அணுவைப் பிளந்தென்ன? அண்டம் துளைத்தென்ன? மண்டிலங்கள்
நுணுகித் தெரிந்தென்ன? நூறுயிரங் கற்கள் தாண்டித் திங்கள்
அணுகிப் பறந்தென்ன? ஆட்சியங் குய்த்தென்ன? ஆன்றுயர் மன்
உணர்வில் ததும்பும் உளநல மின்றி உயர்விலையே! [10]

பாடும் மணல்.

—:—

பசிபிக் பெருங்கடலிலுள்ள ஆவாலிய திட்டுகளில், ஒரு வகை மணற் பரப்பு உள்ளது. பெருங் காற்று வீசி அம் மணற் பரப்பு அலைவுறும் பொழுது பறவைகள் சேர்ந்து பாடுவதைப் போல் ஒலியுண்டாகின்றதாம். சிறிதளவு மணலைக் கையிலெடுத்துத் தேய்த்தால் ஆந்தை அகவுவது போலும், ஒரு பையிலிட்டு நிரப்பிக் குலுக்கினால் நாய் குலைப்பது போன்றும் ஒலியுண்டாகின்றதாம். இதன் பொருட்டு இம்மணலைப் **பாடும் மணல்** (Singing Sand) என்று பெயரிட்டழைக்கின்றனர்.

தமிழக வயலில் சாதிக் களைகள்.

மு. சாத்தையா.

[தமிழர்க்குச் 'சாதி'யும் இல்லை; தமிழில் அதைக் குறிக்கும் சொல்லும் இல்லை. எவ்வளவு முயன்றாலும் மொழி பெயர்க்க முடியாத, பெயர்த்தாலும் பொருந்தி வராத தன்மையுடையது சாதி. இதனாலேயே தமிழர் தம் நெறிக்கே புறம்பான 'சாதி'யைச் 'சாதி' எனுஞ் சொல்லாலேயே குறித்துள்ளோம். சாதியால் நேர்ந்த இழிநிலைகளுள் இதுவும் ஒன்று.]

நல்லவர்கள், எல்லாரும் தோன்றித்தான் இருந்தார்கள். தங்களால் எவ்வளவு முடியுமோ அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். பண்படாத நிலையை மாற்ற முயன்று அவர்கள் செய்த சீர்திருத்தம் சில புது உருவங்களைப் படைத்தது. முன்பு இல்லாத சில புதிய வடிவங்கள் எழுந்தன. ஆனாலும், பலர் எதிர் முனையில் நின்று பலவாறாக முயன்று சீர்திருத்திகள் (Reformers) கண்ட புதிய வடிவங்களின் உருவைச் சிதைத்து வந்தனர். அறிஞர்கள் எழுப்பிய முன்னேற்றச் சுவர் உருவாக உருவாக ஒரு புறமாகச் சரிந்து கொண்டே சென்றது. முடிவில் ஆயிரம் மாற்றங்களும், முன்னேற்ற அடையாளங்களும் நேர்ந்த பிறகும் மன்பதையில் 'கோணல் குட்டிச் சுவர்' மட்டும் என்றும் நின்று கொண்டேயிருக்கிறது. இடம் மாறியிருந்தாலும், அதன் நிலை மாறவே யில்லை.

மற்ற நாடுகளிலெல்லாம் இல்லாத பண்பாடும், நாகரிகமும் தமிழ் நாட்டில் உண்டு. தாங்களே அறநெறி கண்டு அவற்றின் தெளிவைப் பிழிந்து உயர் நூற்களாக, வாழ்வின் சட்டங்களாக வரையறுத்த பெருமை தமிழர்க் குண்டு, அந்த அளவோடு நில்லாது உலகில் காணும் உயர்ந்த குறிக்கோள்களையும், அவற்றை உருவாக்கிய பெருமக்களின் உள்ளார்ந்த உணர்வையும் புரிந்து கொண்டு தம் நாட்டிலேயே கருத்துப் புரட்சி செய்யவும் தமிழர் தயங்கிலர்.

இப்படியெல்லாம் பெருமை பெற்றுள்ளது உண்மையே. ஆனால், புரையோடிப் போயுள்ள மன்பதையின் இழிநிலையையே தமிழகத்தின் எல்லா விடங்களிலும் காண்கிறோம். அதிலும், மன்பதையின் கேடுகள் இவைதாம் என்று சுட்டிக் காட்டிய பெருமக்களே அக்கேடுகளில் சிலவற்றைப் படைத்த பெருமையுடையவர் என்பதையும் மறக்க முடியவில்லை. வளமும், செழு

மையும் பிறநாட்டாரினும் அளவின்றிப் பெருகிய தமிழ் நிலத்தில் போடப்பட்ட உரத்தின் வலிவுக்கேற்ப எண்ணற்ற களைகளும் தோன்றின.

'இல்லாமையாலும் கல்லாமையாலும் இழிதகவுக்குள்ளான நாட்டில் மெல்ல மெல்லக் கல்வி மணம் பரவிக் கசடுகள் நீங்கி வருகின்றன, என்று கருதி மன நிறைவு கொள்ளும் அனைவரும் செம்மை எதிர்பார்க்கும் இடத்திலேயே புதிய கேடுகள் விளைந்து செழித்து வருகின்றன என்பதையும் கண்களை அகலத் திறந்து காணல் வேண்டும்.

குறுகிய மனப்பாங்கு; முன்னேற்றம் காணத் தடை; பிற்போக்கான பேதைத் தன்மை; மொழியால் இணைக்க முடியாத, இனத்தால் ஒன்றிப் போக முடியாத பிளவு நிலை; பேசப்படும் சீர்திருத்தங்கள் அனைத்தையும் கேட்டுக் கைதட்டிவிட்டு அதே மூச்சில் மண்ணை வாரி இறைக்கும் மடமை–இத்தனைக்கும் வித்தான 'சேர்ந்தாரைக் கொல்லி' யாய் விளங்கும் சாதி இன்று தமிழ் நாட்டில் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

சாதியால் மக்கள் பிரிந்து நிற்கும் இந்தக்கேடு மறையாமல் மன்பதையில் நிலைத்து நிற்குமானால், முற்போக்குக் கருத்துகள், முயற்சிகள் அனைத்தையும் விழுங்கிச் செரித்துவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமின்று.

அறியாத மக்களின் பிடிப்பில் அகப்பட்டும், மெய்யறிவும், தெளிவுமற்ற காரணத்தால் உயர்ந்த வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாததாலும் கற்றுத் துறைபோகிய பெரியவர்களிடத்துப் புகுந்தும் சாதி மனப்பாங்கு தெளிவாக, ஒழுங்காக வேர் விட்டுக் கொண்டிருக்கிறது.

இன்னும் தெளிவாகச் சொன்னால் சாதி, கல்லூரிகளில் பயில்கின்றது; பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறுகின்றது; ஆணைகளைக் கைப்பற்றி ஆள்கின்றது; என்றும் அழியாத பெயராய் இலக்கியத்தில்கூட நிலைக்கின்றது; இந்த வகையில் பல துறைகளின் உண்மை நடப்பை நோக்கினால் சாதியின் திருவிளையாடல் தெளிவாகப் புலனாகும்.

இன்று தமிழகத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட கல்லூரிகள் உண்டு. எல்லாக் கல்லூரிகளிலும் மாணவனாக இடம் பிடிப்பதில் நேர் வழியை நாடும் சிலரைத் தவிரப் பரிந்துரை வாயிலாக வர விரும்பும் எவர்க்கும் கை கொடுப்பது சாதியேயாகும். பயிற்

ருசிரியர் (Tutor) வேலை பெற விரும்பும் எவரும் தகுதிகொண்டு போட்டியிட வாய்ப்பே கிடையாது; போட்டியிட்டால் பயனுமில்லை. அந்தந்தச் சாதியாரும் பயிலத் தனித் தனிக் கல்லூரிகளும், அலுவல் ஆற்றத் தனித்தனி நிறுவனங்களும், அவரவர்க்கென்று தனித்தனி நாடுகளும், தனித்தனி அ ர ச வை க ளு ம் அமைந்தால் தாம் எல்லாரும் பிழைக்க முடியும்; உயர முடியும் என்ற இழிவான நிலையை உருவாக்கியது சாதியேயாம்!

ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு சாதி முத்திரை உண்டு. கற்றவர்களே மலிந்துள்ள கல்லூரிகளில் தாம் இந்நிலை வலிவோடு வாழ்கிறது என்பதை, இத்துறையில் புகும் எவரும் கண்டு கொள்ளலாம். சாதிச் சார்பு போலச் சமயச் சார்பும் சிலவிடங்களில் உண்டு.

அலுவலகங்களில் இயல்பாக நடக்க வேண்டிய வேலைகட்குக்கூட அறிமுகம் தேவை. அங்குக் கிடைக்கும் எந்த உதவியும் நட்பு அடிப்படையைவிடச் சாதி அடிப்படையில்தான் நடக்கிறது. ‘நம் சாதிக்காரன் ஓர் அலுவலகத்தில் வெறும் ஏவலனாக (Peon) இருந்தால் போதும்; எல்லாம் நடக்கும்’ என்று பலரும் வாய்விட்டுச் சொல்லும் செய்தியைக் காதாரக் கேட்கலாம்.

ஊராட்சி மன்ற உறுப்பினரிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் வரை சாதியின் பிடிப்பு இல்லாவிட்டால் நினைத்தது நடக்காது. வேட்பாளரின் சிறந்த தகுதியையும், தொண்டு மனப்பாங்கையும் நோக்குவதைவிடச் சாதி ஆட்களின் எண்ணிக்கையைக் கருதியே கட்சிகளும் தமக்கான, ஆட்சிமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்றன. அத்தகையார் கட்சிகளின் கடும் போட்டிகட்கிடையே வெற்றி பெற்றுச் சட்ட மன்ற உறுப்பினரானால் கட்சி, கொள்கை எனும் பாகுபாடு மறந்து ‘நம்மவர் எத்தனை பேர்’ என்று சாதி அடிப்படையில் மொத்தக் கணக்குப் போடவும் தயங்குவதில்லை. கட்சிகளும், கொள்கைகளும் அரசியல் வேறுபாடுகளும் போட்டியும் சாதியின் முன் மண்டியிட்டுச் சாய்கையில் தன்னுரிமை யாட்சி எனும் நன் முறைக்கே பெரும் இழுக்கு நேர்வதைக் காண்கின்றோம்.

பல்கலைக்கழகம் எவ்வளவு உயர்ந்த கல்விவளம் செறிந்த இடம்! அங்கே பொறுப்புள்ள சிலர் தம் கையொப்பமே இயற்பெயர் நீங்கிய சாதிப்பெயரிலேயே இருக்கும். மேலும் சிலரை அறிவிக்கும் பெயர்ப்பலகைகள் இயற் பெயர்களை மறைத்துச் சாதிப் பெயர்களையே பறை சாற்றுகின்றன. ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்கையிலும் ‘Dr, பிள்ளை, Mr. முதலியார்’ என்றெல்லாம் வழங்குவதே கற்றவர் பால் சாதி ஏற்படுத்திய அறியாமையையும் செருக்கையும் காட்டப் போதுமானதன்றோ?

இந்தப் போக்கை ஆராய்ந்தால், படிப்பால் பட்டங்களும், உழைப்பால் புகழும், நூற்களால் மக்கள் மன்றம் மறக்க முடியாத பெயரும் பெற்றவர்களும் சாதியைத் துணைக் கொண்டு தங்களை அறிமுகப் படுத்திக்கொள்ள முனைவதும், பிறர்முனையுங்கால் அந்த முயற்சியைக் கடிந் தொதுக்காமல் வரவேற்பதும் அல்லது வாளாவிருப்பதும் இழிவை வளர்க்கும் கீழ் நிலையே அன்றி வேறில்லை. இதைக் காணும்பொழுது பேரறிஞரும் தத்தம் ஆற்றலையும், உழைப்பையும், செல்வாக்கையும் நம்புவதினும் சாதி ஒட்டால் நேரும் உயர்வையும் அறிந்தோ அறியாமலோ நம்பிக் கிடப்பதை எண்ணி நகையாட வேண்டியுளது.

கல்லூரியில் பயிலும் மாணவர்களும் தமிழர் எனும் இன உணர்வாலோ, மொழி நோக்காலோ, முற்போக்குக் கருத்துக்களை வளர்க்க முனையும் ஏற்பாட்டாலோ ஒன்றுமல் சாதி அடிப்படையில் மன்றங்கள் நிறுவும் நிலை உள்ளது. இப்படிப்பட்ட அமைப்புகளால் என்ன குறிக்கோளை நிறைவேற்றக் கருதி உழைக்கின்றனரோ தெரியவில்லை. அந்தச் சாதி மன்றங்களின் விழா நிகழ்ச்சிகளில் முற்போக்காளரும், சீர்திருத்திகளுமாக இருந்தாலும் 'சாதியார்' என்பதற்காகச் சென்று கலந்து கொள்பவர்களும் உண்டு. அங்கு நிகழும் பேச்சோ, முடிவோ மொழி இனம் நாடு பற்றியதாகவா இருக்கமுடியும்? சாதியின் விரிவைப் பற்றிய ஆராய்ச்சிதான் நடக்கும்,

ஆக, கல்லாதவர் கற்றவர் எனும் வேறுபாடு கருதாமல், ஏழை பணக்காரன் எனும் ஏற்றத் தாழ்வை நோக்காமல் எல்லாரிடத்திலும் சமன்பாடான செல்வாக்கைப் பெற்றது சாதியே யென்பதையும், நுண்மையும் தெளிவும் வாய்ந்த அரிய கருத்துகள் பரப்பப்பட்டுப் பல நூற்றுண்டுகளான பிறகும் சாதியால் நேரும் இழிநிலையைத் தடுக்க முடியாத தோல்வியையும், அதன் இழிவைச் சரியாக உணராமல் அனைவரும் சருக்குவதையும் உணர்ந்து கொள்ளலாம்.

முன்னேற்றம் என்பது வெறும் பணப் பெருக்க மன்று; மாசு மருவற்ற மனத்தின் தூய வளர்ச்சி. உலக வளர்ச்சி உண்மைத் திறனும், தக்கார் பலர் தகுந்த துறைகளில் அமர்வதாலும் அமையக் கூடியது. இவற்றிடையில் 'சாதி' எனும் களைக்கு இடம் தருவோமாயின், வளர வேண்டிய பயிரினையே முற்றிலும் அழித்துக் கெடுக்கும் என்பதை மறத்தல் கூடாது.

எனவே, கற்றுச் சிறக்கும் ஒவ்வொருவரும் கருத்தில் இருத்திக் கவனித்துச் சாதியின் ஆணிவேரைக் கல்லி அகற்றிவிட்டுத் தெளிந்த நெறியோடும் பரந்த மனப்பாங்கோடும் வாழ்ந்தாலன்றி மன்பதைக்கு உய்வுமில்லை; தமிழகம் திருந்தப் போவதுமில்லை.

நூற்சுருக்கம்

உரிமை.
(THE LIBERTY)

மாந்தன் எப்பொழுதும் தன் உடல் ஆற்றலோடு மன ஆற்றலையும் சேர்த்தே பயன்படுத்த வேண்டும். வெறும் உடலாற்றலால் எல்லா வினைகளும் நிகழ்ந்து விடுவதில்லை. அவன் எந்த அளவுக்குத் தன் உடலாற்றலோடு மனவாற்றலைக் கலக்கின்றானோ அந்த அளவுக்கு அவன் முன்னேற்றம் அடைந்துள்ளான் என்று கூறிவிடலாம்.

மீகாமன் ஒருவன் காற்றின் இயக்கத்தையும் கடலின் சுழல்களையும் தெரிந்து கொள்ளாமல் இருந்தானாகில் அவன் மூட நம்பிக்கை கொண்டவனே! உழவன் ஒருவன் காலங்களைப் பற்றியும், நிலங்களைப்பற்றியும் தெரிந்து கொள்ளாமல் வேளாண்மையில் ஈடுபட்டுப் பயன் காணல்முடியுமா? ஒருவன் வாழ்வெல்லாம் அவன் கட்டுப்படுத்த முடியாத ஒன்றைத் தெரிந்து கொள்வதைப் பொறுத்தே அமைகின்றது. பொறியொன்றை இயக்குவான் ஒருவன், அப் பொறியிலமைந்த ஒரு சிறு உருளை சரிவர இயங்காமற் போமாயின், அதற்கென இறைவனை வேண்டுவதில்லை. உருளை சுழலாமல் இருக்க ஏதேனும் பொருட்டிருக்க வேண்டுமென எண்ணித், தன் முயற்சியால் அதைப் பலவாறு ஆராய்ந்து கண்டு திருத்தி முடிவில் வெற்றியுறுகின்றான். மாந்தன் தன்முயற்சியை எந்தப் பொழுதிலும் கைநெகிழ விட்டு விடக் கூடாது. சுற்றுச் சூழல்கள் எதிர்த்து நிற்குமிடத்தில், அவற்றிக்குப் பணிந்தோ அஞ்சியோ கிடவாமல் தன்னுரிமையுடனும் தன்முயற்சியுடனும் எதிர்த்துப் போராட வேண்டும். இயற்கையினால் வந்து சேரும் தடைகளை மீறுகின்ற பொழுதே அவன் அறிவும் உள்ளமும் உடலும் வளர்ச்சியுறுகின்றன. அவை வளர வளர அவனுக்கு உரிமை உணர்வு மிகுகின்றது. அது அவனுக்குப் பெருமிதத்தையும் இறைமையையும் நல்குகின்றது. அவன் உள்ளத்தில் தன்னுரிமை நிறைவெய்துங்கால் பிறர் உரிமைகளில் அவன் நாட்டம் செலுத்தி அவற்றிக்காகவும் பாடுபடத் தொடங்கு

கின்ருன். மக்களெல்லாம் தத்தமக்கிருக்கும் உரிமைகளைப் போல், பிறர்க்கும் இருக்கவேண்டும் என்று எப்பொழுது கருதத் தொடங்குகின்றனரோ, அப்பொழுதுதான் இவ்வுலகம் நாகரிக மடைந்ததாகக் கூறமுடியும். சில ஆண்டுகட்கு முன் மக்கள் அரசனிடமும் சமயத் தலைவனிடமும் அஞ்சிக் கிடந்த னர். ஒரு சமயக் கொள்கையை ஆராயவும், ஒரு நூற்கருத்தை மறுக்கவும், ஒரு பழக்கத்தைக் கண்டித்துப் பேசவும், ஒரு கோட்பாட்டை அளவீடு செய்யவும், தாமாக எண்ணவும் மக்கள் மிகவும் அஞ்சினர். செல்வர்கட்கு முன் தலைவணங் கினர். இக்கால் இத்தகைய அடிமைச் செயல்கள் ஒழிந்து வருகின்றன. செல்வன் என்ற காரணத்திஞல் இக்காலத்தில் ஒருவனை நாம் வணங்குவதில்லை. உண்மையான தூய மனத் திற்கும், அறிவிற்கும், திறமைக்கும் உலகம் இப்பொழுது வணக்கம் செய்யத் தொடங்கி விட்டது.

நூருண்டுகட்கு முன்னர் இப்படியில்லை; அடிமைப் பழக் கத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தோம். ஆஞல் இன்று என்னுடலிலுள்ள ஒவ்வொரு துளிக்குருதியும் எவ்வகைக் கட்டுப்பாட்டையும் உடைத் தெறியத் துடிக்கின்றது. முழு உரிமையையே நான் விரும்புகின்றேன்.

உரிமை என்ருல் என்ன? உடலைப் பொறுத்தமட்டில் பிறரின் மகிழ்ச்சிக்குக் கேடு செய்யாதபடி நான் எதையும் செய்வதே சரி யென்று படும். ஆஞல் அறிவைப் பொறுத்த மட்டில் என் உள்ளம் நினைப்பதை முற்றும் நான் வெளியிட்டு விட எனக்கு உரிமை வேண்டும். அதாவது சரியான வற்றை யும் சரியல்லாதன வற்றையும் நான் எண்ணவும் எடுத்துக் கூறவும் உரிமை வேண்டும். இதற்கு உண்மை மட்டும் அடிப் படையாக விருத்தல் வேண்டும்.

மாந்தத் தன்மையற்ற, இறை நம்பிக்கைக் காரனைவிட, மாந்தத் தன்மையுள்ள இறை மறுப்புக்காரனே பலருள்ளும் மேலானவன் என்று நான் கருதுகின்றேன். உலக ஊழியின் இறுதியில் நம்மையெல்லாம் இயக்கிக் கொண்டிருக்கும் ஓர் இறைவனின் முன் நாம் எல்லாரும் நிற்க வேண்டி வந்தால், ஏமாற்றுக்காரஞன போலிச் சமயத் தலைவனை விட நான் சிறிது தலைநிமிர்ந்தே நிற்பேன்.

நான் சொல்ல வேண்டுவதை எக்காலும் சொல்லவே விரும்புகின்றேன். ஆஞல் மிகவும் தெளிவுடனும் சொல்ல முயற்சி செய்வேன். இப்படிப்பட்ட உரிமை பெற்றவனை உள்ளூரப் பலரும் போற்றிஞலும், வெளிப்படையாக ஒருவரும்

போற்றுவதிலர். காரணம் அவர்களில் பலர் ஏழைகள்; சிலர் வாணிகர்கள். அவர்தம் வாழ்வு மனப் புரட்சியாளர்களைப் போற்றுதலில் தான் உள்ளது.

மக்கள் கூட்டத்தைப் பின்னடையச் செய்யும் அஞ்சத்தக்க அறியாமையை விட்டொழியுங்கள். உயிர்க்கு இன்றியமையாத உணர்வு, உரிமை, உண்மை இம் மூன்றினையும் வேறுபடுத்தும் சமயக் கட்டுப்பாடுகள், அரசினர் சட்டதிட்டங்கள் யாவற்றையும் அறவே விலக்கி விடுங்கள். உரிமையற்ற அடிமை இவ்வுலகத்தில் எங்கும் இருத்தல் கூடாது.

பெண்ணுரிமை

பொதுவாகவே மக்கள் எல்லாம் அரசுக்கும் சமயத்துக்கும் அடிமைகள் என்றால், அவர்களைச் சார்ந்த பெண்களெல்லாம் அந்த அடிமைகளுக்கு அடிமைகளாகவே இருந்திருக்கின்றனர். இந்த அடிமைத் தன்மையிலிருந்து பெண்களெல்லாம் விடுபட்டு வாழ்வுரிமை பெற இலக்கக்கணக்கான ஆண்டுகளாகியிருத்தல் வேண்டும். மக்கள் வகுத்துக் கொண்ட மிகவும் தேவையான உயர்ந்த சிறந்த பழக்கம் என்னவென்று என்னைக் கேட்பீர்களானால், அது திருமண ஏற்பாடே என்று கூறுவேன். ஒரு நல்ல குடும்பம் ஒருநல்ல அரசியலுக்கு அடிப்படை;அதன் கிளை. இத்தகைய குடும்ப அமைப்பைச் சீரழிக்கச் செய்யும் எத்தகைய முயற்சியும் கொடுமையானதும் தவறானதுமாகும். திருமண ஏற்பாட்டைக் குறை கூறுகின்ற எந்த ஆணையும் பெண்ணையும் மிகவும் இழிவாகவே நான் கருதுகின்றேன். மக்களுள் ஆடவர்கள் எல்லாரும், யாரேனும் உயர்ந்த பண்பு வாய்ந்த ஒரு மங்கையின் முழுக்காதலையும் பெற்றுவிட வேண்டுமென்றும், பெண்டிர்கள் எல்லாரும் எவரேனும் உயர்ந்த ஓர் ஆண்மகனின் அன்புக்கும் போற்றுதலுக்கும் உரியவராகி விட வேண்டுமென்றுமே கருதிக்கொண்டிருக்கின்றனர். உயர்ந்த பண்பும் அன்பும் வாய்ந்த மங்கை யொருத்தியின் முழுமையான உள்ளத்தைப் பெற்றவன், இரந்து குடிப்பவனாயிருப்பினும் அவன் வாழ்வில் வெற்றியடைந்து விட்டான் என்றே நான் கூறுவேன்.

ஆடவர்களுக்கு இணையாக வைத்தெண்ணப்பட வேண்டியவர்களே பெண்டிரும். ஆண்கட்கிருக்கும் எல்லா உரிமைகளும் ஒரு பெண்ணுக்கு உண்டு. இன்னுஞ் சொன்னால் ஓர் உரிமை மிகுதியாகவே அவருக்குண்டு; ஆடவரால் காக்கப்பட வேண்டிய உரிமை அது. தன் மகிழ்வுக்காகவே ஒரு பெண்ணின் மகிழ்ச்சியைக் கெடுப்பவன் கடுமையான குற்றவாளி.

குடும்பத்திற்கு யார் தலைவர் என்று பேசுவதையே நான் அடியோடு வெறுக்கின்றேன். இளமைப் பருவமுள்ள ஒரு நங்கையும் நம்பியும் நிலவுமிழும் இராப் பொழுதில் ஒரு தனித்த பூங்காவில் பேசிக் கொண்டிருக்கும் அன்பு மொழிகளைச் சிறிது நிறுத்திவிட்டு, நம்மில் எவர் குடும்பத் தலைவர் என்பதை இங்கேயே முடிவு கட்டிவிட வேண்டுமென்று உரையாடத் தொடங்குவார்களானால் அது எவ்வளவு அருவருப்புடைய தாகப்படும்; எத்துணைப் பொருளற்றதாகப் படும் என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள்.

புற வேலைகளில் ஈடுபட்டுப் பொருள் திரட்டிக் கொணர்வ தால் ஆடவர்கள் குடும்பத் தலைவர்களாகக் கருதப்படுவதையும் நான் ஒப்புக் கொள்ளல் முடியாது. மாலையில் கடுகடுத்த முகத் துடன் வீடு செல்லும் ஆடவன் தன் வீட்டிலுள்ளார் அனைவரும் தனக்குப் பணிவிடை செய்து இன்பஞ் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்க என்ன உரிமையிருக்கின்றது?

மாலையில் வீடு திரும்புங்கால் ஒளிவிடும் முகத்துடன் திரும்பு. அங்கு உன் வீட்டிலும் மகிழ்ச்சி பொங்குகின்றதைக் காண்பாய். குடும்ப நெரிசல்களுக் கிடையிலும் குழந்தைகளின் இடிபாடுகளுக் கிடையிலும் தன்னை மூழ்கடித்துக் கொண்டு வாழும் ஒரு பெண் இனிய முகத்துடன் உன்னை வரவேற்க வேண்டியிருப்பதை எண்ணிப்பார்.

— தொடரும்.

தமிழ்ச் சொல்வளம்.

நிலத்திணைத் தொகுப்பு வகை

செய்:	நெல் கம்பு முதலிய பயிர்த் தொகுதி.
தோட்டம்:	மிளகாய் கத்தரி முதலிய செடித் தொகுதி.
தோப்பு:	மா தென்னை முதலிய மரத் தொகுதி.
காடு:	முல்லை குறிஞ்சியிலுள்ள நிலத்திணைத் தொகுதி
அடவி:	மரமடர்ந்த காடு.
சோலை:	மரமடர்ந்த இயற்கைத் தோப்பு.
கா:	காக்கப்படும் சோலை.
கானல்:	கடற்கரைச் சோலை.
வனம்:	மக்கள் வழக்கற்ற காடு.

— ஞா. தே.

எழுவாய் நெஞ்சே!

துரை மாணிக்கம்

இளைத்துள்ள தமிழ்நெஞ்சே! எழுவாய் நீ!
எதன் பொருட்டா யெண்ணி யெண்ணிக்
களைத்துள்ளாய் வருந்தற்க; களிப்புறவே
ஒருவழியைக் காட்டு கின்றேன்:
முளைத்துள்ள தமிழ்ப்பயிரில் மூண்டெழுந்த
களையனைத்தும் முனைந்து நீக்கி
விளைத்துள்ள பசுந்தமிழை விரிவடையச்
செய்யவினை விரும்பு வாயே!

அயர்வுற்ற தமிழ்நெஞ்சே! ஆர்த்தெழு நீ!
அயர்வறுக்கும் ஆறு சொல்வேன்;
உயர்வுற்ற நறுந்தமிழர் உளச்சிறப்பில்
இழிகின்றார்; உழைப்பி லாது
மயர்வுற்ற சிறுசெயலில் மடிகின்றார்;
அன்னவர்க்கு மலைவு நீக்கிப்
பெயர்பெற்ற தமிழகத்தின் பெருமையெலாம்
உணர்வுபெறப் பேசு வாயே!

வருந்துகின்ற தமிழ்நெஞ்சே! வருந்தற்க;
வளப்பமுறு வழியு ரைப்பேன்:
இருந்தழிந்த சிறப்பெல்லாம் எடுத்தவர்க்கே
இயம்பிடுங்கால், இனியிந் நாட்டில்
பொருந்திவரா இழிசாதிப் புகைச்சலெல்லாம்,
சமயஞ்சேர் புரைக ளெல்லாம்
திருந்திவரா விடிலழிவு திகழுமென்று
மனங்கொளவே தெளிவிப் பாயே!

புகைசேர்ந்த தமிழ்நெஞ்சே! பொலிவுபெறு;
புகழ்சேர்ந்த தமிழ்நி லத்தில்
பகைசேர்ந்த தாற்சேர்ந்த பழியெல்லாம்
இழிவெல்லாம் பதைக்கக் கூறித்
தகைசேர்ந்த பண்பெல்லாம் உயர்வெல்லாம்
தமிழ்நிலத்துத் தழைக்க வாழ்த்தித்
தொகைசேர்ந்த தமிழ்க்குழுவைத் திரட்டியொரு
துணையாக்கத் துடிப்பாய் வாயே!

நைகின்ற தமிழ்நெஞ்சே! நலிவகற்று;
நலஞ்சேர்க்கும் நடையு ரைப்பேன்;
மெய்குன்ற, நலங்குன்ற, மேலோர்க்குக்
கீழோர்செய் மிடிமை முற்றும்
பொய்குன்றக் குன்றுமெனப் புகட்டி, அவர்
புன்செயலின் புரையை நீக்கி,
உய்கின்ற திறங்கூறி உணர்ந்தொழுங்கில்
உயர்வுறவே உரைசெய் வாயே!

வாடுகின்ற தமிழ்நெஞ்சே வலிந்தெழு நீ!
வாட்டமிலா வகையு ரைப்பேன்!
கூடுகின்ற மாந்தரெல்லாம் உன்னினத்தார்;
அன்னவரின் கூட்டுக் குள்ளே
ஓடுகின்ற குருதிதமிழ்; உணர்வுதமிழ்;
உயிரெல்லாந் தமிழ்; என் றுலும்
ஆடுகின்ற நாகரிக நிழலாட்டம்
அயலாமென் றறிவிப் பாயே!

நொடிகின்ற தமிழ்நெஞ்சே! உயர்ந்தெழு நீ!
நோவகற்றும் உளவு சொல்வேன்:
வடிகின்ற தமிழுணர்வில் உயர்வுளத்தைக்
குளிப்பாட்டி வலிவு செய்து,
படிகின்ற இலக்கியநீர் பருகிவரப்
பைந்தமிழ்நாட் டிருள்ம றைந்து
விடிகின்ற ஒளிக்கதிரை விழி குளிரக்
காண்பமென விளம்பு வாயே!

துடிக்கின்ற தமிழ்நெஞ்சே! துள்ளுக நீ!
துன்பமில்லாத் தோது சொல்வேன்:
அடிக்கின்ற புயற்காற்றும் தமிழானல்
அதையேற்போம்! அயரா மின்னி
இடிக்கின்ற வல்லிடியும் தமிழானல்
இனியதென ஏந்தும் நெஞ்சு!
குடிக்கின்ற கூழெல்லாம் தமிழாயின்
அமிழ்தென்று கூவு வாயே!

தத்தளிக்கும் தமிழ்நெஞ்சே! அயர்வகற்று:
தனித் தமிழ்க்குத் தாழ்விங் கில்லை;
முத்தளிக்கும் முழங்குகடல் முப்புறமும்!
முகில்முட்டுங் குன்றும் காவும்!
செத்தழியும் உளத்தினுக்குஞ் செழிப்பளிக்கும்
சிறப்பழியா இலக்கி யங்கள்!
பித்தளிக்கும் தமிழ்நறவு! பிழைப்பளிக்கும்!
பெற்றியெலாம் பிளிற்று வாயே!

தேம்புகின்ற தமிழ்நெஞ்சே! தெளிவடைக!
சீர்பரந்த தமிழ்ம னத்தில்
கூம்புகின்ற மொழிப்பற்றில் ஒளிகாட்டிக்
குறைமதியால், அயலார் தம்மால்
சாம்புகின்ற இனப்பற்றைத் தமிழ்நீரால்
சலித்தெடுத்தே ஒளிரக் காட்டி,
ஓம்புகின்ற அறவாழ்க்கை உயர்வுபெற
உழைத்துழைத்தே உவப்பாய் நீயே!

நன்றியுரை.

தனித் தமிழ் ஆர்வத்தோடும், 'தென்மொழி'யின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் முன்னிற்கும் உறுதியோடும் முகவை மாவட்டத்தில் பணிக்கோட்டையில் அமைந்த இலக்கிய மன்றத்தின் துவக்க விழா நிகழ்ந்தபோது, மன்றத்தார் 'தென்மொழி' நலன் கருதி உருபா இருபது நன்கொடையாக உதவியருளினர். தூய நெஞ்சுடைய, துடிப்பார்ந்த அவ்விளைஞர்க்கு எம் நெஞ்சுகந்த நன்றி. — **ஆசிரியர்.**

தமிழ் மொழி வளம்:

மரக்கல வகை.

புணை: நீரில் மிதக்கும் கட்டை.
தெப்பம்: பல மிதப்புக் கட்டைகளின் சேர்க்கை.
கட்டு மரம்: இரு கடையும் வளைந்த மரக்கட்டு.
தோணி: தோண்டப்பட்ட மரம் போல்வது.
ஓடம்: விரைவாய்ச் செல்லும் படகு.
திமில்: திரண்ட மீன் படகு.
பஃறி: பன்றி போன்ற வடிவமுள்ள தோணி.
பரிசில்: வட்டமான பிரம்புத் தோணி.
அம்பி: விலங்கு முகம் அல்லது பறவை முகம் போன்ற முகப்புடைய மரத்தோணி.
படகு: பாய் கட்டிய தோணி.
நாவாய்: நீரைக் கொழித்துச் செல்லும் போர்க்கலம்.
கப்பல்: பலவாய் கட்டி வணிகச் சரக்கேற்றிச் செல்லும் பெருங்கலம்.

—ஞா. தே.

வழக்குரைஞர். 'மன்றிலாடி'

மனவழி வாழ்க்கை.

"மனவழியலைந்திடும் கனவெனும் வாழ்க்கை" என்பார்கள். வாழ்க்கையைப் பண்புமிக்க கலைவாழ்க்கை யாக்க இயலும். இம்முயற்சியில் மனவெளியைச் சீரமைத்து, அழகுறச் செய்யும் ஈடுபாடு முதலிடம்பெறும். களர் நிலத்தைப் பண்படுத்திச் சிறந்த வித்துக்கள் ஊன்றிப் பயனடைதல் போல, முயற்சியால் மனதைப் பண்படுத்தி, நல்லெண்ணங்களையும் நற் பழக்கங்களையும் வேரூன்றி வளரச் செய்யவிலும்.

வலிந்த எண்ணங்கள் வழி நாம் கருதுவன எல்லாவற்றையும் செயலாக்கலாம். அவ்வாறே நாம் விரும்பிய எண்ணங்களையும் உளவெழுச்சிகளையும் அறிவு வழியில் நாம் உருவாக்கலாம். விதையொன்று போடச் சுரையொன்று முளையாதாகையால், நலம் பயக்கும் எண்ணங்களுக்கு மட்டில் இடங்கொடுத்து ஊன்றி வளம்பெறச் செய்தலே நாம் செய்யும் முயற்சியாகும்.

உள்ளத்தை ஒரு குதிரையெனவும், உடலை அது இழுத்துச் செல்லும் வண்டியெனவும் நாம் கொள்ளலாம். மிகவும் ஆற்றல் பொருந்திய அறிவு எனும் வலவன் குதிரையைத் திறம்படச் செலுத்தாவிடில், காடு மேடெல்லாம் இழுச்துச் செல்லப்பட்டு வண்டி விழுந்து உடைந்து நொறுங்கலாம். எளிய குதிரை தேர்ச்சி பெற்றுப் பந்தயக் குதிரையாவது போல், எளிய மனம் கட்டுக்கடங்கி வலிந்த ஆற்றலொடும் இயங்கமுடியும். மனத்தை அடக்காவிடில் எளிய குதிரையும் சண்டிக் குதிரையாகவும் ஆகிவிடும். மனமே ஆக்கும்; மனமே அழிக்கும்.

மனத்தின் நிலையற்ற தன்மையை விளக்கிச் சில எடுத்துக் காட்டுகளை நோக்குவோம்.

உள்ளத்தில் போராட்டம் ஏற்படின், உடல்வன்மையும் எதிர்ப்புத் திறனும் குன்றும். கக்கற்கழிச்சல் என்னும் நோய் வந்த ஊரில் உண்மையில் நோயுறுபவர் ஒரு சிலர் இருக்க, அச்சத்தாலும் உள்ளத் தென்பின்மையாலும் பலர் தாக்குற்றுத் துன்புறுவர்.

ஒரு குற்றவாளியின் கண்களையும், கைகளையும் இறுகக் கட்டி, அவனுடைய குருதிமுழுவதையும் ஒருவாளியில் பிடிக்கப் போவதாக அவனுக்கு அறிவித்தனர். அவன் உடலில் ஒரு சிறு கீறல் மட்டில் செய்து, அருகில் ஒரு குழாயினின்றும் வாளியில் தண்ணீர் சொட்டச் செய்தனர். குற்றவாளி தன் உடலினின்றே குருதிசொட்டுவதாய்த் தவறுகக்கருதித் தன்ஆற்றலும் குருதியும் விரைவாய் வெளியேறுவதாக உணர்ந்து, ஆறே நொடிகளில் உயிர் நீத்தான் என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். உண்மையில் அவன் உடலிலிருந்து ஒரு துளிக் குருதிகூட வெளிப்படுத்தப் படவில்லை. உடற்கும் உள்ளத்துக்குமுள்ள மின்னாற்றல்போன்ற இணைப்பை இந்நிகழ்ச்சி விளக்குவதாகும்.

இதற்குமாருக, மனவன்மையாலும், அழுத்தத்தாலும் நோயையும், சாவையும் வென்றவருமுளர்.

கொடிய நெஞ்சு நோயால் பீடிக்கப்பட்ட ஒருவன் சில மணி நேரங்களே உயிர் வாழக் கூடுமென்று தேர்ந்த மருத்துவர் கள் அறிவித்து விட்டனர். நோயாளி துடிதுடித்து "இறக்க ஒரு நாளும் நான் ஒப்பேன். என் சிறு குழந்தைகளை ஒரு துணையு மின்றி விட்டுவிட்டு நான் இறப்பதா? ஒருகாலும் முடியாது." என்று நெஞ்சுறுதியோடு நினைத்த வண்ணமாகவே யிருந்து பிழைத்தெழுந்து மகவுகளைப் பேணிப் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்தானென்று ஒரு மெய் நிகழ்ச்சி உள்ளது.

ஒரு தேர்ந்த பண்டுவர் நம்மைக் காக்க விருக்கின்ருர்; நாம் உறுதியாக நலமடைவோமென்னும் நம்பிக்கையே பல நோயாளிகளைச் சாவின் வாயிலிருந்து தப்ப வைத்திருக்கிறது.

கடந்த உலகப்போர் நடைபெற்ற பொழுது ஒரு தொத்து நோய் பரவிற்று. போர்க்களத்துக்கு ஏற்ற மருந்துப் பொருள்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் வந்து சேரவில்லை. பட்டறிவுள்ள ஒரு மருத்துவத் தேர்ச்சியாளர் மருந்துகள் வந்துவிட்டதாகப் பொய் கூறி; வண்ணங்கலந்த நீரை நோயுற்ற படை மறவர் களுக்குக் கொடுத்து வந்தார். எல்லாரும் நலமடைந்தனர்.

ஒரு துணியையோ, உடையையோ உடுக்கையில் அது ஒரு தொழு நோய் அல்லது தோல் நோய் பிடித்தவனுடையதென்று அணிபவரிடம் சொல்லிப் பாருங்கள். உடனே அவர் உடல் முழுதும் ஊரல் எடுத்ததுபோல் சொரிந்து கொள்வார்.

மனத்தின் இயற்கை நிலையை உணர்ந்த அறிஞர்கள், அத் தெளிவைப் பலவகைகளிலும் பொதுநலம்பேணப் பயன் படுத்து

வர். சான்ருக பிரெஞ்சு நாட்டின் தென் பகுதியில், ''லூர்டசு'' (Lourdes) எனும் நகரில் ஒரு தெய்வப் பெண்ணின் படிமம் மலைச்சாரலில் செதுக்கப்பட்டுள்ளது. பக்கலில் ஒரு நீரூற்று வழிகிறது. இனிப் பிழைக்கமாட்டார்களென கைவிடப்பட்ட நோயாளிகள், பலர் அங்கு எடுத்து வரப்பட்டு மிக விரைவாய் உடல் நலம் எய்தப் பெறுகின்றனராம். அங்குள்ள தெய்வமா, ஊற்று நீரா, காற்ரு-எதனுல் அவர் நலமுறுகின்றனர் என்னும் ஆராய்ச்சிநிகழ்த்தப்பட்டு, முடிவில் உள்ளத்துஆழ்ந்த, வலிந்த நம்பிக்கையே பலனளிக்கின்றதென்று முடிவு கட்டியுள்ளனர்.

ஒரு நாட்டியக் குழுவின் மேலாளர் சிறு சிறு நாட்டுப்புற ஊர்கட்குச் சென்று நாகரிகமும், நற்பழக்கங்களுமறியாத இளம் பெண்களை அழைத்து வந்து, நிறைய ஊதியங்கொடுத்து பல்லாற்ருனும் புரந்து அவர்களைப் பேரழகிகளாகவும், தேர்ந்த நாட்டியக் கலைப் பெண்டிராகவும் மாற்றிஞராம். நாளும் அப் பெண்கள் ஒவ்வொருவரிடமும் சென்று ''நீ இப்பொழுது அழகியாய் மாறிவிட்டாய்; மற்ற பெண்களைவிட உன் முகத்தில் களையும், குறுகுறுப்பும் கவர்ச்சியும் மிகுதியாய்க் காணப்படுகின்றதென அவர் ஊக்க மூட்டுவாராம். அவர்கள் அதை நம்பி நாளடைவில் அப்பண்புகளையே கைவரப்பெறுவாராம்.

உடல் நலமிக்க நண்பர் ஒருவரைப் பார்த்து, ''உம் உடம்புக்கென்ன? மிக இளைப்பாகக் காணப்படுகின்றீரே''என்று நாளும் சொல்லிப் பாருங்கள். அவர் கடிதில் நோயாளியாகவே ஆகக்கூடும். நமக்கு உடல் நலங் குன்றிய காலை'' அதெல்லாம் ஒன்றுமில்லை ... நாளை சரியாய் விடுமென்று நோயைப்பற்றிக் கவலுருது உடல் நலத்தில் நம்பிக்கை வைப்போமாயின் நோய் எளிதில் நீங்கும்.

நாளும் காலை மாலை அரை மணிப் பொழுது ஒரு சாய்வு நாற்காலியிலமர்ந்து ''என் உடல் நலமடைந்து வருகிறது, என் இருமல் நோய் படிப்படியாக மறைந்து நலமடைந்து வருகிறது'' என்று சொல்லி, ஒருவர் அந்நோயினின்றும் 20 நாட்களில் முழு நலமடைந்தார். மீண்டும் அந்நோயைப் பெறவில்லை.

மனதைக் கட்டுப்படுத்தி அதன் ஆற்றலைப் பெறுவதற்குத் தற்குறிப்பு (Auto-Suggestion) முறை என்று பெயர். வெளித் தொடர்புகளில் அறிவு அடங்கியுள்ள வைகறையிலும் இரவு துயிலுமுன்னும் ஆற்றலொடு திகழும் அக்கால் எளிமையாகவும் சிறு முயற்சியிலும் அவ்வுள்ளுணர்வு நம் வயப்படக் கூடிய வகையில் எண்ணங்களை அதனிடம் செலுத்த வேண்டும்.

மிகவும் விரைவாகவோ, முரட்டுத் தனமாகவோ அதை அணுகி உந்த இயலாது. கண்களை மூடிக்கொண்டு அரைத் தூக்கமாயுள்ள பொழுது தான் உள்ளுணர்வு விழித்தெழும். தீர்வுகாண முடியாத சிக்கல்களை அக்காலங்களில் ஆழ எண்ணி உள்ளுணர்வின் பால் ஒப்படைத்து விடுவோமாயின், விழித் தெழும் பொழுதோ பின்போ அச் சிக்கல்களுக்கு விடைகள் நம் மனத்தின் கண் எதிர்பாராத வகையில் பளிச்சிடுதல் கண்கூடு. உள்ளுணர்வொன்றிய முயற்சியின் பயனாகத்தான் புத்தம் புதிய ஆராய்ச்சி முடிவுகளும், புது சமயங்களும், கோட்பாடுகளும், அறிவியல் இறும்பூதுகளும் கண்டு உலகிற்கு அளிக்கப்படு கின்றன.

காந்தியடிகளுக்கு இவ்வகை மனவழி வாழ்க்கையில் நம் பிக்கை மிகுதி. மெய்யறிஞன் ''சாக்ரடீசு'' எண்ணத்திலாழ்ந்து இரவு பகலாய் ஒரே நிலையிலிருந்து விடுவாரென்று வரலாறு கூறுகின்றது.

நமது துறவிகளும், தவ முனிவர்களும் அறிதுயிலில் பல காலம் அமைதியாக விருப்பதும் உள்ளொளி பெறுதற்குத்தான்.

சிலர் இயல்பாகவே உள்ளத்தைக் காரணமின்றி அலட்டிக் கொண்டு கவலையுறுவார்கள். அத்தகையவர்கள் எதைப்பற்றி எவ்வளவு கவலைப் படலாமென்ற அளவு தெரியாதவராவர். அமைதியும் ஆறுதலும், பொறுமையுமில்லாதவர்கள். செல்வர் ஒருவரின் மகன் ஒருவன் தன் தந்தையிடம் ''இங்குத் தொல்லை தாங்கவில்லை, 300 கற்களுக்கப்பால் உள்ள ஒருமலை நாட்டிற்குப் போய்ச் சின்னாட்கள் ஓய்வெடுக்கப் போகிறேன்'' என்று சொல் லிப் புறப்பட்டான். தந்தை ஒரு மடலை எழுதி உறையில் போட்டு ஒட்டிக் கொடுத்து, 'அங்கு சென்ற மூன்று நாட்களுக் குப்பின் இதனைப் பிரித்துப் படி' என்றார். அவ்வாறே அங்குப் போய் மூன்றாம்நாளில் மடலைப் பிரித்துப் பார்த்தான். ''மகனே, அமைதி என்பது உன் உள்ளத்துள்ளேயே உள்ளது. அதைத் தேடி மிகத் தொலைவு சென்று விட்டாய். தேவையின்றி அள வுக்கு மிஞ்சி அலட்டிக் கொள்ளும் உன் மனம் அங்குப் போயும் அமைதியடையாது'' என்று எழுதியிருந்தது.

மகனுக்கு அப்பொழுதுதான் தன்னுணர்வு முகிழ்த்தது. அடுத்த நாள் மூட்டையைக் கட்டிக்கொண்டு வீடு திரும்பினான்.

உலகம் துன்பமே நிரம்பியது அன்று. கலப்பற்ற இன்பமே நுகர்வாரைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இன்பமும் துன்பமும் இயற்கையென்றும், அவை நமக்குமட்டில் ஏற்பட்ட குறைபாடுகளல்லவென்றும் துன்பத்தை எதிர்த்து இன்பத்தைப்

பெறுவதே வாழ்வென்றும் உணர்ந்தால், நாம் அதற்காகக் கவலையுறமாட்டோம்.

> "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
> துன்பம் உறுதல் இலன்"

என்னும் குறளில் ஆழ்ந்த கருத்தமைந்திருக்கின்றது. இடையூறுகள் விலக்கக் கூடாதனவாகையால் அவற்றைப் புன் முறுவலுடன் வரவேற்க அணியமாயிருப்போமாயின், அவற்றின் கொடுமையும் நம்முடைய துயரும் ஒருவாறு குறையும்.

> "இடுக்கண் வருங்கால் நகுக அதனை
> அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்றார் குறளாசிரியர்.

நம் முன் வரும் துயரச் சூழ்நிலைகளை வெல்ல, பொறுத்துக் கொள்ளும் தன்மையும், விட்டுக்கொடுக்கும் பண்பும் நமக்குக் கட்டாயம் தேவை. ஒவ்வோர் இடரையும் வெல்ல ஒரு வழி உண்டு. பெரிய நெருக்கடிகளின்போது தான் அறிவின் தரமும் ஆற்றலும் வெளிப்படும்.

> தோல்விக்குத் துணை சோர்வும் சோம்பலும்;
> வெற்றிக்கு வித்து மறமும் ஆண்மையும்.

உரிமை வாழ்வு.

ஒரு நாடு உரிமை வாழ்வினும் வேறொன்றைப் பெரிதாக மதிக்குமானால் உரிமை வாழ்வை இழந்துவிடும். அதுமட்டுமா? எதைப் பெரிதாக மதிக்கின்றதோ அதையும் இழந்து விடும் என்பதுதான் வேடிக்கை.

— சோமர்செட் மாம்.

* * *

'பறந்த' வாழ்க்கை.

அணில் கொட்டைகளைச் சேர்ப்பதற்கும், மாந்தன் பணத்தைச் சேர்ப்பதற்கும் மிக வேறுபாடில்லை. அணிலைப்போலவே மாந்தனும் முதலில் அடிப்படைத் தேவைகட்கு என்றுதான் சேர்க்கிறான். ஆனால் அணில்களோ தங்கட்குப் போதியஅளவு எது என்று கண்டு அதோடு நிறுத்திக் கொள்கின்றன. மாந்தனுக்கோ அது தெரிவதில்லை. கண்ணை மூடிக்கொண்டு "இன்னும்" "இன்னும்" என்று ஆலாய்ப் பறக்கிறான், கவருட்டத்தில் மூழ்குவதுபோல் மூழ்கி உள்ளத்தை இழந்து விடுகின்றான். இத்தகைய மாந்தரினும் அணில்கள் எவ்வளவு மேலானவை!

— பெர்னட் பருச்.

முத்து

ஒன்பான் மணிகளில் இரண்டாவதாக வைத்தெண்ணப் பெறுவது முத்து. இது தொன்மைக் காலத்திலிருந்தே தமிழகத்தின் வாணிகப் பொருளாக விருந்து சிறப்புப் பெற்றது. நம் நாட்டிற்கு வந்த உரோமானியர், அராபியர், கிரேக்கர் முதலியோர் அளவற்ற பாண்டி நாட்டு முத்துகளைக் கலங் கலமாக ஏற்றிச் சென்றுள்ளதற்குப் பல சான்றுகள் உள. ஆரிய மறைகளிலும் அவர்தம் பழங் கதைகளிலும் தமிழ் நாட்டின் முத்துகள் சிறப்பிக்கப் பட்டுள்ளன. வான்மீகியும், சாணக்கியரும் பாண்டி நாட்டு முத்தைப் பலபடப் பாராட்டியுள்ளனர். கழக இலக்கியங்களிலும் பாவியங்களிலும் முத்தைப் பற்றிய செய்தி ஏராளம்.

கிரேக்க நாட்டுப் பயணி பிளினி (கி. பி. 75) என்பார் உரோமாபுரியின் பேரரசி உலோலியோ பாலினா என்னும் பேரழகி, தமிழ் நாட்டு முத்துகளை அவளுடைய காது, கழுத்து, தலை முதலியவற்றில் அணிந்திருந்தாள் என்றும், கிளியோபாத்திரா எனும் பேரழகி அக்கால் ஒரு கோடிப் பொன் செலவிட்டு நடத்திய பெரிய விருந்தொன்றில் தமிழகத்தினின்று வந்த பெரிய முத்து ஒன்றினை மதுக் குடத்தில் கரைத்து விருந்தினர்க்களித்தாள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரன்றி, கி. பி. முதல் நூற்றாண்டில் இங்குவந்த மெகசுதனிசு என்பாரும், யவன ஆசிரியர்களும், அராபிய, சீன, மூரிசு வாணிகர்களும், மார்க்கோ போலோ முதலியோரும் தமிழ் நாட்டின் முத்துப் பெருக்கத்தையும் விளைவையும் குறிப்பிட்டுள்ளனர்.

முத்துகள் வெப்ப நாடுகளிலேயே உண்டாகின்றன. மலேயா, சீனா, இலங்கை முதலிய விடங்களிலும் மால்டிக், சான்சிபார், மடகாசுக்கர், அந்தமான் முதலிய திட்டுகளிலும், பாரசீக விளைகுடாவிலும், செங்கடலிலும் முத்துகள் கிடைக்கின்றன.

முத்துகள் நீரிலும், நிலத்திலும் கிடைப்பதாகக் கூறப்படுகின்றது. நீரில் சிப்பி, சங்கு, மீன் தலை, தாமரை முதலியவற்றிலிருந்தும், நிலத்தில் முகில், மூங்கில், பாம்பின் தலை, பன்றிக் கொம்பு, வெண்ணெல், கரும்பு, யானை மருப்பு, அரிமாவின் முன்னங் கால்கள், பெண்டிர் கழுத்து, கொக்கின் கண்டம், கழுகு முதலியவிடங்களிலும் கிடைப்பதாகப் பழம் நூல்கள் கூறுகின்றன. ஆனால் சிப்பியிலிருந்தே பெரும்பாலும் நாம்

அவற்றைப் பெறுகின்றோம். யானை மருப்பில் தோன்றிய முத்து ஒன்று கன்னட நாட்டுக் கோயில் ஒன்றில் உள்ளதாம்.

கடலிலன்றி ஆற்று நீரிலும் முத்துகள் கிடைக்கின்றன. இவ்வகை முத்துகள் இசுக்காத்துலாந்து, அயர்லாந்திலும், மியாமி, மிசிசிபி ஆகிய பேராறுகளிலும், சப்பான் முதலிய விடங்களிலும் கிடைக்கின்றன.

முத்தின் மூலப்பொருள் சுண்ணும்புச் சாரமாகும். முத்தைத் தோற்றுவிக்கும் முத்துச் சிப்பியின் உட்புறத்தில் மெல்லிய தசை பொதிந்திருக்கும். சிப்பியின் இயக்கத்தின் பொழுது சிறு மண் துகள் ஒன்று அதன் தசைப் பகுதிக்குள் புகுமாயின், அதன் உறுத்தலால் துன்புறும் சிப்பி, ஒருவகைக் குழை நீர்க் கசிவைத் தன் தசையினின்று தோற்றுவிக்கின்றது. அக் குழைவான நீர் நாளடைவில் அம் மண்துகளைச் சுற்றிச் சூழ்ந்து உறுதிப் படுகின்றது. இவ் வழவழப்பும், பளபளப்பும் மிகுந்த இக் குழை நீர்த் தோய்வையே நாம் முத்து என்கிறோம். முத்தாக உருவெடுக்கும் இக் குழை நீர் சிப்பியின் உட்புற ஓடுகளில் படிவதால் அவையும் ஒளிவிடுகின்றன. சிப்பிக்குள் ஒட்டிக்கொள்ளாமல் உருண்டு திரள்கின்ற முத்தே மிகவும் சிறப்பாக மதிக்கப் பெறும். தசைத் திரளில் ஒட்டிக் கொண்டு உருவாகும் முத்தில் ஒட்டிய பகுதி தட்டையாக விருக்குமாகலின், அம் முத்து சிறப்பிழந்து விடுகின்றது. நல்ல ஒளியும், உருண்டை வடிவும், அழுத்தமான தோலும் உடைய முத்துகளே நன் முத்துகளாம்.

இதுவன்றி, வைகாசித் திங்களில் முத்துச் சிப்பி கடல் மட்டத்திற்கு மேல் வந்து வாய் திறந்து நிற்பதும், அக்கால் பொழியும் மழைத்துளி அதன் வாய் வழியே விழுந்து முத்தாக உருவெடுப்பதாகக் கூறுவதும் அறியாமையாற் பட்ட கட்டுக் கதையேயாம்.

இக்கால் தமிழகத்தில் தூத்துக்குடியிலும், இலங்கையில் தலைமன்னரிலும் ஏராளமாக முத்து விளைகின்றது இவ்விடங்களன்றிச் சூலு கடற்கரை, ஆத்திரேலிய, நடுவண் அமெரிக்கக் கடற்கரைப் பகுதிகள், தென் பசுபிக் திட்டுகள் முதலிய நாடுகளிலும் முத்துகள் கிடைக்கின்றன முத்துகள் உருண்டையாகவும், நீள் உருண்டையாகவும், தட்டையாகவும், முட்டை வடிவத்திலும், மேற்புறம் சொர சொரப்பாகவும், நீலங் கலந்தும், செம்மையுடனும், தூய வெண்மை நிறத்துடனும் கிடைக்கின்றன பொதுவாக மூன்று, ஐந்து அல்லது ஏழு மேல் தோல்களால் மூடப்பெற்ற முத்துகளே சிறப்பு வாய்ந்தவையாகக் கருதப் பெறுகின்றன.

சிப்பி, சங்கு இவற்றினின்று தோன்றும் முத்துகள் பெரும் பாலும் வெண்மை வண்ணத்துடன் இருக்கும். முகிலினின்று செம்மை வண்ண முத்துகளும், மூங்கிலிலிருந்து வெளிர் பச்சை வண்ண முத்துகளும், பாம்பினின்று நீல வண்ண முடையனவும் பன்றியின் பல்லில் குருதியின் நிறத்தனவும், வெண்ணெற்களில் பச்சை வண்ண முற்றனவும், மீனின் தலையில் வெண் சிவப்பு நிறமுடையனவும், யானை மருப்பு, கரும்பு இரண்டிலும் பொன் நிறம் உடைய முத்துகளும் கிடைக்கும் என்று இரத்தின தீபிகை முதலிய நூற்கள் கூறுகின்றன.

முத்துக் குளியல் பத்தாண்டுகட் கொருமுறை நடைபெறும். நம் நாட்டில் இன்னும் பழைய முறைப்படிதான் முத்துக் குளியல் நடைபெறுகின்றது. முத்துக் குளிப்பதற்கென்றே மக்கள் பயிற்றப்படுகின்றனர். 50, 60 நொடி முதல், 5 நிமையம் வரை மூச்சுப் பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களே இத்தொழிலில் ஈடுபட முடியும். சீனு, சப்பான் முதலிய நாடுகளிலேயே முத்துக் குளியல் அறிவியல் முறைப்படி நடைபெறுகின்றது. நம் நாட்டிலும் சீனுவிலும் பிற நாடுகளிலும் ஆடவர்களே முத்துக் குளியலில் ஈடுபடுகின்றனர். சப்பானில் இருபது ஆண்டுகட்குட்பட்ட பெண்டிரே இத் தொழிலைச் செய்கின்றனர். அவர் தம் ஈரல்கள் நெடு நேரம் குளிர்ச்சியைத் தாங்கும் வன்மையுடையனவாகலின் அவர்களே இதற்குத் தகுதியானவர் என்று அங்குக் கருதப்படுகின்றது. அப் பெண்டிர் நல்ல மூச்சுப் பழக்கம் உடையவராயுள்ளனர். 5 முதல் 7 நிமையங்கள் வரை அவர்கள் நீரினுள் இருப்பார்களாம்

சீனுவில் முத்துக் குளியலில் ஒரு புது முறையும் கையாளப் படுகின்றது. முற்றி முதிரா இளஞ் சிப்பிகளைப் பொறுக்கி வந்து, மிக விழிப்புடன் சிப்பிக் குள்ளிருக்கும் புழுக்களுக்கு ஊறு நேரா வண்ணம் அவற்றைத் திறந்து, சிறு சிறு ஈயக் குண்டுகள், மரத் துகள்கள், தகரங்கள் முதலியவற்றை உள்ளே தள்ளி விடுகின்றனர். அவ்வாறு நுழைக்கப் பெற்ற சிப்பிகளைத் தனியே, அவற்றிற்கென அமைக்கப்பெற்ற பெரிய குட்டைகளிலும் குளங்களிலும் விட்டுவிடுகின்றனர். இரண்டு மூன்றுண்டுகளுக்குள் இச் சிப்பிகளுள் முத்து திரள்கின்றது. இப்படி நுழைக்கும் ஈய உருண்டைகளில் புத்தர் போன்ற படிமங்களைச் செய்து சிப்பிகளின் உள்நுழைக்க, அவற்றிலிருந்து திரளும் முத்துகள் புத்தர் போன்றே அமைகின்றன. இம் முறையில் அவர்கள் வேண்டிய வடிவங்களைச் செய்து கொள்கின்றனர்.

முத்துக் குளிப்பார் எடுத்து வரும் பல்லாயிரக் கணக்கான சிப்பிகளில் மிகச் சிலவற்றிலேயே நல்ல முத்துகள் காணப் பெறுமாம். இவற்றிற்குத் துணையிட்டுச் செயற்கை வண்ணங்களையும்

ஏற்றுகின்றனர். இயற்கையாகக் கிடைக்கும் முத்துகளைப் போலவே செயற்கையான முத்துகளை ஏராளமாகச் சப்பானிலும் செய்கின்றனர். தமிழ் நாட்டில் இத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் மிகக் குறைவே. செயற்கை முத்தா, இயற்கை முத்தா என்று கண்டறிய வழிவகைகளும் உண்டு.

முத்துகள் மருந்தாகவும் பயன்படுகின்றன. இதைப் பொடி செய்யவும் இயலும். இப் பொடி ஆண்மைப் பெருக்கத்திற்கும், ஈளை இருமல் முதலிய நோய்கட்கும் பயன்படுமென்று மருத்துவ நூற்கள் கூறுகின்றன. இருமல் நோய்க்காரர், முத்துச் சிப்பியின் தசையை அவித்து இறைச்சிபோல் உண்ணுவாராயின் நோய் நீங்கி நலம் பெறுவர் என்று "குண பாடம்" என்ற நூல் குறிக்கின்றது. ஆணி முத்து என்பது மீன் விழிகளிலிருந்து செய்யப்படும் ஒருவகைச் செயற்கை முத்து என்றும், அதைச் செய்யும் முறையினையும் வைத்தியக் களஞ்சியம் என்ற நூல் விரித்துக் கூறுகின்றது.

இதுவரை கிடைத்த முத்துகளில் மிகவும் பெரியது $4\frac{1}{2}$ விரற்கடை சுற்றளவுள்ளதும், 3 அவுன்சு நிறையுள்ளதுமான ஒரு முத்தேயாம். இது இலண்டனில் உள்ள தெற்கு கென்சிங்டன் பொருட்காட்சியில் உள்ளது.

துன்ப (ஏ) மாற்றம்!

கிரேக்க வரலாற்றுசிரியர் ஒராட்டசு கீழ்வருமாறு ஒரு கதை கூறியுள்ளார். எல்லார்க்கும் பொதுவான விடத்தில் ஒரு பெரிய சந்தை கூடியது. அதில் உலகினர் யாவரும் தத்தமக்கு ஏற்பட்ட துன்பங்களையும், துயரங்களையும் முற்றுப் பெறு ஆவல்களையும், குறைகளையும் தேவைகளையும் பெரிய பெரிய மூட்டைகளாகக் கட்டி எடுத்துக் கொண்டுபோய் அங்குப் போட்டுவிட்டு அவற்றிற்கு மாறாக அவ்வாறே பிறர் கொண்டு வந்தனவற்றுள் தமக்குப் பிடித்தமானவற்றை மாற்றியெடுத்துக் கொண்டு போகலாம் என்று ஆணையிடப்பட்டது. இப் பண்டமாற்றுச் சந்தைக்குப் பலரும் தங்கள் தங்கள் இடர்ப்பாடுகளையும் ஏக்கங்களையும் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு இவற்றைவிடச்சிறிது குறைவான துன்பத்தையும் துயரத்தையும் ஒருநாள் முழுதும் தேடி அலசி ஆராய்ந்து பார்த்துவிட்டு முடிவில், எல்லாருடைய துன்ப துயரங்களை விடத் தம் தம் துன்பமும் துயரமுமே குறைவாகவும், பொறுத்துக் கொள்ளக் கூடியனவாகவும் இருப்பதைக் கண்டு, தாம்தாம் கொண்டுவந்த மூட்டை முடிச்சுகளையே மீண்டும் எடுத்துக் கொண்டு சென்றனராம்.

இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது வெறும் தோற்றமே!

— மன்றிலாடி.

அவருக்கு!

இங்கிருந்த நாட்களிலே 'உனைமறவேன்' என்றீர்;
'இருப்பேனே உனைமறந்தால் உயிருடனே' என்றீர்;
'பொங்கிதழ்த்தா மரைமறந்த வண்டுண்டோ' என்றீர்;
'போந்திடுமோ நீர்மறந்து மீன்'என்றீர்; இங்கே
தங்கியிரு; ஊர்செல்வேன் இன்றைக்கே; நாளை
தந்தைவரு வார்உன்றன் தந்தையுடன் பேச;
மங்கலமாய் மணப்பேச்சு முடிந்துவிடும்; பின்னர்
மணமக்கள் நாம்'என்று விடைகொண்டீர் அத்தான்!

இங்கிருந்து போனவுடன் சொன்னவையும் போச்சோ?
எனைப்பிரிந்து போய்மூன்று மாதங்கள் ஆச்சே!
எங்கிருந்தோ யார்யாரோ பெண்பார்க்க வந்தால்
என்னுயிரை வாங்குகிறார் பெற்றோர்கள் இங்கே!
தங்கநகை பூட்டிமுழப் பூச்சூட்டி என்னைத்
தள்ளுகின்றாள் வந்தவர்முன் எனைப்பெற்ற தாயே!
செங்கதிரைக் காணாத தாமரைதான் விண்ணில்
சிரிக்கின்ற மதிகண்டு மலர்ந்திடுமோ அத்தான்?

வம்பளக்கும் வாயுடையான் ஒருவன்வரு கின்றான்;
வருவதிலே ஒருநாளும் தவறுவதே இல்லை;
நம்புகின்ற வகையினிலே அளக்கின்றான் பொய்யை!
நல்லமண மகனென்று படங்காட்டு கின்றான்;
'தம்பியைப்போல் ஒருபிள்ளை வையகத்தி லில்லை;
தக்கவன்நம் பெண்ணுக்கே' எனச்சொல்லிக் காய்ந்த
கம்பியைஎன் காதினிலே பாய்ச்சுகிறான்; அந்தக்
கயவனையென் பெற்றோர்கள் தரகனெனச் சொன்னார்!

கோள்கணியர் வந்துவந்து பிறந்தகுறிப் பாய்ந்து
கூறுகின்றார் பொருத்தங்கள்; உயிர்க்கூறு செய்வார்!
நாளொன்றா? என்னுயிரே, பாம்பிருக்கும் வீட்டில்
நாட்களெண்ணிக் கொண்டிருக்கச் செய்துவிட்டீர்!
அத்தான்,

ஆள்பார்த்தே என்பெற்றோர் மணம்பேசு முன்னர்
அடியவளின் செல்லுயிரைக் காத்தற்கு வாரீர்!
நாள்தேய்த்துக் கொண்டிருப்பேன்; நாளைஎதிர் பார்ப்பேன்!
நங்கைமணம் பேசப்பெற் றோரைவரச் செய்வீர்!

- தமிழவேள் -

நிகண்டுகள்.

—*—

நிகண்டு என்பது இலக்கண வகை நூல்களுள் ஒன்று. சொல்லையும் அதுகூறும் பொருளையும், பொருள் வரிசையில் தொகுத்துக் கூறும் நூல்களையே **நிகண்டுகள்** என்று அழைக்கிறோம். நிகண்டு என்ற சொல்லுக்குத் தொகுதி அல்லது கூட்டம் என்பது பொருள். அஃறிணை, உயர்திணை, வினைச் சொல் போன்ற பிரிவுகளாகப் பிரித்துச் சொற்றொகுதியைக் கூறுமாறு செய்யுள் நடையில் எதுகை, மோனை நயத்தோடு எளிதில் மனப்பாடஞ் செய்தற்கேற்றவாறு நிகண்டுகள் அமைந்துள்ளன. நிகண்டைத் தமிழில் **'உரிச்சொற் பனுவல்'** என்றழைக்கும் மரபுண்டு.

வட மொழியில் நான்மறைக்கு உறுப்பாய் மறைச் சொற்களின் பொருளுணர்த்தும் முறையாக **'நிருத்தம்'** என்னும் நூல் வகை உண்டு. அந்நிருத்த நூலின் ஒரு பகுதியே நிகண்டு என்பர். நிகண்டு என்ற சொல் காரணப் பெயரன்றி இடுகுறிப் பெயரே என்பது நன்னூல் பாயிரத்தின் கருத்து.

வை. தட்சிணாமூர்த்தி, கலைத் தலைவர் (எம். ஏ.)
(அரசினர், கண்ணிய மொழி பெயர்ப்பாளர்.)

தமிழில் நிகண்டு:

தமிழ் மொழி, சொல்வள மிகுதிக்குச் சிறப்புப்பெற்ற மொழிகளுள் தலையாய ஒன்று. சிறந்த செய்யுள் வகைகளும், சொற் பெருக்கும் உடைய மொழியாகையால் அச் சொல் நலம் கூறும் இலக்கணப் பகுதி நெடுங்காலமாகவே தமிழ் இலக்கணத்தின் பகுதியாக இருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமேதுமில்லை. தொல்காப்பியத்தில் மரபியல், சொல்லுக்குப் பொருள் கொள்ளும் மரபினை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. பிற்கால நிகண்டுகளின் வளர்ச்சிக்கு வித்து தொல்காப்பிய மரபியலிலேயே அமைந்துள்ளது.

எட்டுத் தொகையில் நற்றிணை 382-ஆம் பாட்டைப் பாடிய புலவரின் பெயர் **நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார்** எனக் குறிப்பிடப்படுகிறது. இப்பெயரில் நிகண்டன் என்று வருவதை நோக்க அப்புலவர் நிகண்டு ஒன்றை ஆக்கியிருக்க, அது கிடைக்காமல் போயிருக்கலாம் என்று கருதவும் இடமுள்ளது.

கிடைக்கும் முதல் நிகண்டு:- திவாகரம்.

திவாகரர் என்பவர் சேந்தன் என்ற மன்னவன் காலத்துப் பாடியதாகக் கூறப்படும் திவாகர நிகண்டு என்பதே இன்று நமக்குக் கிடைக்கும் நிகண்டுகளுள் பழையது. இதற்கு முதல் நூலாக **ஆதி** திவாகரம் என ஒன்றிருந்திருக்க வேண்டும் என்பதும் உண்டு. அன்றி இந் நூலுக்கே ஆதி திவாகரம் என்ற பெயரும் இருந்திருக்கலாம். இத்திவாகர நிகண்டைச் '**சேந்தன் திவாகரம்**' என அழைப்பர். திவாகர நிகண்டு பத்துத் தொகுதி களாகப் பொருளை வகுத்து 2256 நூற்பாக்களில் மொழிகின்றது. திவாகரரைச் சமணர் என்பாரும் சைவர் என்பாரும் உளர். திவாகர நிகண்டில் வேளாளருக்குப் பத்து வகைத் தொழில் கூறப்பட்டுள்ளது. சாளுக்கிய மன்னரைப் பற்றிய குறிப்புகள் திவாகர நிகண்டிலும் கூறப்பட்டுள்ளன. 'ஒருமை' என்ற சொல் லுக்குத் திவாகரம் 'இறையுணர்வு' எனப் பொருள் கொள்வதால் அவர் சைவர் என்பர். திவாகர நிகண்டில் பல் பொருட் பெயர்த் தொகுதியில் 'அருவந்தைச் சேந்தன்' என்று வருகிறது. கழகக் காலத்து வாழ்ந்த 'அம்பர் கிழான் அருவந்தை' எனப் புற நானூற்று 385-ஆம் செய்யுள் ஒருவரைப் பாராட்டுகிறது. அத னோடு அருவந்தைச் சேந்தன் என்ற சொல்லையும் சேர்த்துக் காட்டித் திவாகர நிகண்டு கழகக்காலத்து எழுந்தது எனக் கூறு வாரும் உளர். திவாகர நிகண்டில் பிற்கால வழக்குகள் குறை வாகவும், கழக வழக்கு நிறைந்தும் இருக்கக் காண்கிறோம்.

பின்னர் தொடர்ந்த பிங்கலம்:

பிங்கல நிகண்டு என்பது பிங்கல முனிவரால் எழுதப்பட் டுள்ளது. இது ஆசிரியர் பெயராலேயே வழங்குகிறது. இது வும், திவாகரமும் ஒரே கால நூற்கள் என்று கூறும் மரபும் உண்டு. பிங்கல முனிவர் திவாகரரின் மகன் எனவும் கூறுவர். பிங்கல நிகண்டு சில அறிவு (ஆகம) நூற்பயன்களையும், சிவ வழிபாடு என்பது ஒழுகலாறு (சரியை) சடங்கு (கிரியை) மெய் யறிவு (ஞானம்) தவம் (யோகம்) என்பதாகவும் கூறுகின்றது. இந் நிகண்டில் பல்லவர் இழிந்தவராகக் கூறப்பட்டுளர். இத னுள்ளும் திவாகரத்திற் கண்டவாறு பத்தே பகுதிகள் உள. திவாகரத்திற் கூறப்படாத சில கடினச் சொற்களை மட்டுமின்றிப் பல பிற்கால வழக்குகளையும் இந்நூல் விரித்துக் கூறுகின்றது.

திவாகரத்தினும் பிங்கலம் விரிவானதாயினும் அருகர், புத் தர் இவர்கள் பெயர்களைக் கூறுமிடத்து திவாகரத்தைவிடப் பிங் கலம் சுருங்கியுள்ளது. திவாகரத்தில் கூறப்படாத வைணவம் பிங்கலத்தில் கூறப்பட்டுள்ளது. சமயங்களைப் பற்றிக் கூறுகை யில் திவாகரம் புறச் சமயங்களை மட்டும் குறிப்பிடும். பிங்கலம்

அகச் சமயங்களையும் கூறும் நிகண்டுகளின் பகுதிப் பெயர்களைக் கூறும் பொழுதும், பொருளமைதியிலும் திவாகரத்தினின்று பிங்கலம் வேறுபடுகின்றது. சூடாமணி நிகண்டின் சிறப்புப் பாயிரத்தில் திவாகரத்தைவிடப் பிங்கலம் சிறப்புடையது என்ற பொருள்பட **'சிறப்பின் மிக்க பிங்கலர்'** என்ற குறிப்பு வருகிறது.

சூடாமணி நிகண்டு:

வட மொழியில் 'மகா புராணம்' இயற்றிய குணபுத்திரரின் மாணுக்கரான மண்டல புருடர் என்பவர் சூடாமணி நிகண்டினை இயற்றினுர். சூடாமணி நிகண்டு பன்னிரண்டு தொகுதிகளை உடையது. சூடாமணி நிகண்டில் 'கிருட்டினராயன்' என்ற பெயர் செயல் பற்றிய பெயர்த்தொகுதியில் குறிப்பிடப்படுகிறது. கால ஆராய்ச்சிக்காரர்கள் இம் மன்னன் மைசூர் நாட்டு இரண்டாம் கிருட்டிணு என்ற மன்னனு அல்லது விசயநகர மன்னனுன கிருட்டின தேவராயரா என ஆராய்வர். மண்டல புருடர் சமண சமயத்தவர் எனக் கருதப்படுகிருர். மண்டல புருடர் தம் சூடாமணி நிகண்டில் பன்னிரண்டாம் நூற்ருண்டில் எழுந்த பாசுக்கரனுரின் கணித நூலைக் குறிப்பிட்டுள்ளார். மற்றும் தனது ஆசிரியரை, 'மகிழ் குணபத்திர னெங்கள் வழித் தெய்வம்போல்வான்' எனச் சிறப்பித்துள்ளார். மற்றும் தமக்கு முதல் நூல்களாய் அமைந்த திவாகரம், பிங்கலந்தை இரண்டையும் ''வருமுறை திவாகரம்போல் வைத்துப்பிங்கலந்தை தன்னில்'' எனவும் குறிப்பிடுகின்ருர். மண்டல புருடர் சூடாமணி நிகண்டைத் தவிர, சமண புராணம் ஒன்றும் இயற்றியுள்ளார் என்பதற்கான அகச் சான்றும் சூடாமணி நிகண்டில் உள்ளது

உரிச் சொல் நிகண்டு:

காங்கேய முனிவர் இயற்றியது உரிச்சொல் நிகண்டு. இது வெண்பா யாப்பால் ஆகியது. சூடாமணி நிகண்டைப் பின் பற்றியே உரிச்சொல் நிகண்டு ஆக்கப்பட்டுள்ளது.

காங்கேய முனிவர் வேளாண் மரபினர் என்றும், செங்கற்பட்டில் இருந்தவர் என்றும் கூறுவர். செய்யுளில் வழங்கும் திரி சொற்களுக்கு மட்டுமே இதில் பொருள் கூறப்பட்டிருப்பதால் உரிச் சொல் நிகண்டு எனப் பெயர் பெற்றது. திரி சொல்லுக்கு உரிச் சொல் என்று பெயர். இதுவும் சூடாமணி நிகண்டைப்போலவே பன்னிரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. சிலர் இவ்வுரிச் சொல் நிகண்டில் பத்துப் பிரிவுகளே காங்கேயரால் எழுதப்பட்டன, பின் இரண்டு பிரிவுகளும் பிற்சேர்க்கையாக வேறு எவரோ எழுதிச் சேர்த்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

கயாதர நிகண்டு:

கயாதர நிகண்டு அகர முதலிகளின் வரலாற்றில் ஒரு சிறப்பிடம் பெறுகின்றது. திவாகரமும், பிங்கலமும் நூற்பாவினுல் ஆக்கப்பட்டன. ஒரு நூற்பாவுக்கும் மற்றொரு நூற்பாவுக்கும் பொருள் பற்றிய தொடர்பின்றி வேறு தொடர்பு இருக்காது. கயாதரம் கட்டளைக் கலித்துறை யாப்பினுல் ஆயது. கற்பவர்கள் எளிதில் நினைவு கொள்ளத் தக்கவாறு இதன் நூற்பாக்கள் இறுவாய்த் தொடையாக அமைக்கப்பட்டுள்ளன. இம்முறை ஒரு பொருள் பற்றிய பல செய்திகளையும், இயல் முழுதுமுள்ள செய்யுட்களையும் எளிதில் நினைவுகூர ஏற்ற வழியாக அமைந்திருக்கிறது. கயாதரத்தில் புத்தன், கவுந்திபோன்ற சில பெயர்களின் உண்மை வடிவமும், பொருளும் வரையறுக்கப்பட்டுள்ளன. கவுந்தி என்ற சொல்லுக்குத் திவாகரம் 'அருந்தவப் பெண்' என வரையறுத்துப் பொருள் கூறும். கயாதரத்தில் வட சொற்களை எடுத்தாளும்போது வட மொழியில் ரகரம் வருவதற்கு இயலாச் சில விடங்களில் றகரத்தை அமைத்து ஒலிக் குறிப்புக் காட்டப்படுகிறது. கயாதரர் இக்காலத்துப் பொருள் விளங்காத குலித்த, திவரும், துயிரில் போன்ற அடை மொழிகளின் பொருள்களை விளக்கியுள்ளார். கயாதர நிகண்டில் 'குலீனன்' என்ற சொல்லுக்கு 'குலஈனன்' எனப் பிரித்துப் பொருள் கூறப்பட்டுள்ளது. இது போன்ற பல சிறப்புகளும் பொருந்திய கயாதர நிகண்டைத் திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்துள்ளார்கள். கயாதரத்தில் பதினொரு பிரிவுகளில் 566 செய்யுட்கள் இருக்கின்றன. இறுதியான பதினோராவது பிரிவு பற்றிக் கருத்து வேற்றுமைகளும் உண்டு.

அகராதி நிகண்டு:

அகராதி, நிகண்டினை இரேவண சித்தர் இயற்றியுள்ளார். இதனைச் ''செந்தமிழ்'' இதழாசிரியர் நாராயண ஐயங்கார் பதிப்பித்துள்ளார். இந் நிகண்டும் பத்துத் தொகுதிகளையே உடையது. நிகண்டுகள் பெரும்பான்மையும் ஒரு பொருட் பல பெயர்களை உணர்த்துவது இயல்பு இவ்வகராதி நிகண்டு அதனையொழித்து ஒவ்வொன்று ஒவ்வொரு பொருளும், பல பொருளும் உணர்த்தும் சொற்களையே அகர முதலாகத் தொகுத்து நூற்பா யாப்பிற் கொணர்ந்து பொருள் உரைக்கின்றது. பிற நிகண்டுகளில் காணப்படாத கழக மருவிய சொற்களும், பிற்கால நூல்களிலும் உரைகளிலும் வழங்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்களும், உலக வழக்கில் உள்ள வெளிப்படைச் சொற்களும், தெலுங்கு, கன்னடம் முதல் தமிழ் திரி, பிற மொழித்திரி சொற்களும், வட சொற்களும் பிற திசைச் சொற்களும் மலிந்து கிடக்கின்றன. இந் நிகண்டில் முதல் எழுத்துகள் அகர வரிசையில் அமைக்கப்

பட்டிருக்கும். நூலாசிரியரை புலியூர்ச்சி தம்பர இரேவண சித்தர் எனவும் நூலை 'இரேவணத்திரியர் சூத்திரம்'எனவும் அழைத்தல் உண்டு.

பொதிகை நிகண்டு:

நெல்லை மாவட்டத்தைச்சேர்ந்த கல்லிடை நகரில் வாழ்ந்த சாமிநாதக்கவிராயர் என்பவர் பிற்காலத்தில் எழுதிய நிகண்டே பொதிகை நிகண்டு எனப்படுவது. இதனையும் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களே பதிப்பித்துள்ளார்.

இந்நிகண்டு இரண்டு பகுதிகளை உடையது. முதற் பகுதி சூடாமணி நிகண்டை அடிப்படையாகக் கொண்டு பத்துப் பிரிவு களில் அமைந்திருக்கிறது. அதில் 492 செய்யுட்கள் உள. இரண்டாவது பகுதி அகர வரிசையில் உயிர் வகையில் பன்னி ரண்டு வகுப்புகளையும், மெய்வகையில், எட்டு வகுப்புகளையும் உடையதாக நூற்பாவினுல் ஆகி நிற்கின்றது.

நா நார்த்த தீபிகை:

நா நார்த்த தீபிகை என்பதும் ஒரு நிகண்டே. நெல்லை. கவிராச முத்துசாமிப் பிள்ளையவர்கள் இயற்றிய இந் நிகண்டை ஆசிரியர் திரு. அனவரதப் பிள்ளை அவர்கள் பதிப்பித்துள்ளார். இந் நூல் 1102 விருத்தப்பாக்களால் ஆகி 5452 சொற்களுக்கு ஒரு சொல் பல பொருள்களை யுரைக்கின்றது. ஆசிரியர் தற் சிறப்புப் பாயிரத்தில் ''ககராதி னகர வீறெதுகை வைத்து அதிற் கலப்புருது அடைவே பொருள்பெற எழுத்தின் முறையில் நாநார்த்த தீபிகை'' எனக் குறிப்பிடுவதால் இதன் முறை எளி தில் விளங்கும்.

இந் நிகண்டில் வட சொற்களின் விளக்கம் வேறெந்த நிகண்டினும் இல்லாத வகையில் விரிவாகக் கூறப்படுகிறது. அடைசொல் கொடுத்து எளிதிற் செய்யுள் பாடாது இவர் பல பாடல்களில் பொருளைக் கூறுவர். இந் நூலில் விருத்தாப்பாக் களின் பலவகை யாப்புக்களையும் காணலாம். இதில் இரண் டொரு செய்யுட்கள் பொருள் பிறழ்ந்தும் தெளிவு இன்றியும் காணப்படுகின்றன.

முடிவுரை:

மேற்கண்ட நிகண்டுகளே அல்லாமல் நாமதீப நிகண்டு என்ற நிகண்டொன்றும் வெளிவந்துள்ளது. நிகண்டுகளின் வளர்ச்சியும் முறையமைப்பு வளர்ச்சி போன்றது. தமிழில் சொற் பெருக்கு, சொற் பிறப்பு முறை போன்றவற்றை அறிய நிகண்டு கள் பெரிதும் துணை புரிவன.

-- பொருளரசன்

மறப்பேனோ?

துள்ளிவரும் கடலலையை நில்லென்றால் நின்றிடுமோ?
தோய்ந்த அன்பை
அள்ளிவரும் அவர்முகத்தை மறவென்றால் மறப்பேனோ
அவரும் நானும்
வெள்ளிவரும் நேரமெலாம் மகிழ்ந்துறைந்த காலமெலாம்
விரும்பி ஏற்றாய்,
எள்ளிவரும் என்நெஞ்சே மறஎன்றே எனைஇன்றே
ஏன்சொல் கின்றாய்?

கொல்கின்ற வேலான – உயிரூட்டும் மருந்தான
கடைக் கண் வீச்சால்,
சொல்கின்ற கருத்தெல்லாம் ஏற்கின்றாய்; நாநலத்தால்
சொக்க வைத்து
வெல்கின்ற பேச்சாளர் என்றெல்லாம் புகழ்கின்றாய்;
விரும்பி நானே
செல்கின்ற நேரத்தில் வன்நெஞ்சே மறந்திடவா
செப்பு கின்றாய்?

அழகிலையா? அன்பிலையா? பண்பிலையா? ஆன்றமைந்த
அடக்கத் தோடு
பழகத்தான் தெரியாதா? படிப்பிலையா? காதலித்த
பயனைத் துய்க்கும்
விழைவிலையா? பொருளிலையா? அருளிலையா? பெண்
விரும்பி ஏற்கும் [என்னை
வழக்கந்தான் மறந்தாரா? பின்,அவரை என்நெஞ்சே
மறத்தல் வேண்டும்?

முன் பக்கத் தொடர்ச்சி.

பாட்டுக் கலை இடைக் காலத்துச் சிறிது பரவலாகப் பரவிய தற்கு இந்நிகண்டுகளே காரணம் எனக் கொள்ளலாம். பழந் தமிழர் கண்ட சொல் வளத்தைக் காட்டும் கண்ணாடிகளே நிகண்டுகள் எனக் கூறி முடிப்போம். *

போரில் அறம்பிறழ்ந்த தமிழரசர்.

[குறிப்பு:- முன்னிதழில் வெளிவந்த இக்கட்டுரையில் விடுபட்ட சில சான்றுகள்.]

மகளிர் கூந்தலைக் கயிருக்கினமை:-

நல்லதன் நலனையும் தீயதன் தீமையையும் எண்ணாது போர்ச்சினத்தால் செய்த செயல்களுள் இதுவும் ஒன்று. நன்னன் என்பான் இலக்கியங்களால் இழித்துப் பேசப்படும் ஒரு கொடுங் கோலரசன். பெண்கொலை புரிந்த அவன் போரில் வேந்தர்களைப் புறக்கிடச் செய்து அவர் தம் பெண்டிரின் கூந்தற் கயிற்றினால் யானைகளைக் காவல் மரத்தில் கட்டுவித்தான்.

(நற்றிணை. 270)

அத்துடனன்றி, கனகவிசயரைக் கல் சுமக்கச்செய்தவனும், கண்ணகிக்குக் கல் நடு விழாச் செய்தவனுமாகிய சேரன் செங் குட்டுவன் என்பானும் இத்தகு செயலைச் செய்யப் பின் வாங்கி னானில்லை. மோகூரை ஆண்ட பழையன் என்பவனது காவல்மர மாகிய வேம்பினை வெட்டி, தம் துணைவர் போரில் மாண்டதனால் கைம்மை எய்திய பெண்டிரின் கூந்தலை முறுக்கி, அது கொண்டு யானைகளை வண்டியில் பூட்டி வெட்டிய காவல் மரத்தை இழுக்கச் செய்வித்தான். (பதிற்றுப் பத்து 5-ஆம் பதிகம்)

பகையரசர் பல்லைப் பிடுங்கியமை:-

எதுதகவுடைமை என்பதைப் போருணர்வால் ஓராது செய்த செயல்களுள் இதுவும் ஒன்று. மூவன் என்னும் சிற்றரசனைச் சேரன் கணைக்கால் இரும்பொறை என்பான் வென்று அவன் பற்களைப் பிடுங்கித் தன் அரசவை வாயிற் கதவில் பதிப்பித் தான்.

(நற்றிணை-18)

அத்துடன் மத்தியென்னும் குறுநிலமன்னன் எழினி என் பானை வென்று அவனது பற்களையும் பிடுங்கித் தன் அரண்மனைப் பெண்டிரறை வாயிலின் பன்மணிக் கதவில் அழுத்திவைத்தான்.

(அகம்-210)

மாற்றரசரைக் குறைவுபடுத்தியமை:-

சோழன் கரிகாலன், சேர பாண்டிய மன்னரை வென்று அவர்களுக்குக் கிழியை உடுத்தி அவர் முடிமேல் எரியும் விளக்கு வைத்துக் குறைவுபடுத்தினான்.

[கலிங்கத்துப் பரணி 8. (இராச பாரம்பரியம்) 22]

புலவர் சீனி. சட்டையப்பன்.

கம்பு ஒரு சிறந்த உணவுப் பொருள்.

நாம் உண்ணும் உணவுப் பொருள்கள் எல்லாவற்றிலும் கம்பில்தான் நம் உடல் நலத்திற்குத் தேவையான சாரப் பொருள்கள் மிகுதியாக உள்ளன வென்ருல் வியப்படைவீர்கள். அதேபோல் மிகவும் குறைவான அளவு சாரமுள்ள உணவு, நாம் மிகுதியாக விரும்பி உண்ணும் அரிசிதான்.

கம்பு உண்பவர்கள் பருமனுகவும், உயரமாகவும் வளர்கின்றனர். சிறு நீர்ப் போக்குக் குறைந்தவர்கள் 'பார்லி'க்கு மாற்ருக கம்பைக் கஞ்சி செய்து குடிக்கலாம்.

மலச் சிக்கல் உள்ளவர்கட்குக் கம்பு மிக நல்லது. புதிதாக உண்ணத் தொடங்குகையில் வயிற்றுப் போக்கு ஏற்படலாம். ஆனுல் தொடர்ந்து ஒரு வேளை யுணவாக அதை உண்பவரின் உடல் நலமுற்றுச் சீரான மலப்போக்கு ஒழுங்காக ஏற்படும். கம்பைப் பலவகையிலும் பயன்படுத்தலாம். பால்வற்ருத பசுமையுள்ள கம்பைக் கொம்மை போக்கி யுண்ணலாம். நன்ருகக் காய்ந்த கம்பைத் தீட்டி மேலுமி போக்கி ஈரத் துணியில் கட்டி வைத்து ஒரு நாள் கழித்து அது முளைவிட்டிருக்கையில் எடுத்து உண்ணலாம். கம்பை மாவாக அரைத்து அடை செய்தும் சாப்பிடலாம்; வறுத்துப் பொரியாகவும் உண்ணலாம்; சமைத்தும் உண்ணலாம்; மாவாகச் செய்தும் கூழ் கஞ்சி செய்தும் உண்ணலாம். புட்டு, இட்டளி, ஊற்றப்பம் முதலியவற்றிற்கு அரிசிக்கு மாருக இதைப் பயன்படுத்தலாம்.

பின் உள்ள எண் அளவீட்டுக் குறிப்புப் பட்டியலில் கம்பிலும் மற்ற மூல உணுப் பொருள்களிலும் உள்ள உணவுச் சார அளவைகள் தரப் பெற்றுள்ளன. அறியார் கண்டு தெளிக.

(பின் பார்க்க)

நன்றி!

உளுந்தூர்பேட்டை, சரக்குந்து முகவர் உயர்திரு சுரா அவர்கள், தென்மொழியின்பால் தணியா விருப்பினராகி அதன் வளர்ச்சிக்கென உருபா பத்தை நன்கொடையாக அளித்துள்ளார். தண்டமிழ்ப் பற்றும் பேருள்ளமும் வாய்ந்த அன்னூர்க்கு எம் நெஞ்சுகந்த நன்றி உரியதாகுக.

— ஆசிரியர்.

500 கிராம் உணுப் பொருளில் உள்ள உணவுச் சாரம்.

சாரப் பொருள்கள்	புரதம் (வளர்ப்புச் சாரம்) (Proti en)	கொழுப் புச் சாரம் (Fat)	சுண்ணச் சாரம் (Calcium)	எரிகந்த கச் சாரம் (Phos pharus)	இரும்புச் சாரம் (Iron) (M G.)	"ஏ" உய்வுணு (A Vita min)(Unit	"பி" உய்வுணு (B Vita min)(Unit)	மாவுச்சாரம் (Carbo hydrate) (gram)
நமக்குத் தேவை யானசீரான அளவு	90	74	1·02	1·47	44·0	7000	400	408
கம்பு	58	25	0·25	1·75	44–	1100	550	335
தினை	61·5	23·5	0·15	1·45	31·5	270	975	303
சோளம்	52	9·5	0·15	1·40	31	680	575	370
கோதுமை	59	7·5	0·25	1·60	26·0	540	900	356
கேழ்வரகு	35·5	6·5	1·65	1·35	27	350	700	360
கைக்குத்தல் அரிசி	36	11·5	0·05	1·25	22·5	75	475	375
பொறிக்குத்தல் அரிசி	34·5	2	0·05	0·25	5	—	100	396

நகைநலம்

(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச் சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றால், அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும் ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — ஆசிரியர்.)

இடந் தெரியாதவர்...!.

புகைவண்டி நிலையத்தில், அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் மார்க் டுவைனிடம் அறிமுகமானவர் ஒருவர் அணுகிப் ‘‘பணத்தையெல்லாம் குதிரைப் பந்தயத்தில் இழந்துவிட்டேன்; எனக்கும் சேர்த்து ஒரு சீட்டு வாங்குங்கள்’’ என்றார். டுவைன், ‘‘என்னிடம் ஒரு சீட்டுக்குத்தான் பணமிருக்கின்றது; நான் உட்காரும் வண்டியின் விசி (Bench) க்கடியில் படுத்துக் கொள்ளுங்கள்; பார்த்துக் கொள்கின்றேன்.’’ என்றார். அவரும் இசைந்து அவ்வாறே பயணஞ் சென்றார்.

இடையில் சீட்டு ஆயுநர் வந்தார்; டுவைன் இரண்டு சீட்டுகளை நீட்டினார். ஆயுநர் ‘‘இரண்டு சீட்டுகள் உளவே; இன்னொருவர் எங்கே?’’ என்றார். அதற்கு டுவைன், ‘‘அவருக்குப் பந்தயத்தில் வெல்லப் போகும் குதிரையை மட்டுமன்று; தாம்உட்காரவேண்டிய இடத்தைக்கூடக்கண்டுபிடிக்கத் தெரியவில்லை; இதோ, கீழே படுத்திருக்கின்றார்’’ என்று சுட்டிக் காட்டினார். கீழே படுத்திருந்தவர் வெட்கிய முகத்துடன் வெளியே வந்தார்.

— நடம்புரி.

○ ○ ○

அணைக்க முடியாத தீ...!

சான்பிரான்சிசுகோ நகரில் சென்ற மாதம் ஒரு நிகழ்ச்சி நடந்தது. நேயல் ஓல்சு என்ற பால்காரர் ஒருவர் அவ்வூர் நகராட்சி மன்றத்திற்குச் சென்றார். அங்கிருந்து "நகராட்சி மன்றம் தீப்பற்றி எரிகின்றது" என்று தீயணைப்புப் படைக்குத் தொலைபேசி வழி செய்தி அனுப்பினார். சிறிது நேரத்தில் தீயணைப்பு வண்டிகள் போதிய ஆட்களுடன் நகராட்சி மன்றத் திற்கு வந்து கூடிவிட்டன. ஆனால் நகர மன்றத்தில் எந்த மூலை யிலும் ஒரு சிறு தீப்பொறியும் காணப்பெறவில்லை.

தொலைபேசிக்கருகில் பெருமிதத்தோடு நின்று கொண் டிருந்த ஓல்சிடம் "எங்கும் தீப் பற்ற வில்லையே! தவறான செய்தி ஏன் கொடுத்தீர்கள்? 'என்று அதட்டினார்கள். அதற்கவர், "நகராட்சி மன்ற மெங்குமே கையூட்டு (லஞ்ச)த் தீ பற்றி எரி கின்றது; அதை அணைக்கத்தான் கூப்பிட்டேன்" என்று விடை யளித்தார்.

○ ○ ○

நடிகை மருத்துவம்...!

கப்பல் ஒன்றில் ஆலிவுட் நடிகையொருத்தி பயணஞ் செய்து கொண்டிருந்தாள். அவளுக்கருகில் இருந்த ஒருவர் நீர்க்கோவையால் அடிக்கடித் தும்முவதும், எழுந்து சென்று மூக்கைச் சிந்துவதுமாகத் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தார். அருவருப்புடன் இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த நடிகை, பொறுமை தாளாமல் அவரிடம், "மிகவும் தொல்லையாக உள்ளதா?" என்று எரிச்சலும் பரிவும் கலந்த குரலில் கேட் டாள். "ஆமாம்" என்று மிகச் சோர்வுடன் அவர் தலையசைத் தார்.

"அப்படியானால் நான் சொல்கிறபடி செய்யுங்கள். நேரே உங்கள் அறைக்குச் செல்லுங்கள்; சூடான எலுமிச்சைச் சாறு ஒரு குவளை குடியுங்கள்; இரண்டு தலைவலிக் குளிகைகளை விழுங்கிவிட்டுப் படுத்து நாலைந்து போர்வைகளைச் சேர்த்து நன் றாக இழுத்துப் போர்த்துக் கொள்ளுங்கள்; நன்றாக வெயர்வை வரட்டும்......! என்ன..... நான் சொல்வதைக் கேட்கிறீர்களா... சும்மா சொல்லவில்லை...இந்த முறையெல்லாம் நன்றாகத் தெரிந் திருப்பதால்தான் சொல்கின்றேன்...இருக்கட்டும்...நான் யார் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்! நான் தான் ஆலிவுட் நடிகை **பில்லி பர்க்**..."

"மிகவும் நன்றி; நான் யார் தெரியுமா? நான்தான் **மேயோ மருத்துவ மனை**யின் தலைமை மருத்துவர் **மேயோ**"என்று முணு முணுத்தார் அவர்.

தமிழ் நிறையும்

தமிழர் குறையும்

இஞ்ஞான்று உலகில் நிலவும் மொழிகள் பல. அவற்றுள் எழுத்துக்கள் இல்லாதன சில; எழுதுந் தன்மை பெற்றன பல; இலக்கிய இலக்கண முடையன சில; என்றும் நின்று நிலவுவன சில; தொன்மை வாய்ந்தன சில; உயர்ந்த தன்மை வாய்ந்தன சில; தனித்தியங்க வல்லன சில; செம்மை வாய்ந்தன சில; எளிமை பெற்றன சில; இனிமையுற்றன சில; இயற்கை மொழிகள் சில; செயற்கை மொழிகள் சில; அழிந்தன சில; ஆக்கமுற்றன சில.

அத்தகைய மொழிகள் பலவற்றுள்ளும் மேற்கூறிய எல்லாத் தன்மைகளையும் ஒருங்கே பெற்றது 'தமிழ்' என்பது மேலை நாட்டு மொழி நூல் வல்லுநரும், கீழை நாட்டு மொழிநூல் பேரறிஞரும் கண்டுரைத்த கட்டுரையாம்.

மேலும், மாந்தன் முதன் முதல் தோன்றிய போழ்து இயற்கை மொழியாகிய இன்றமிழ்தான் அவன் பேசத் தொடங்கிய மொழியாக இருந்திருக்கவேண்டும் என்பதும் நிலை நாட்டப் பெற்றுள்ளது. வரலாற்றில் 'இலெமூரியா கண்ட'மென்று கூறப்படும் 'குமரிக் கண்ட'மே முதல் மாந்தன் தோன்றிய இடமாக இருக்கவேண்டுமென்பதும் நிறுவப் பெற்ற உண்மை.

வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.

தமிழ் தக்க வளர்ச்சி யடைவதன் முன்னரே மாந்தர் தொகை பெருக, அந்நிலப் பரப்பு ஆழிவாய்ப்பட, பலவிடங்கட்கும் பிரிந்து சென்று வாழவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுவிட்டது. மாந்தர் பேச்சு வழக்கில் மட்டில் இருந்த மொழியைப் பேச முற்பட்டுத் தனித் தனியே சென்று வாழ்ந்தமையின் ஆங்காங்கிருந்த வெப்ப தட்ப நிலை, இயற்கைச் சூழ்நிலை முதலியவற்றிற்கேற்பப் பலவகையான மாற்றங்களைப் பெற்றுத் தனித்தனி மொழிகளாயின. மாந்தரின் பண்பாடு, நாகரிகம் முதலியனவும் வெவ்வேறு உருப்பெற்றன. மொழி நூலறிவு பெற்றோர் இவற்றை நன்கறிவர். உலக மொழிகள் பலவற்றிலும் தமிழ் வேர்ச் சொற்கள் பல காணப் பெறுவதே முதற் சான்றாகும்.

இன்று உலகப் பொது மொழியாக விளங்குவது ஆங்கிலம் என்பதை யாவரும் அறிவோம். ஏன், அஃது அங்ஙனமாயிற்று? ஆங்கிலேயர் உலகிலுள்ள பல பகுதிகளையும் தங்கள் ஆட்சிக்கு உட்படுத்தி ஆண்டனர்; அவர்கள் ஆட்சி புரிந்த இடங்களி லெல்லாம் தங்கள் மொழியையே முதன் மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக்கினர்.

ஆங்கிலேயர் மொழிப்பற்று மிக்கவர். தாய் மொழியை ஐயந்திரிபற நன்கு கற்ற பிறகுதான் பிற மொழியைப் பயில்வர். ஒருவரோ டொருவர் உரையாடும் பொழுதும் மேடையேறிச் சொற்பெருக்காற்றும் பொழுதும் தமது தாய்மொழியிலேயே நிகழ்த்துவர். ஆகவே, அவர்களது மொழியை அனைத்துலகும் பரப்ப வாய்ப்பிருந்தது.

தமிழ் நாகரிகம் பழமை வாய்ந்தது; தமிழ்மொழி தொன்மை யது என்று பெருமித முற்றாலும் உலகுக்கு இன்று நாகரிகத்தை உணர்த்தியவர் ஆங்கிலேயரே. இன்று ஆங்கிலமும், அந் நாகரிகமும் பரவாத நாடே இல்லை யெனலாம்.

ஆங்கில மக்கள் பல நாடுகளிலும் குடியேறித் தமது மொழி யையும், நாகரிகத்தையும் ஆங்காங்கே நிலைபெறச் செய்துவிட் டனர். அறிவியல் ஆராய்ச்சியாளர் பலர் தோன்றினர். தம் மொழியிலே ஆய்ந்த கருத்துக்களை எழுதி வெளியிட்டனர். பொருளியல், கூட்டரவியல் (சமூகவியல்), அரசியல் முதலி யவை பற்றிய பல திறப்பட்ட நூல்களை யாத்தனர்; இலக்கிய இலக்கண நூல்கள் பல எழுதி வெளியிட்டனர்; அவற்றை யாண்டும் பரவச் செய்தனர்; பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அவற்றைப் பாடமாக வைத்தனர். அவர்தம் மொழியிலேயே எல்லாம் கற்பிக்கப்பெற்றன.

எனவே, இப்போது ஆங்கிலம் இலக்கிய இலக்கண வளம் பெற்று, அறிவியல், பொருளியல் நூல்களாக்கம் பெற்று உலகப் பொது மொழியாக இலங்குகின்றது. ஆங்கிலேயரின் மொழிப் பற்றும், உழைப்பும், ஊக்கமும், உறுதியுமே அதற்குக் கரணிய (காரண)ங்களாகும்.

இன்று சிலர் தமிழில் என்ன இருக்கிறது? அறிவியல் நூல்கள் உளவா? அரசியல் நூல்கள் உளவா? உளவியல் நூல்கள் உளவா? மக்கள் வாழ்வு மலர்வதற்குரிய என்ன நூல்கள் இருக்கின்றன? என்று கேட்கின்றனர். அத்தகையோர் ஏன் இல்லை? என்ற கேள்விக்கு விடையறிய முயலவில்லை போலும்!

ஏன் இந்த இழிநிலை? தமிழ் மூவரசர் ஆட்சிக்குப் பிறகு தமிழ்நாடு பல இடுக்கண்கட்கு ஆளாயிற்று. அயலார் பலர் குடியேறினர்; தங்கள் மொழி, நாகரிகம் முதலியவற்றைத் தமிழ் நாட்டில் பரப்பினர்; அயலாரின் பல ஆட்சிக்குட்பட்டுப் பல ஆண்டுகள் தமிழகம் பான்மைகெட்டு நின்றது. சமய வேற்றுமை யுணர்ச்சி தோன்றியும் குலப்பிரிவுகள் பல்கியும் வேறுபட்டனர். தமிழில் இருந்த இலக்கிய இலக்கணங்கள் அழிக்கப்பெற்றன. பிற்காலப் புலவர்களெல்லாம் சமயங்களைப் பற்றியும், அரசர் களைப் பற்றியும், வள்ளல்களைப் பற்றியுமே மிகுதியும் புகழ்ந்து பாடத் தொடங்கிவிட்டனர்.

எனவே, தமிழ் மொழியின் சீர்மை குன்றியது; சிறந்த இலக்கியங்கள் தோன்ற வாய்ப்பில்லாது போயிற்று; அறிவுக்கு அலுவல் அற்றது. தமிழர் எவரும் சிறந்த அறிவியலறிஞ ருகவோ, வேறுவகை யறிஞருகவோ ஆக வாய்ப்பற்றது. சம யப்போரும், குலப்போரும் மிக்கன.

பல ஆண்டுகளாக நாம் அறியாமைப் படுகுழியில் ஆழ்ந்து மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் இல்லாது போனதனுலன்றே தமிழுக்கு இந்த இழி சொல்! தமிழுக்குப் பகைவர் பலர் இத் தமிழ் நாட்டிலேயே இருக்கின்றனர். "மறைமலையடிகள் தமிழ் ஒரு தமிழா?" "தமிழ் தனித்து இயங்க முடியாது." "தமிழ், பயிற்று மொழியாக இருக்கத் தகுதியற்றது." "தமிழுடன் பிற மொழி கலக்கக் கூடாது என்பவர்கள்தாம் தமிழுக்குப் பகைவர் கள்" என்பன போன்ற மேடைப் பேச்சுகளையும், செய்தித் தாள்களின் தலைப்புகளையும் கேட்கிறோம்; பார்க்கிறோம்.

இத்தகையோரால் தமிழ் வாழுமா? தாழுமா? என்பதை உங்கள் ஆய்வுக்கே விட்டு விடுகின்றேன். தமிழின் இன்றைய நிலை, தமிழ்நாட்டில் எவ்வாறுளது? என்று சிறிதுநோக்குவோம்.

நாவலந்தண் பொழிலின் நடுவணரசு (Central Govt.) இந்தியைப் பொது மொழியாக்கத் திட்டமிட்டுள்ளது. இத் துணைக் கண்டத்திலுள்ள எல்லா மொழிகட்கும் ஒரே எழுத்து முறை (லிபி) கொணரவும் திட்டம் தீட்டுகிறது. இந்தியை நாடு முழுவதும் பரப்பவும், நூல்கள் பல இயற்றவும் கோடிக்கணக் கான உருபாக்கள் செலவு செய்கிறது. வானெலி வாயிலாகவும் இந்தி கற்பிக்கிறது. நடுவணரசில் அலுவலுக்கு இந்தி கட்டா யம் என்கின்றது. எங்கெங்கே இந்திச் சொற்களைப் புகுத்த முடியுமோ அங்கெல்லாம் புகுத்தி வருகிறது. கல்விக் கூடங் களில் உடற் பயிற்சி, நாட்டு மாணவர் படைப் பயிற்சி ஆகிய வற்றில் இந்திச் சொற்களையே பயன்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தியுளது.

தமிழக அரசோ உயர்நிலைப் பள்ளிகளில்கூட ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக வைத்துள்ளது. கல்லூரிகளில் பயிற்று மொழியாகத் தமிழ் தகுதியற்றது என்கிறது. தமிழ் முதல் மொழி, ஆட்சி மொழி என்று பெயரளவில் இருக்கிறதே யன்றி நடைமுறையில் இல்லை. பள்ளிகளில் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்திலேதான் நடைபெறுகின்றன. தமிழ்ப் புலமையும் ஆங்கிலஅறிவும் பெற்றவர்கள் கல்வி நிலையங்களில் தலைமையாசிரியர்களாக இல்லை. மூன்றும் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்றுக்கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.தமிழ் நாட்டிலேயே தமிழுக்கு மதிப்பில்லை.

பொது மக்களிடையே தமிழ் வளர்கிறதா? என்று பார்ப்போம். அவர்கள் படிக்கிற செய்தித்தாள்களில் எல்லாம் தமிழ்ச் சொற்களைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். அவர் தம் மக்களுக்கு இடும் பெயர்களோ தமிழில் இல்லை. அவர்களின் பேச்சிலோ பல மொழிச் சொற்களும் பயின்று வருகின்றன. அவர்கள் வணங்கும் தெய்வங்களின் பெயர்களோ தமிழ் இல்லை. அவர்கள் உண்ணும் பொருள்களின் பெயர்கள்கூடத் தமிழில் இல்லை. கடைத்தெருவுக்குப் போனல் அங்குத் தொங்கும் பெயர்ப்பலகைகளோ தமிழில் எழுதப்படவில்லை. கோயில்களுக்குப் போய் இறை வழிபாடு செய்வதிலும் தமிழ் இல்லை. வேறு எங்கே தமிழ் இருக்கிறது?

தமிழ்நாட்டுக் கட்சிகள் தமிழ் வளர்க்கின்றனவா? கட்சித் தலைவர்கள் தங்கள் தங்கள் பிழைப்புக்கருதிச் சூழ்நிலைக்கேற்பப் பேசியும், எழுதியும் வாழவேண்டிய கடப்பாடுடையவர்களாயிருக்கிருர்கள். தமிழ்மொழி பற்றிய வரலாற்றறிவோ மொழிநூற் பயிற்சியோ அவர்களில் பலருக்கில்லை; இருப்பவர்கள் மறைக்க வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டு விடுகின்றனர்.

பொது மக்கள் பேசுவது போல எழுதினுல்தான் எல்லோருக்கும் புரியும் என்று பேசுகின்ற கல்வியமைச்சரையும், தமிழியக்கத்தையும் உடையது தமிழ் நாடு. பல மொழிச் சொற்களையும் கலந்தால்தான் ஒரு மொழி வளம் பெறும் என்று கூறும் மதியமைச்சரை யுடைய நாடு இது. இவர்களை நம்பித் தமிழைக் காக்காமல் இருந்தால் விரைவில் அழிவுக்கே வழிகோலுவர். தமிழர்க்கு மொழிப்பற்றும், முயற்சியும் இருந்தால் இனியும் முன்னேற வழியுண்டு.

வரலாறு

டேவிட் லிவிங்சுடன்.

(DAVID LIVINGSTONE)

(1813—1873)

வழுதி

மேற்கொண்ட பணி எத்தன்மைத்தாயினும் தன்னலந் துறந்த தொண்டுளத்தோடு அதில் ஈடுபட்டு உலகுக்கு நலம் விளைப்பாரே பெரியாராவர். பிறந்தோம்; வாழ்கின்றோம்; ஏதோ நம்மால் முடிந்ததைச் செய்கின்றோம் என்று உளங் கலவாது வினை புரிவார் எத்தகு அறிவுநலஞ் சான்றவராயினும் பெரியாராகக் கருதப்பெறார். இசுக்காத்லாந்து (Scotland) நாட்டிலே தோன்றி ஆயிரக் கணக்கான கற்றொலைவு தாண்டி இருண்ட கண்டமென அழைக்கப்பெற்ற ஆப்பிரிக்காவின் நாகரிக முதிரா மக்களிடையே தம் தொண்டினைத்தொடங் கித் தமக்கென ஒருநல னும் பெறாது வாழ்நா ளனைத்தையும் ஆப் பிரிக்கர் நடுவிலேயே செலவிட்ட பெரியார் டேவிட் லிவிங்சுடன் ஆவார். இன்று ஆப் பிரிக்கா அனைவர்க்கும் திறந்த நாடாக இருப் பதில் நமக்கு வியப் பேதுமில்லை. ஆனால், அதன் ஓரப்பகுதிகள் மட்டுமே பிறரால் அறி யப் பெற்றதாக, உட் பகுதியெலாம் இருட் கண்டமென யாருமுட் புகாது அஞ்சியிருந்த கால மொன்றுண்டு. அக்காலத்தே அந் நாட்டுட் புகுந்து அங் கிருந்த மக்கட்குக் கல்வி, மருத்துவத் தொண்டாற்றியது மன்றித் தாளாண்மையாலும் அயரா ஊக்கத்தாலும் தடை பல கடந்து, அடவியும் பாலையும் அலைந்து திரிந்து அறியப் பெற்றிராத ஆப் பிரிக்காவின் பெரும்பகுதியை உலகுக்குத் திறந்து வைத்த பெருமை லிவிங்சுடனையே சாரும்.

இசுக்காத்லந்தில், கிளாசுகோ (Glasgow) நகரின் அருகில் ப்ளான்டைர் (Blantyre) எனுமூரில் 1813-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பத்தொன்பதாம் நாள் டேவிட் லிவிங்சுடன் தோன்றினார். தந்தை நீல் லிவிங்சுடன் ஒரு சிறிய தேயிலை வணிகர்; ஆழ்ந்த சமயப் பற்றுடையவர். இளைஞர் டேவிட்டும்

சமயப்பற்றும் இறையன்பும் உடையவரே. ஆயினும், தந்தையைப் போன்று சமயப் புறத் தோற்றங்களில் ஈடுபட்டாரல்லர். தந்தை தமக்களித்த சமயக் கொள்கை நூற்களை அவர் கற்க விரும்பவில்லை. மாருக, அறிவியல், பயண நூற்கள் அவருக்கு விருப்பமூட்டின. தந்தையின் வற்புறுத்தல் அவர்பால் எதிர்ப் புணர்வையே மூட்டியது. ''வறட்சியான வெற்றுச் சமய விளக்க நூற்களையும் கொள்கைகளையும் படிப்பதில் எனக்கேற் பட்ட வெறுப்பு நெடு நாள் நிலைத்தது'' என்று அவர் பின்னல் கூறியுள்ளார்.

பத்தாம் அகவையில் பஞ்சாலையில் வேலைக்குச் சென்ருர். நாடொறும் 14 மணி நேரம் கடும் உழைப்பு. வேலை செய்யும் போதே தறியின்மேல் புத்தகம் ஒன்றை வைத்துக் கொண்டு படித்தார். ஒரு மணித் துளி இடை வெளியையும் வீணுக்கிய தில்லை.

இயற்கை வரலாறும் (Natural History) செலவு (Travel) நூற்களும் அவருக்கு விருப்பமாயின. செருமானிய சமய அருள் நெறித் தொண்டர் ஒருவரின் வாழ்க்கை வரலாறு அவர் உள்ளத் தைக் கிளர்ந்தெழச் செய்தது. தாமும் அருள்நெறித் தொண்ட ராதல் வேண்டும் என்ற உறுதி பிறந்தது கடினமாக உழைத் தும் சிறுகச் சிறுகப் பணஞ்சேர்த்து நூற்களை வாங்கிப் படித்தும் கல்வியறிவைப் பெருக்கிக் கொண்டார். 23-ஆம் அகவையில் கிளாக்சோ பல்கலைக் கழகத்திற் சேர்ந்து கிரேக்க மொழியும், மருத்துவமும் சமயக் கல்வியும் கற்ருர்.

1837-ஆம் ஆண்டில் இலண்டன் சமயப்பணிக் கழகத்தின் (London Missionary Society) உறுப்பினராஞர். அவரால் சமயச் சொற்பொழிவுகள் ஆற்ற முடிந்திலது. மருத்துவப் பணியில் முழு மூச்சுடன் உழைத்துத் தேர்விலும் வெற்றி பெற் ருர். முதலில் சீஞவுக்கே அவரை அனுப்புவதாக விருந்தனர். இடையில் வெறியப் போர் (Opium War) குறுக்கிடவே அது தடைப்பட்டது. தம் எண்ணங்கட்கு மாருகவே லிவிங்சுடன் இருண்ட கண்டம் செல்ல நேர்ந்தது 1840 இல் தென்னுப்பிரிக் காவுக்குக் கப்பலேறினுர்.

கப்பலிலிருக்கும் போதே வானிலை ஆய்வினைக் கற்றுக் கொண்டார். நெடும் பயணத்துக்குப் பின் ஆப்பிரிக்காவை அடைந்தார். அல்கோவாக் குடாவில் இறங்கி, 700 கல் மாட்டு வண்டியிற் சென்று பெச்சுவாஞலாந்திலுள்ள குருமனை அடைந் தார். அங்குத்தான் சமயப் பணிக் கழகத்தின் தலைமையகம் இருந்தது. உள்நாடு நோக்கிச் செலவைத் துவக்கினுர்.

1841-ஆம் ஆண்டு முதன் முதலாக மேற்கொண்ட செலவுபற்றி அவர்தம் குறிப்புகள் நமக்கறிவிக்கின்றன.

1844 இல் குருமன் சமயக் கழகத் தலைவர் இராபர்ட் மாபட்டின் மகள் மேரியை மணந்து கொண்டார். மபோட்சாவில் தனி வீடொன்று பார்த்துக் கணவனும் மனைவியும் தம் பணியைத் தொடங்கினர். குழந்தைகட்குக் கல்வி புகட்டினர். நோயாளிகட்கு மருத்துவப் பணி புரிந்தனர்.

அங்கிருக்கும் பொழுதுதான் ஓர் அரிமாவைச் சுட முயல் கையில் குறி தவறியதால், அரிமா தோளிற் பாய்ந்து கவ்வியது. இடது தோட்பட்டை நொறுங்கிப் போயிற்று. உயிர் பிழைத்தது பெருவியப்பேயாம்.

பின்னர், சுனுவேன் எனுமிடத்துக்குப் பணிபுரியச் சென்றனர் கொடிய பஞ்சத்தால் அங்கிருந்து கொலோபெங்கு ஆற்றங் கரைக்குச் சென்றனர். அங்கு வாழ்ந்த பக்வேனு மக்கட்கு உழவு முறைகளிலும் நீர்ப் பாசனத்திலும் பயிற்சி அளித்தார். ஒரு வேளாண்மைக் குடியேற்றமே அங்கு உருவாயிற்று எனலாம்.

அறியப் பெறாத நாடுகளை அறிந்து காண்பதும், ஆங்குப் புதிய மக்களோடு கலந்து பழகி அவர்தம் வாழ்வோடு ஒன்றி விடுவதும் சமயப் பணியின் ஒருபகுதியே என்பது லிவிங்சுடனின் கருத்தாயிற்று. அக்கால், காணப்பெறாத 'நிகாமி' எனும் ஏரியைக் காணப் பலரும் துடித்தனர். லிவிங்சுடன் தன் ஆட்களுடன் கலகாரிப் பாலையைக் கடந்து, சூகா ஆற்றிற் படகேறி ஏரியைக் கண்டார். அதுவே அவர் முதன்முதலாகக் கண்டு பிடித்த புதிய ஏரி. அன்று தொட்டு வழியில்லா இடங்கட்கு வழி வகுத்தலே அவர்தம் பணியாயிற்று.

கொடிய வெப்பப் பாலை நிலங்கள், ஆள் நுழையவியலா அடவிகள், அவற்றுள்ளே நச்சுப் பூச்சிகள், நோய்கட் கிருப்பிடமான சதுப்புக் காடுகள், ஆங்காங்குள்ள கல்லா மாக்களின் எதிர்ப்புகள், இடையூறுகள் இத்தனைக்கும் ஊடே சற்றும் மனந்தளராமல் புதிய இடங்களைத் தேடிச் சென்றார். ஆங்காங்குள்ள மக்கட்குக் கல்வி யூட்டுதலையும் பிணிதீர்த்தலையும் தொடர்ந்து நடத்தினார்.

எத்தனையோ கண்டு பிடிப்புகள்! காணவே முடியாது என்றிருந்த சாம்பசிப் பேராற்றை 1851-இல் ஆசுவல் எனும் நண்பரோடு சென்று கண்டார். இடையில் மனைவி, குழந்தை

களைத் தாயகம் அனுப்பி வைத்துவிட்டு மேலும் தம் பணியைத் தொடர்ந்தார்.

ஆப்பிரிக்க மக்கள் பலர் இவர்க்கு நண்பரேயாயினும் இவரைப் புரிந்து கொள்ளாதார் பலர் இடர்விளைக்கத் தயங்கினு ரில்லை. பலமுறை தம் உடைமைகளைப் பறிகொடுத்தார். குடியிருந்த வீட்டைப் போயர்கள், இவர் இல்லாதிருந்த பொழுது கொள்ளையிட்டு இடித்தெறிந்து சென்றனர். எதற்கும் தளர்ந்தாரிலர்.

பல முறை நோய்வாய்ப்பட்டார். செல்லுமிடத்துச் சுமை மிக வேண்டாமென்று எளிய ஆடையும் உணவுமே மேற்கொண்டார். தம்மோடு வருவாரின் தளர்ச்சியால் விளைந்த எதிர்ப்புகளை வேறு தாங்கவேண்டியிருந்தது.

சாம்பசி, காங்கோ ஆறுகளின் தொடக்கப் பகுதிகள் டிலோலோ ஏரி, மேற்குக் கரையிலுள்ள லோவண்டாவுக்குப் புதிய வழி, விக்தோரியாப் பேரருவி இவையெல்லாம் அவர் கண்டுபிடித்த இடங்களே!

1856–ஆம் ஆண்டில் தாயகம் மீண்டார். இதுவரை அவர் செயல்களை வியப்புடன் உற்றுநோக்கிக் கொண்டிருந்த உலகம் அவர்க்குப் புகழ்மாலை சூட்டியது. பல்கலைக் கழகங்கள் கண்ணியப் பட்டங்கள் அளித்தன; அவர் கேம்பிரிட்சில் ஆற்றிய தொரு சொற்பொழிவே, பின்னர் பல்கலைக் கழகப் பணிஞர் மனை தோன்றக் காரணமாயிற்று.

இந்நிலையில் அவர் சமயப் பணிக் கழகத்தினின்று விலகினார். அதற்குக் கரணியத்தை அவரே கூறுவதைக் கேட்போம்:

யான் இறைவனின் ஊழியனே! எனினும் ஒரு சமயத் தொண்டனின் கடமையைப் பற்றிய என் கருத்து மற்றவர் கருத்தைப்போன்று குறுகியதன்று. கட்கத்தில் மறைநூலை இடுக்கிக் கொண்டு கடவுளைப்பற்றியே எப்பொழுதும் பேசித் திரிவதுதான் சமயத் தொண்டா? நான் சமயச் சொற்பொழிவாற்றியுள்ளேன். மருத்துவப் பணி புரிந்திருக்கின்றேன். அவை மட்டுமா? செங்கல்லையும் சுண்ணும்பையும் கையில் ஏந்தி உழைத்திருக்கின்றேன். உலைக் கூடத்திலும் தச்சுப் பட்டறையிலும் மக்களோடு மக்களாய் வெயர்வை சிந்தியிருக்கின்றேன். நான் எனக்குரியவனல்லன். என்பால் அன்பு காட்டும் இந்த மக்கட்காக ஒரு காட்டெருமையைச் சுட்டளிக்கும் பொழுதும் வானிலை ஆய்வு நிகழ்த்தும் பொழுதும், வழி தவறிய ஓர் ஏழை மகனுக்கு நல்வழியும் ஆறுதலும் காட்டி மடல் எழுதும் பொழுதும், ஆப்பிரிக்காவுக்கு

மேலும் மேலும் நலம் விளையத்தக்க வகையில் புதிய ஆய்வுகளை இறையருளால் மேற்கொள்ளும் பொழுதும், நான் புரிவது இறைத் தொண்டன்றி வேறென்ன? இவை போதா என்றோ, இவை சமயத்தைப் பரப்புவதாகாதென்றோ அறியாதார் கூறுவதற்காக நான் அவற்றையெல்லாம் விட்டுவிட வேண்டுமா?...... என் உள்ளத்தின் ஒளியை மறைத்தொழுக வேண்டுமா?''

அவர்க்குக் கிடைத்த புகழ் மொழிகளையும் அவர் விரும்பவில்லை. என்வேலை இப்பொழுதுதான் தொடங்கியுள்ளது. அது முடியட்டும்; அதன்பின் வேண்டுமானால் உங்கள் சொற்களை ஏற்றுக்கொள்வேன் என்றார்.

மீண்டும் ஆப்பிரிக்கா திரும்பினார். தன் உடன்பிறந்தார் ஒருவரோடும் பர். சான் கர்க் என்பாரோடும் இரண்டாம்முறை சாம்பசியை அடைந்தார். இடுக்கண்களையும் கலகங்களையும் எதிர் நீந்திச் சென்றார். 1862-இல் அவர்தம் மனைவியார் மறைந்தமை பெருந்துன்பம் விளைவித்தது.

ஒருவாறு துயர் நீங்கியபின் மீண்டும் செலவை மேற்கொண்டார். ''நியாசா'' ஏரி கண்டுபிடிக்கப்பெற்றது. அப்பொழுது அவர் வைத்திருந்த படகு ஒன்றினை விற்பதற்காக 2500 கல் தொலைவு அப்படகிலேயே ஊர்ந்து பம்பாய் அடைந்தார். அங்கிருந்து கப்பலில் இங்கிலாந்து சென்றார்.

மீண்டும், நீல ஆற்றின் தொடக்கம் காண உறுதிபூண்டு ஆப்பிரிக்கா திரும்பினார். முன்பே ஆப்பிரிக்காவில் அடிமைகளாக மக்களைப் பிடித்துச் சென்று விற்பதும் துன்பப் படுத்துவதுமான பெருங் கொடுமைச் செயல்களை யெல்லாம் கண்டு மனம் வருந்திய அவர், இம்முறை அடிமை முறையினை ஒழித்து நாகரிகம் வளரச் செய்ய வேண்டும் என்ற உறுதியுடன் புறப்பட்டார்.

அரவுமா ஆற்றை வந்தடைகையில் துணைவராய் வந்த முரடர் மேற் செல அஞ்சிப் பிரிந்து சென்றனர். அவர் இறந்து போனதாகவும் கதை கட்டிவிட்டனர். வெளி உலகுக்கு அவரைப் பற்றிய செய்தி அறிவிப்பாரில்லை. ஒரு சில உண்மை ஊழியருடன் இருட் கண்டத்தின் நடுவிலே எவ்வித உதவியுமின்றிச் சுற்றி அலைந்தார். தாங்கனீகா ஏரியைக் கண்டுபிடித்தார். அக்கால் மீண்டும் கடுநோய்வாய்ப் பட்டார். மருந்துப் பெட்டியோ களவுபோயிற்று. நெஞ்சம் நைந்து உடல் சோர்ந்த போதும் உறுதியைக் கைவிடவில்லை. 1868-இல் பங்வெலூலு ஏரியைக் கண்டுபிடித்தார்.

உலுவாலா ஆறுபற்றிக் கேள்வியுற்றிருந்தார். அதையுங் காண ஆவல் பிறந்தது. அளவிடப்படாத துன்பிலும் நோயிலும் உழன்ருர். முதுமையின் தளர்வும் இடையருஉழைப்பும் அவரை அரித்துண்ணத் தொடங்கின. தன்னம்பிக்கையும், நகைச்சுவை யுணர்வுமே அவர்தம் உயிரைக் கட்டிக் காத்து வந்தன.

இந்நிலையில்தான் வெளியுலகம் அவரைத் தேடிக் கண்டு பிடிக்க இசுடான்லி என்பாரை அனுப்பியது. இசுடான்லியும் பேரிடர்ப்பட்டு வந்து சேர்ந்தார். வரலாற்றுச் சிறப்புடையது அவ் வெதிர்ப்பாடு.

தம்முடன் வருமாறழைத்த இசுடான்லிக்குப் புன்னகை யோடு மறுப்புக் கூறினர். தாம் வாழ்வது ஆப்பிரிக்கர்க்காகவே; மாள்வதும் அவர்க்காகவே என்ருர் பெருவருத்தத்துடன் இசுடான்லி பிரிந்து சென்ருர். சென்றவர் புதிய ஆட்கள் சிலரை அனுப்பி வைத்தார்.

1872-ஆம் ஆண்டு லிவிங்சுடனின் இறுதிச் செலவு தொடங்கியது. நீல ஆற்றின் தொடக்கம் காண்பதே நோக்கம்.

பங்வெலுலு ஏரிக்கரையில் தெற்கு நோக்கிச் செல்கையில் சாவு நெருங்கி வரலாயிற்று. உடலெல்லாம் வலி மிகுந்தது. குருதியோட்டம் குறைந்தது மயக்கம் மிகுந்தது. அவர்தம் அன்புமாரு ஏவலாட்கள் அவரைச் சுமந்து செல்லலா யினர். இறுதி மூச்சு வரை விடுவதில்லை என உறுதிபூண்ட அவர்தம் உளந்தான் என்னே! 1873 ஏப்பிரல் 27-இல் இலாலா எனுமூர் வந்தடைந்தார். அங்குப் படுத்த படுக்கையானர். மே முதலாம் நாள் படுக்கையில் முழந்தாளிட்டு இறைவனை வணங்கிக் கொண்டிருக்கையிலேயே அவர்தம் உயிர் பிரிந்தது.

அவர்தம் ஆப்பிரிக்க ஏவலர்தம் அன்பு பெரிது. இடர்ப் பாடுகளையும் மூட நம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்து லிவிங்சு டனின் உடலைத் தங்களால் ஆனவரை வெயிலில் உலர்த்தி, அவர்தம் நூற்களோடும் கருவிகளோடும் ஆயிரத்து நூறு கற்கள் கால்நடையாகவே நடந்து சான்சிபாருக்குக் கொணர்ந்து சேர்த் தனர். இன்று அவர் தம் உடல் இங்கிலாந்தின் வெசுட்மினிசுடர் அபேயில் இளைப்பாறுகின்றது. அவர்தம் நெஞ்சாங்குலை ஆப்பி ரிக்காவில் புதைக்கப் பெற்றது. ஆப்பிரிக்க மக்கட்குத் தன்னையே ஈந்த அவ்வன்பு நெஞ்சம் இளைப்பாறுவதற்கு அது வன்றோ பொருத்தமான இடம்!

○

தொலைக்காட்சி.

(Television)

நியூயார்க் எரால்டு திரிபியூன் (New York Herald Tribune) எனும் அமெரிக்கச் செய்தியிதழின் தொலைக்காட்சி மதிப்புரையாளர், அம் மதிப்புரையை நிறுத்திக்கொண்ட முகத்தான் கூறியவை:

அமெரிக்காவில் இனித் தொலைக் காட்சிகளைப் பற்றி நாள் தோறும் மதிப்புரைகள் பகர்ந்து கொண்டிருக்கத் தேவையில்லை. அவ்வப்பொழுது சிறந்து விளங்கும் ஒருசில பெருங் காட்சிகட்கு மட்டும் மதிப்புரை பகர்ந்தாற் போதும். சப்பென்ற பல காட்சி கட்கு வாளாவிருந்துவிடுவதே தக்க மதிப்புரையாகும்.

பதின்மூன்று ஆண்டுகட்கு முன்பு ஆய்வுக் கூடத்திலிருந்து தொலைக் காட்சி புதிதாக வெளிவந்தபோது பெருஞ் சிறப்பை அதன் மாட்டு எதிர்பார்த்தோம். ஆய்வுத் துறையிலும் கல்வித் துறையிலும் இன்னும் பல துறைகளிலும் புதிய நுணுக்கங்கள் தொலைக் காட்சியால் தோன்றலாயின.

இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சலித்துப்போய்விட்டன. சுவையற்ற முறையில் நடத்தும் ஒரு வறட்டு வாணிகமாகப் போய்விட்டது தொலைக் காட்சி. காலத்தைக் கொலைபுரிவதற் கென்றே உருவாக்கப்பட்டதுபோல் தோன்றுகின்றன இன்றை யத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். தரம் குறைந்துவிட்டது என்று சொன்னாற் போதாது; இளைத்துப் புளித்துச் சப்பென்று போய் விட்டது.

செய்தியறிவுக்கும் கல்வி புகட்டுதற்கும் சிறந்த பெருங் கருவியான இது முற்றிலும் பயனற்ற வெற்றுக் காட்சியாகப் போயிற்றே என்பதை எண்ண உள்ளம் நடுங்குகின்றது. தற் போதைய பொருள் நிலையில் இதுதான் இயலும் அல்லது பொது மக்கள் விரும்புவது இதுதான் என்று கூறித் தப்புவிக்க முயலும் தொலைக்காட்சி வாணிகர் தம் சொல்லில் ஏமாருதீர்கள். பொது மக்கள் நல்லதைத்தான் விரும்புகின்றனர். பொருள் நிலையில் ஆண்டுதோறும் இதற்கு 1,163,900,000 டாலர்கள் செலவிடப் படுகின்றன. இவ்வளவு பணத்துக்குத் தொலைக் காட்சி எவ்வ ளவோ நல்லது ஆற்றி ஆக வேண்டுமே!

இன்னும் தொலைக்காட்சி ஆய்விலேயே நீண்ட நாள் ஈடு படுவேனாயின் எனக்குப் பித்துப் பிடித்துவிடும். நாம் நிகழ்ச்சி களை உண்மையில் பார்த்துணர்வோராக இல்லை. நல்லது தீயது பாராமல், எது வேண்டுமென்று நினையாமல் அரைவிழிப்போடும் அரை உயிரோடும் ஆவென்று வாயைப் பிளந்துகொண்டு பார்க் கின்றோம். நல் மகிழ்வூட்டுங் கருவியாகத் தொலைக் காட்சி இன்றில்லை. வெறும் மயக்க மருந்தாகப் பயன்படுகின்றது. இழிந்த கிளர்ச்சிகளுக்கு இடனாகப் போய்விட்டது. ○

ஆங்கில மொழியாக்கம்

The Supreme One!

Thou art Heat in flaming fire !
And the Fragrance in the flower !
Thou'rt the Diamond hid in stone ;
And the Truth within the Word ;
Thou art Love in goodness sweet ;
And the pith of Valour strong ;
Thou'rt the secret of the Scriptures ;
And the First of Elements
Thou dost cause the Light in sun
And the Coolness in the moon
Thou art all ; and all in all !
Thou the key, the way to all
And Static Thou art not O Lord !
Thou hast no one Dwelling Place .
A mystery thou art O God ,
Which no one here could ignore !
Without a stop dost Thou perform
Thy threefold functions perfectly .
Thou hast being in every birth ;
Yet' tis none that gave Thee birth !
Thy grace canopying all the world
Thy moral goodness strengthening
Thou dost rule this universe
O Thou the only Supreme One !

PARIPADAL - 3rd Song (63-67)
By, Kaduvan Elaveyinan

மொழி பெயர்ப்பு : ம. இலெ. தங்கப்பா.

ஒரு தனிப் பேராற்றல்!

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ; ஆதலின்
உறையும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியல் சிறப்பின் மாயமார் அனையை;
முதல்முறை, இடைமுறை, கடைமுறை, தொழிலில்
பிறவாய் பிறப்பு இலை; பிறப்பித்தோர் இலையே;
பறவாப் பூவைப் பூவி னோயே!
அருள் குடை யாக, அறம் கோலாக
இரு நிழல் படாமை மூ வேழ் உலகமும்
ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தை மாதோ!

பரிபாடல் 3-ஆம் பாட்டு. (வரிகள் 63-76)
(கடுவன் இளவெயினனார்)

தென்மொழி

கையொப்பம்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

இந்து மறு சனன மறுப்பு.

(விலை 37 புதுச்சல்லி) — திரு. சோதி நாயகம் எழுதியது.

பரம குரு

(விலை 25 புதுச்சல்லி) — திரு. இரத்தினம் எழுதியது.

பதிப்பாளர் திரு. கசி. அ. வேதரத்தினம், தூத்துக்குடி.

இந்து சமயத்தின் மறு பிறப்புக் கொள்கையைக் கடிந்து இந்து சமய நூற்களையும் மேற்கோளாகக் கொண்டு கிறித்துவ சமயக் கொள்கைகளை வற்புறுத்துவது முதல் நூல்.

இறையுண்மையை வற்புறுத்தி மெய்யறிவு பெறக் "குரு" வின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டிச் சைவ, கிறித்துவ சமயக் கொள்கைகளின் இயைபில் திகழும் மெய்ப் பொருள் இயல்பை விளக்குகின்றது இரண்டாம் நூல்.

—:—

"நில உடைமை உச்சவரம்புக் கொள்கை நமது பண்டைய நாகரிகமே"

(விலை 25 புதுச்சல்லி)

— திரு. சீவபந்து. சீ பால் எழுதியது.

— சைன இலக்கிய ஆய்வு மன்ற வெளியீடு.

தலைப்பிற் கூறப்பட்ட கொள்கை அருளுணர்வினை அடிப் படையாகக் கொண்டதே என்று கூறிப் பழந் தமிழிலக்கியத் திலும், சைன சமய நூற்களிலும் அக் கொள்கையின் வேர் ஆங் காங்குக் காணப்படுவதைத் தெளிவாக விளக்கும் நூல் இது.

"கல்லாடன்"

உறுப்பினர் பார்வைக்கு!

அலுவலகத்திற்கு முகவரி மாற்றங் கருதியோ, வேறு தொடர்பிலோ மடல் எழுதுவார், தம் உறுப்பினர் எண்ணை மறவாது குறிப்பிட வேண்டுகிறோம்.

— அமைச்சர்.

முன்னிதழ்த் தொடர்ச்சி

அமெரிக்காவில்

காதல்புரி முறையும் மணவாழ்க்கையும்.

மண வாழ்வில் மறைத் தொழுகல் என்ற பேச்சே பெருந் தவறுகும். வெறும் பருவத் துடிப்பையும் தொடக்க நிலை வேட்கையையும் ஒதுக்கி ஒருவரை ஒருவர் உண்மையாகப் புரிந்து கொள்ள முயன்றால் இம்முறை நலம் பயக்கக்கூடும்.

ஒரு நிலையில் சிறக்க விளங்குவோர் எல்லா நிலையிலும் அவ்வாறிருத்தல் அரிதே. ஆதலின் எல்லா நிலையிலும் அவரவர் இயல்பைத் தெள்ளிதின் உணர்ந்து, குடும்பச் சூழலையும் ஆய்ந்து தெரிவதே நலம் பயக்கும்.

தேர்வு சரியானதாக அமையாவிட்டால், நோயாளியோ மனவுறுதியற்றவரோ வந்து வாய்த்து விடலாம். பின்னர் வாழ்வெல்லாம் பகையோ டுடனுறைவது போலத்தான். (இவ்விடத்து "உடம்பாடி லாதவர் வாழ்க்கை, குடங்கருள் பாம்போ டுடனுறைந் தற்று" என்ற திருக்குறள் நினைக்கற் பாலது.) நல்ல துணை கிடைத்துவிட்டாலோ, மகிழ்வும் இன்பமும், நன்மகப்பேறும் வாழ்விலுயர்வும் பெறலாம்.

இனி, எத்தகு மணமாயினும் இன்பும் துன்பும் மாறி மாறி வரவே செய்யும். சிலகால் பேருவகைக்கும் சில பொழுது பெருந் துன்பத்துக்கும் அங்கு இடமுண்டு. நன்மையும் தீமையும் கலந்ததுதான் வாழ்க்கை. பண நெருக்கடிகள் எண்ணத்தை உயர்த்தவும் கூடும்; தாழ்த்தவும் கூடும். வறுமையும் பிள்ளை பிறப்பும், வேலை போதலும் சில சமயம் மிக்க நெருக்கத்தை ஏற்படுத்தலும் உண்டு; பிளவை ஏற்படுத்திவிட லும் உண்டு.

மகிழ் தரு மணம் என்றும் மகிழ்தரா மணம் என்றும் கோடிட்டுப் பிரித்தல் இயலாது. மாந்தர் எஞ்ஞான்றும் ஒரே உளநிலையில் இரா ரன்றே! மிகச்சிறந்த மண வாழ்விலும் மன வேறுபாடுகள் நிகழும் காலங்கள் உண்டு. சற்றும் பொருந்தா மணம் எனக் கருதப்படுவதிலும் மகிழ்வு முகிழ்க்கும் வேளையும் உண்டு.

குடும்பம் என்பது மாந்தனின் தலைசிறந்த ஏற்பாடாகும். வழி வழி வந்த குடும்பப் பண்புகளே நம்மில் ஒவ்வொருவரை

யும் உருவாக்குகின்றன. நம் இயல்பெல்லாம் நம் முந்தையர்பா விருந்து நம்பால் அமைந்து நம் பிறங்கடைகட்கும் இனிச் சென்று வாய்ப்பனவே. இக்குடும்பப் பண்புகட்கும், மணவாழ் வுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

நாம் மணவாழ்வில் இரண்டு ''பொருள்''களைத் தேடுகின் றோம். ஒன்று இளமையில் நாம் குடும்பத்தில் துய்த்த இன்ப துன்பங்களை மணவாழ்விலும் பெற விழைதல். மற்றது குடும்ப வாழ்வில் துய்க்காது விட்டு விட்டவற்றை மணவாழ்வில் துய்க்க விழைதல்.

புகழும் மதிப்பும் வாய்ந்த தந்தையைக் கொண்ட பெண், தன் கணவனும் அது போலிருக்க விரும்புகின்றாள். ஆனால் புகழும் மதிப்பும் தரும் பொது வாழ்வில் ஈடுபட்டதாலேயே தன் னிடம் அன்புகாட்ட நேரமில்லாது தந்தை இருந்ததுபோல் கணவனும் இருந்துவிடக் கூடாது எனவும் விரும்புகின்றாள்.

தாயால் மிகப் பேணி வளர்க்கப் பெற்ற இளைஞன் அதே பேணுதலையும அன்பையும் மனையாளிடம் எதிர்பார்க்கின்றான். அதே போதில் தாய் அளவுமீறிய அன்பால் தன்னிடம் காட்டத் தவறிய கெடுபிடியை மனைவி தன்பால் காட்டித் தன் வழியைச் செம்மைப் படுத்த வேண்டும் என்று விழைகின்றான். ஆனால் இந்நிலைகளையெல்லாம் கடந்தவரே மண வாழ்வில் வெற்றிபெற வியலும். மண வாழ்விலும் சிக்கல் உண்டு. ஒன்று பெறின் மற்றொன்றை இழக்கவும் நேரிடும். மண வாழ்வில் மகிழ்வும் ஒருமைப்பாடும் கருதிச் சில உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. எடுத்துக் காட்டாக, வீட்டில் மகப்பேறு நேர்வதால் மற்றைப் பயன் கருதி ஒதுக்கிய பொருள் இதற்குச் செலவாகிவிடுகின்றது. தாய்க்கு ஓய்வு குறைந்து உழைப்பு மிகுகின்றது

ஆடவர் பொது வாழ்வில் ஈடுபட்டாலோ குடும்பப்பற்றுக் குறைய நேர்கின்றது. குடும்பத்தில் முழுதும் ஈடுபட்டுவிட் டாலோ தொண்டு வாழ்வின் இன்பமும் வெளியுலக மதிப்பும் குறைகின்றன. ஒன்றிருந்தால் மற்றொன்றில்லை.

சிக்கலும் பூசலும் வாழ்வில் நீக்கமுடியாதன. வாழ்வில் வெற்றியும் உண்டு; ஏமாற்றமும் உண்டு. வாழ்க்கையே இன்ப துன்பப்போராட்டம்தானே! அதனின்றும் எவர் தப்புதல்முடியும்? எனினும் நம்மிற் பலர் மணவாழ்க்கையை மட்டும் உலக வியற் கைக்கு அப்பாற்பட்டதாகக் கற்பனை செய்து விடுகின்றோம். ஏற்றத் தாழ்வுகள் நேர்கையில் அவை வாழ்வியல்பே என்பதை

மறந்து வாழ்க்கைத் துணையையோ, மண முறையையோ குறை கூறத் தொடங்கிவிடுகின்றோம்.

குழந்தைகள் மன்னித்து மறந்துவிடும் திறன் பெற்றவை. ஒரு நொடியிற் பூசலிட்டு மறுநொடியில் மறந்து விடும். பெரியவராக ஆக இத்திறன் மங்கிவிடுகின்றது. வளர்ந்து முதிர்ந்தபின் வாழ்வில் இயல்பான நம்பிக்கையை இழந்து போகின்றோம்; விருப்பு வெறுப்பு நிறைந்த மாந்தரே நாம் என்பதையும் மறந்து விடுகின்றோம். காதற்களி வெறியில் மிதந்து நம்முள்ளேயே புதியதொரு தனியுலகைப் படைத்துக் கொள்கின்றோம். நம்மிடம் இல்லாத உயர் பண்புகள் பல நம்பால் வந்துவிட்டதாக எண்ணி நடந்து கொள்கின்றோம்.

எனினும் திருமணப் புதுமை மயக்கம் தீர்ந்ததும் நம் பழைய விருப்பு வெறுப்புகள் நம்மை விட்டு மாறவில்லை என்று கண்டு கொள்கின்றோம். அதனால் மணவாழ்வில் துன்பங்கள் நேர்கின்றன. ஒவ்வொருவரும் தத்தம் குறை நிறைகளைத் தெள்ளிதின் உணர்ந்தொழுகுதல் ஒன்றே மணவாழ்வில் வெற்றி தருவதாகும். நம் துணைவரை நாம் திருத்த முடியாது. நம்மைக்கூட நாம் திருத்திக்கொள்ள முடியாது. அவ்வப்போது தாளிகைகளில் வெளிவருகின்ற ''வாழ்வில் வெற்றி பெறுவது எப்படி?'' ''நல்ல மணமகனைத் தேர்ந்தெடுப்பது எப்படி?'' ''மணவாழ்வில் இனியராக நடந்து கொள்வது எப்படி'' என்ற தலைப்புகளுடைய பரபரப்பூட்டும் கட்டுரைகள் எல்லாம் நடைமுறை அறிவுக்குப் பொருந்தாதவை. யாரும் தம்மியல்பை மாற்றிக்கொள்ளல் முடியாது. அதேபோது, 'மறைத்தொழுகுதற்கும் வெளி நடிப்புக்கும் திருமணம் 'இடமன்று' என்பதை நாம் உணர வேண்டும். நேரிடையாக மனங் கலந்துறவாடி ஒருவர் குறையை ஒருவர் உணர்ந்து ஒருவர்க்கொருவர் துணையாகவும் காப்பாகவும் வாழ்வதே மண வாழ்க்கை.

மணவாழ்க்கை வெற்றிபெற இன்றியமையாத் தேவை இதுவே: ஒவ்வோரிணை துணையும், தம்மினும் பெரிதான ஓரமைப்பைத் தோற்றுவிப்பதில் தங்களை மூழ்கடித்துக் கொள்ளல்வேண்டும். தாங்களல்லர்; தங்களிணைப்பால் தோன்றுகின்ற ஒரு புது விளைவே சிறந்தது என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். தாங்கள் நடந்து கொள்ளும் முறையே வாழ்க்கைக்குப் பாவாகவும், இழையாகவும் அமைபவை என்று அவர்கள் உணரவேண்டும். கூட்டு வாழ்க்கை என்பது தனி விருப்பு வெறுப்புகளைக் கடந்த, தம்மினும் நிலைபேறான அமைப்பு முறை என்பதைப் புரிந்து கொளல் வேண்டும்.

ஒருவர்பால் ஒருவர் அன்பு செலுத்தவும் ஒருவரின் அன்பை மதிக்கவும், வாழ்விலும் தாழ்விலும் ஒருவரோடொருவர் இறுதிவரை ஒன்றி வாழவும் முயல்வதே திருமணத்தை வெற்றியடையச் செய்யும் வழிகளாகும்.

உள்ளத்தாலும், உணர்வாலும் இசைந்திருத்தல் சிறப்பாகுமே யன்றிப் பணப்புழக்க ஈடுபாட்டிலும் விருப்பு வெறுப்புக்களிலும் மாமன் மாமியார் தொடர்பு போன்ற புற நிகழ்ச்சிகளிலும் இசைவு காட்டி நடந்து கொள்வது சிறப்பாகாது. உளப் பிணைப்பில் உறுதியாக இருப்போர் புறச் சிக்கல்களில் தீர்வு காண வெளிப்படையாகப் போரிடின் தவறில்லை.

கணவன் மனைவியரைப் பிணைப்பவை இனிய மெல்லிசையும் குழைவுப் பேச்சும் அல்ல. ஆழ்ந்த உணர்வால் பிணைப்புண்டோரும் ஒரொருகால் பூசலிடல் இயல்பே. தங்கள் வாழ்வில் பூசல் நேர்ந்ததே இல்லை எனப் பெருமை பேசுவோர், திறந்த மனத்தோடு தம் வாழ்வு பற்றி எண்ணிக் கருத்துக்களைத் தத்தமக்குள் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு ஈடுபட்டதில்லை என்பதையே உள்ளூரச் சுட்டிக் காட்டுவோராவார்.

சிரிப்பும் விளையாட்டும் விருந்துமே காதல் அன்று. அது வாழ்வெல்லாம் தொடர்கின்ற அருளோடு கூடிய பல விட்டுக் கொடுத்தல்களை உள்ளடக்கியது.

கதைகளிற் காணப்பெறும் 'கண்டதும் காதல்' சிறப்பன்று. காதல் அதுபோல் தொடங்கவும் பெறும். எனினும் கணவனும் மனைவியும் மண வாழ்வின் பின்னாட்களில் பன் முறை பிழை நேருகின்ற இடத்தும் ஒருவர்பால் ஒருவர் பொறுமை காட்டிப் புன்னகையால் துன்பத்தை வென்று மேலும் மேலும் வாழ்வில் ஈடுபடுகின்ற அன்பு நிலையில்தான் காதலின் உண்மைத் துலக்கத்தை-வளர்ச்சி நிலையைக் காண முடிகின்றது.

காலமெல்லாம் கவலையற்ற இன்ப உலகில் வாழ்தற்கு என அமைத்துக்கொண்ட ஏற்பாடன்று திருமணம். போராட்டமும், சலிப்பும், நோயும், வறுமையும், பண நெருக்கடியும் கவலையும் மணவாழ்வில் இருக்கும். இவற்றின் நடுவிலும் சிதைந்து போகாதிருப்பதாலேயே அது உண்மைக் காதல் என்று கண்டு கொள்ளுகிறோம்.

மண வாழ்வில் எங்காவது கண்காணாத இடத்துக்கு ஓடி விடலாமா என்று கணவனும், கன்னிமாடத்தில் சேர்ந்தோமில்லையே என்று மனைவியும் நினைக்கும் வேளைகள் பல வரும்! இவை எல்லாம் ஒரு புறம் இருப்பினும் வாழ்க்கை முழுதும்

உள்ளும் புறமும் ஒன்றி நடந்து மண இணைப்பை வெற்றி பெறச் செய்வோரும் உண்டு. இவர் போல்வார் உடல் தளர்ந்து வினை குறைந்த முதுமைப் பருவத்திலும் காதல் உள்ளம் சிதையாமல் வாழ்கின்றனர்.

அன்னார் இரவுகளில் குறட்டைவிட்டு நன்கு தூங்குகின்றனர். அருகில் அவள் இருக்கிருள் என்று முதியவரும் அவர் இருக்கிரு்ர் என்று அம்மூதாட்டியும் எண்ணி நிறைவு கொள்வது அவர்தம் முகத்திலே அமைதி பூக்கச் செய்கின்றது. ''எது எனக் கின்பம் நல்கும்? இருக்கின்ருள் என்ப தொன்றே''? என்று பாரதிதாசன் குடும்ப விளக்கு முதியோர் காதலில் வரும் அடியினை ஒப்பு நோக்குக. உண்மையில் இங்குத்தான் காதல் இளமை பெறுகின்றது. இவ்வெண்ணம் அவரை என்றுமே காதலராக வைத்துள்ளது.

அந்தக் காதல்தான் அவரை வாழ்வின் துன்பங்களினின்றும் தங்கள் தவறுகளினின்றும் கரையேற்றிக் கொணர்ந்துள்ளது. இதுவே குடும்பத்தின் வெற்றி; இதுவே மண வாழ்க்கை.

○ ● ○

இத்தகைய மண வாழ்க்கை அமெரிக்காவில் எத்தனைப் பெயருக்கு அமைகின்றது? அமையாமலென்ன? அமையத்தான் செய்கின்றது.

அமெரிக்கத் திருமணத்தில் குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. புதிய புதிய நுணுக்கங்கள் வாழ்வில் எழ எழ அவற்ருல் மண வாழ்வும் தாக்குறுகின்றது. தவறுகள் நேர்கின்றன. என்ருலும் முழுத்தோல்வி என்று எதைத்தான் கூறிவிடமுடியும்?

எல்லா மணங்களும் எல்லா வேளைகளிலும் வெற்றியாக இரா. ஒரு குறிப்பிட்ட வேளையில் பார்த்தால் எழுபத்தைந்து விழுக்காடு மணங்களை வெற்றியானவை என்றழைக்கத்தான் வேண்டும். அப்படிப் பார்க்கையில்கூட மூன்று கோடி இணைதுணைகள், அஃதாவது ஆறு கோடி மக்கள் அமெரிக்காவில் வாக வாழ்வதாகக் கொள்ளலாம். *

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வடசொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

கேள்விச் செல்வம்

(இப்பகுதியில் திரவிட மொழிப் பெரும் புலவர், உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் விடையளிக்கின்றார். இலக்கணம், இலக்கியம், மொழி, நாடு, வரலாறு இவைபற்றிய உங்கள் ஐயங்களை இப் பகுதிக்கு எழுதியனுப்புங்கள்! கேள்விகளைக்,

''கேள்விச் செல்வம்

தென்மொழி, திருப்பாதிரிப்புலியூர்''

என்ற முகவரியிட்டு அனுப்பவும். — ஆசிரியர்)

● தமிழ் ஒலிக் குறியீடுகளில் தேவைப்படுங்கால் வட மொழி யெழுத்துக்களான ஜ், ஹ், ஸ், ஷ் முதலியவற்றையும்; ஆங்கில எழுத்துக்களான J, F, H, G, முதலியவற்றையும், எழுதிக்காட்ட என்ன முறையைக் கையாள வேண்டும்? நம் எழுத்தமைப்பில் ஏதாவது மாற்றம் செய்து கொள்ளலாமா? அவ்வாறுயின், அம்முறையைத் தென்மொழியில் எழுது வீர்களா?

— செ. பாண்டியன், கோவை-2.

○ ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வோர் ஒலித்தொகுதியுண்டு. எல்லா மொழிகட்கும் பொது வான ஒலிகள் ஏறத்தாழ இருபத்தைந்தே. பெருமொழிகளுள் மிகக்குறைந்த ஒலிகளுள்ளவை தமிழும், மிக நிறைந்த ஒலிகளுள்ளது வட மொழியுமாகும். தமிழின் அடிப்படை யொலிகள் முப்பது. வடமொழி யொலிகள் நாற்பத்தெட்டு முதல் ஐம்பத்து மூன்றுவரை பலவாறு சொல்லப் பெறும்.

ஒவ்வொரு பெரு மொழிக்கும் சில சிறப்பொலிகளுள.

மொழிகளெல்லாம் வல்லியல், மெல்லியல் என இருதிறப்படும். அவற்றுள், வல்லியன் மொழிகள் ஏனை மொழிச் சிறப்பொலி களுட் பெரும்பாலனவற்றை ஏற்குந் திறத்தன. மெல்லியன் மொழியோ அத்திறத்ததன்று. தமிழ், மெல்லியன் மொழிகளுள் தலை சிறந்தது. ஆதலால், பிறமொழி வல்லொலிகளை ஏற்காது. மெல்லொலியுடன் வல்லொலியை இணைப்பது, மெல்லிய மல் லாடையுடன் வல்லிய கம்பளியை இணைப்பது போன்றதே. ஆடவர் பெண்டிர் மேனிகள்போல், வல்லியன் மொழிகளும் மெல்லியன் மொழிகளும் என்றும் வேறுபட்டேயிருக்கும். தமி ழில் வல்லொலிகள் கலப்பின் அதன் தன்மை முற்றும் மாறி விடும். அதன்பின் அது தமிழாகாது.

தமிழின் மென்மையை யுணர்ந்தே, கி மு. 6-ஆம் அல்லது 7–ஆம் நூற்ருண்டினரான தொல்காப்பியர் தமிழ்ச் செய்யுட்கு வட சொல்லை வேண்டாது வகுத்தவிடத்தும்,

> ''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.''

என்று (884) வடவெழுத்தை விலக்குவாராயினர்.

இனி, 12-ஆம் நூற்ருண்டில்,

> ''இடையில் நான்கும் ஈற்றி லிரண்டும்
> அல்லா அச்சை வருக்க முதலீறு
> யவ்வாதி நான்மை ளவ்வாகும் ஐயைம்
> பொதுவெழுத் தொழிந்த நாலேழுந் திரியும்'' (146)

என்று வட சொற்கள் பெருவாரியாய்த் தமிழில் வந்து வழங்கு வதற்கு வழி வகுத்த பவணந்தியாரும்,

> ''ஏழாமுயி ரிய்யும் இருவும்ஐ வருக்கத்து
> இடையில் மூன்றும் அவ்வம் முதலும்
> எட்டே யவ்வும் முப்பது சயவும்
> மேலொன்று சடவும் இரண்டு சதவும்
> மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்
> ஆவீ றையும் ஈயீ றிகரமும்'' (147)

> ''ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
> லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்கு
> இய்யும் மொழிமுத லாகிமுன் வருமே.'' (148)

> ''இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
> மவ்வக் குகரமும் நகரக் ககரமும்
> மிசைவரும் ரவ்வழி உவ்வும் ஆம்பிற.'' (149)

எனத் தமிழியற் கொத்தவாறே வடவொலிகளைத் திரிக்க உடன் பட்டார்.

19-ஆம் நூற்ருண்டில் தக்க புலவரும், புரவலரும் இன்மை யால், தமிழ் உரைநடையிலும் செய்யுளிலும் வடசொற்களுடன் வடவெழுத்துகளும் தாராளமாய் வந்து கலந்துவிட்டன. அவற்றையெல்லாம் நிறை தமிழ் வாணரான மறைமலையடிகள் களைந்தெறிந்தார்.

ஒரு தமிழ்ப் பேரறிஞர் ஆய்த வெழுத்தினியல்பைப் பிறழ வுணர்ந்து, அதனைக்கொண்டு ஆரிய வொலிகளையெல்லாம் தமி ழிற் குறிக்க வொண்ணுமென்றும், அதற்காகவே அது தமிழ் நெடுங்கணக்கில் வகுக்கப்பட்டதென்றும் கருதினுர். அஃதாயின் தமிழ் ஒரு வல்லியன் மொழியாயும் அதன் நெடுங்கணக்கு ஆரிய மொழிகளெல்லாம் தோன்றியபின் ஏற்பட்டதாயுமிருத்தல் வேண்டும். தமிழின் தொன்மையும் முன்மையும் மென்மையும் அக்கொள்கைக்கு முற்றும் மாருயுள்ளமை காண்க.

ஆய்தம் என்பது ஒரு வகை நுண்ணிய தகரவொலியே யன்றி வேறன்று. ஆய்தல்—நுண்ணியதாதல்.

> ''ஒய்தல் **ஆய்தல்** நிழத்தல் சாஅய்
> ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்''

என்று தொல்காப்பியம் (813) கூறுதல் காண்க.

ஆய்த வொலியைப் பிறழவுணர்ந்தும், ஒலி வடிவிற்கும் வரிவடிவிற்கும் இயைபின்மையை அறியாதும், ஆய்த வரிவடி வைத் துணைக்கொண்டு F, Z போன்ற ஆங்கில வொலிகளைச் சிலர் தமிழிற் குறித்து வருகின்றனர். எழுத்தென்பது உண்மை யில் ஒலியேயன்றி வரியன்று. தமிழ் வரிவடிவால் ஓர் அயலொ லியை இடர்ப்பட்டுக் குறிக்க முயல்வதினும், அவ்வொலிக்குரிய அயன்மொழி வரிவடிவையே தழுவுவது நன்ருயிருக்குமே! ஓர் ஒலியைத் தழுவும்போது ஏன் அதன் வரியைத் தழுவுதல் கூடாது? ஆங்கிலம் உலக மொழிகளெல்லாவற்றினின்றும் சொற்களைக் கடன் கொண்டிருந்தும், அவற்றையெல்லாம் தன் னெலியாலும் தன் வரியாலுமன்ருே இன்றும் குறித்து வரு கின்றது!

மொழியென்பது ஒலித் தொகுதியேயன்றி வரித் தொகுதி யன்று. வரி மாறலாம், ஒலி மாருது. ஒலி மாறின் மொழி மாறி விடும். செவிப்புலனுய வொலியைக் கட்புலனுக்குங் குறியே வரியாம்.

முதலில் வட சொற்களையும் பின்பு வட வெழுத்துகளையும் ஒவ்வொன்ருகப் புகுத்துவதையே, கொடுந் தமிழ் மொழிகளை

ஆரிய வண்ணமான திரவிடமாக்கும் வழியாக, தொன்றுதொட்டு வட மொழியாளர் கையாண்டு வந்திருக்கின்றனர். சேர நாட்டுச் செந்தமிழ் சோழ பாண்டி நாட்டொடு தொடர்பறுக் கொடுந் தமிழாகிப் பின்பு, ஆரியச் சேர்க்கையால் மலையாளம் அல்லது கேரளம்என்னும் திரவிட மொழியாகத் திரிந்துள்ளமை காண்க. கொடுந்தமிழ்களை முன்னர் ஆரிய வண்ணமாக்கியது போன்றே, இன்று செந்தமிழையும் ஆக்க முயன்று வருகின்றனர். அதனொடு ஆங்கில எழுத்துகளும் சொற்களும் சேரின், தமிழ் விரைந்து அழிந்து போவது திண்ணம். அரசன், நகைச்சுவை, பொத்தகம் அல்லது சுவடி, பூ, பறவை என்னும் தென் சொற்களிருக்க, அவற்றிற்கு மாருக ஏன் ராஜன், ஹாஸ்ய ரசம், புஸ்தகம், புஷ்பம், பக்ஷி என்னும் வட சொற்களையும வட சொல் வடிவங்களையும் தழுவ வேண்டும்?

இயற்கை யொலிகளும் செயற்கை யொலிகளும் மிகுந்து நெடுங்கணக்கு நீண்ட வடமொழியுள்ளும், எ, ஒ என்ற உயிர்க் குறில்களும், ள, ழ, ற, ன என்னும் மெய்யெழுத்துகளும் ஆகிய தமிழொலிகளும், F, Z என்னும் ஆங்கிலவொலிகளும், சில அரபியொலிகளுமில்லை. ஆகவே, ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்பொலிகளுள. அவற்றையெல்லாம் தழுவுவது ஆங்கில மாகிய உலக மொழி ஒன்றற்கே தகும். எல்லா மொழிகளும் தழுவ வேண்டியதில்லை; தழுவின், எல்லாம் தத்தம் தனித் தன்மையிழந்து ஒன்ருகிவிடும்.

ஒரு மொழியின் வளம் அல்லது வலிமை அதன் சொற்களாலாயது. பொருள்தரும் சொல்லிற்கு உறுப்பாகும் ஒலியே எழுத்தாம். அது தன்னளவிற் பொருள் தராது. அதனுலாகும் சொல்லே பொருள் தருவது. குமரிக் கண்டத் தமிழர், முப்பதொலிகளைக் கொண்டே, அக்காலத்து மாந்தருள்ளத்திலெழுந்து கருத்துகளைக் குறிக்குஞ் சொற்களையும், பிற்காலத்திலெழுங் கருத்துகளைக் குறித்தற்கேற்ற சொற்கருவிகளையும், அமைத்துச் சென்றனர். ஆதலால், ஒலிக்குறைவினல் தமிழிற்கு ஏதும் மொழிக்குறைவில்லை. ஆயிரங் காய்ச்சியான தென்னைக்கு ஓலைக் குறைவினுல் ஒரு குறைவுமில்லை. அழகிய சொல்வள மிக்க தமிழுக்கு ஒலிக் குறைவினுல் ஒரு குறைவுமில்லை. ஒவ்வொன்றும் அதனதன் இயல்பில் நின்றே வளர்தல் வேண்டும். ஆதலால், தமிழுக்கு எவ்வகையிலும் எழுத்து மாற்றம் தேவையின்றென அறைக. அது தமிழுக்கு இறுதி விளைக்குமென்றே மறைமலையடிகளும் விடுத்தனர். அதுவே உறுதியென்று கடைப்பிடிக்க. ○

மலே நாட்டில் தென்மொழி.

தென்மொழிக்கு உறுப்பினராகும் வழி கேட்டு மலேயா வினின்றும் அதைச் சூழ்ந்த பகுதிகளினின்றும் அன்பர் பலர் நமக்கு அடிக்கடி மடல்கள் விடுத்த வண்ண மிருக்கின்றனர்.

ஈராண்டுகட்கு முன்பு நடந்த தென்மொழிக்கு மலே நாட்டில் திரு. இராசேந்திரன் (DRAVIDA NADU NEWS AGENCIES) என்பார் முகவராக விருந்தார். அவர் தாம் தொடக்க நிலையிற் காட்டிய பேரன்பாலும் பெருமதிப்பாலும் தமிழுணர்வாலும் அவரை நம்பிக் கிடைப்பரும் பெருந்தொகையைப் பறிகொடுத் தோம். அவர் போலியராலேயே தென்மொழி இடைநின்றது. உண்மைத் தமிழ்த் தொண்டுக்கு விலையாக வரப்பெறும் சிறு தொகைகளை இடையிருந்து விழுங்கி எந்தமிழன்னைக்குக் கேடு செய்யும் அன்னார்க்குப் பன் முறை மடல்கள் எழுதியும் ஒரு விடையும் ஒரு காசும் இதுகாறும் விடுக்கவில்லை.

இப்புன்மைப் போலியரிடை உண்மைத் தமிழ்ப் பற்றும் உலைவிலா நல்லூக்கமும் கொண்ட உயர்திரு. சா.சி. சுப்பையா (பாவாணர் மன்றச் செயலாளர்) அவர்கள் தாமே முன்னின்று எவ்வகை ஊதியமுங் கருதாது தென்மொழிக்கு உதவ முன்வந் துள்ளனர். அவர், தமிழ் பரப்பும் சீரிய தொண்டுள்ளத்தோடு மலே நாட்டின் தென்மொழி விற்பனையை மேற்கொண்டுள்ளார்.



கடல் கடந்தும் தமிழ்த் திறந் திரியா அன்னார் தம் செயல் திறத்தைப் பாராட்டத் தமிழுல கம் கடப்பாடுடையது. மலேநாட் டின் முழுமைக்கும் அவரே முகவராதலின் இனி அங்கிருந்து இதழ் வேண்டுவார் அவருடன் தொடர்பு கொள்க.

S. S. Suppiah,

A 47. Kuala Kangsar Road
Ipoh, Perak.
MALAYA.

வேறென்ன சொல்வது?

● சாதியின் பெயரால் தேர்தலில்'வாக்கு'கேட்பது சரியில்லை.
— திரு சி. சுப்பிரமணியம்

○ தன்னை மறந்த பேச்சு!

● தமிழ் மொழிக்கு என்றைக்கும் தீங்கு வராது!
— திரு காமராசர்

○ சென்னைத் தமிழுக்கா?

● ஊர் காவலர் வீட்டிலேயே வெறிநீர் (சாராயம்) காய்ச்சப்பட்டது. — செய்தி

○ காவலர் நிலையத்திலேயே காய்ச்சும் நாள் வரும் !

● புதிய 'சுயமரியாதை' இயக்கம் திருச்சியில் தோற்றுவிக்கப்பட்டது. — செய்தி

○ "தன்மானம்" போயிற்று?

● நடைமுறைக்கால அளவில் ஒரு மணியைக் கூட்டி விடுவதால் எல்லாரும்விரைவில்தூங்கி விடுவர். அதனுல் மின்னுற்றல் செலவு குறையும். — செய்தி

○ கோழி கூவிப் பொழுது விடியுமா?

● கோவா மக்களின் விருப்பப்படியே அரசு நடக்கும்........ அவர்கள் மொழியே வழக்கிலிருக்கும். — திரு. நேரு

○ இது முன்னுரை...!

● பிரிவினை பேச உரிமை தந்தால் இந்தி எதிர்ப்பை ஒத்தி வைப்பேன்.-திரு.அண்ணுதுரை

○ உரிமை தரப்படுவதா?

● இந்தியப்பெரும் சூதாட்டக் கூட்டம்! பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் ஈடுபட்டுள்ளனர்.
— செய்தி

○ அரசியல் ஒத்திகையாக இருக்கலாம்...!

● எவரெஃச்ட் உச்சியில் அமெரிக்கக் கொடி இன்னமும் பறக்கிறது — செய்தி

○ இனி தில்லியிலும் பறக்கலாம்!

● இந்தி பொது மொழியாஞல் தமிழ் வளம் இன்னும் சிதைவுற்று நசித்துவிடும் என்று கூறுவது தவறு. — நடுவண் உள்துறை அமைச்சர்.

○ அழிந்துவிடும் என்பதே சரி!

● தனியார் துறை நிறுவனங்களில் ஊழல்; அரசினரே தணிக்கையாளரை ஏற்படுத்துவர். — செய்தி

○ தான் திருடி; பிறனை நம்பாள்!

● தென்னிந்திய இந்தி மொழி பரப்பு அவையை மூடிவிட்டு இராசாசி இந்தி எதிர்ப்பில் இறங்கட்டும் ..! — குன்றக்குடி அடிகளார்

○ ...நாம் வேடிக்கை பார்க்கலாம்......!

● இந்தியாவின் கொள்கைக்கு வெளிநாடுகளில் பாராட்டு. — செய்தி

○ ஊர் இரண்டு பட்டால்...!

● பீகார் பேராயக் (Congress) கட்சி அமைப்பில் ஒரே ஊழல்; உட்பூசல்; கட்சி கலைக்கப்பட்டது. — செய்தி

○ முதல் வழக்கும் முடிவும்...!

● எல்லாக் கட்சிகளின் கதம்பம் நான்..! — கிருபாளினி

○ என் பேச்சும் செயலும் அப்படியே!

● இப்போதைய ஆட்சிமொழிச் சட்டத்தை எதிர்ப்பது தற்கொலைக்கு ஒப்பாகும். — திரு. பக்தவச்சலம்

○ ஏற்பது தூக்குத் தண்டத்திற்கு ஒப்பாகாதா?

● இந்தி ஆட்சி மொழிச் சட்டத்தைப் பொறுத்தவரை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் எனக்குத் துணை செய்த தென்னாட்டு முதலமைச்சர்களுக்கு நன்றி. — இலால்பகதூர் சாத்திரி

○ இதையும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவுமே கூறுகிறேன்.

● பேராயக் கட்சியின் வலுக் குறைவது சீனப் படையெடுப்பைவிடப் பேரிடர் தரும்—நேரு

○ அதனால் தான் இந்தித் திணிப்பு வேண்டாம்என்கிறோம்

● குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயலாற்றியதில் தமிழகத்துக்கு முதல் பரிசு! — செய்தி

○ உணர்வு, மானம் இவற்றைக் கட்டுப்பாடு செய்து கொள்வதில் தமிழர் தலையானவர்...!

● எதிர்க் கட்சிகள் அரசியல் ஊதியம் கருதித்தான் இந்தியை எதிர்க்கின்றன! — காமராசர்

○ வரவேற்பது எதைக் கருதியோ?

● பெயர்ப் பலகைகளில் உள்ள ஆங்கில விளம்பரங்கள் அழிக்கப்படும்! — ம. பொ. சி.

○ உட்பகை தெரியாமல் வெளிப்பகைக்கு வேலியா?

தமிழர் சித்த மருத்துவ முறைப்படி நாயுருவி, கையாந்தகரை முதலிய எண்ணிறந்த வேர்களைக் கொண்டு செய்ததும், உயிர்ச்சாரம் (குளோரோபில்) நிறைந்ததுமான,

சித்தர் மூலிகைப் பற்பொடி

இதனை நாளும் பயன் படுத்திவரின், வாயில் ஏற்படும் தீ நாற்றத்தை அறவே ஒழிப்பதுடன், பல வகையான பல் நோய்களையும் போக்கி, ஈறுகளையும் உறுதிப் படுத்தும்.

ஒருமுறை வாங்கிப் பயன்படுத்திப் பாருங்கள்.

POCKET : 10 காசு

TIN : 50 காசு

செய்பவரும், விற்பனையாளரும்.

G. கேசவன்

SITHA REMIDIES.

மாரியம்மன் கோயில் (அஞ்சல்)

தஞ்சாவூர்.